# காணி சீர்திருத்த ஆணைக்குழு

## ஆண்டறிக்கை

## 2013

2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தகவல்கள்

**நிறுவனம்** காணி சீர்திருத்த ஆணைக்குழு

**அமைச்சு** சனாதிபதி செயலகம்

**முகவரி** சீ, 82 ஹெக்றர் கொப்பேகடுவ மாவத்தை,

கொழும்பு – 07

**மின்னஞ்சல் முகவரி** ircadmin@slatrcy.lk

**தொலைபேசி இலக்கங்கள்** 011-2694251/0112-672273

**தொலைநகல் (பெக்ஸ்) இலக்கங்கள்** 011-2693438/698849

**கணக்காய்வாளர்கள்** கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

பத்தரமுல்லை

**வங்கியாளர்கள்:** இலங்கை வங்கி,

தாபனக் கிளை,

கோட்டை.


தேசிய சேமிப்பு வங்கி,

பொரளை.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி,

கொள்ளுப்பிட்டி.

## தலைவர் அவர்களின் செய்தி



தேசிய அரச சபையின் 01 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் படி காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவை ஸ்தாபித்து ஏறத்தாழ நான்கு தசாப்த காலம் முடிவடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் 2013 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆணைக்குழுவின் ஸ்தாபகரான காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பாகடுவ அவர்கள் எதிர் பார்த்த வாறு சிறிய எண்ணிக்கையினரிடத்தில் இலங்கையின் காணிகள் உரித்தாகியிருந்ததுடன், அதன் உண்மையான உரிமையாளர்களான இந் நாட்டு மக்களுக்கிடையில் நியாயாமானதாகவும் பயனுள்ளதாகவும், நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்த கூடியதாகவும் வழங்குவதில் பல்வேறு செய்முறை பிரச்சினைகள் காரணமாக கஷ்டமானதும் சிக்கலானதுமான பணியாக இருந்தது. மேன்மைதங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மேற்பார்வைக்குட்படுத்திய பின்னர் குறித்த நடவடிக்கைகள் முறையாகவும் துரிதமாகவும் நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவிற்கு முடிந்தது.

மகிந்த சிந்தனை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டு மக்களின் பெறுமதி வாய்ந்த வளமான காணிகளை உரியவாறு பயன்கொள்வதற்கு நாட்டு மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், இன்று தேசிய அபிவிருத்தியில் நேரடியான பங்களிப்பை ஆணைக்குழு வழங்குகின்றது.

**2013** ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் நோக்கங்களில் 80% ஐ அண்மித்து கொள்வதற்கு முடிந்துள்ளதுடன், ஏறத்தாழ 3500 இற்கு அண்மித்த ரன்பிம உறுதிகளை அளித்தல், ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகங்களில் நிறைவேற்றிய அலுவல்களுக்கு அப்பாற்சென்று 04 மாவட்டங்களில் வருமானம் உற்பத்தி செய்யும் கருத்திட்டங்களை ஆரம்பித்தல், ஏனைய மாவட்டங்களில் புதிய கருத்திட்டங்களுக்கான வாய்ப்புகளை இனம்காணுதல், அலுவலர்களின் தொழில் கட்டுக்காப்பு மற்றும் நலன்புரி சேவைகளை அதிகரிக்கும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஆணைக்குழுவின் காணி பதிவேடை சனாதிபதி செயலாளரின் ஆலோசனைப்படி

ஆணைக்குழுவின் 41 ஆவது வருட பூர்தியும், காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பாகடுவ அவர்களின் 30 ஆவது ஞாபகார்த்தமும் அதற்கு சமமாக ரன்பிம உறுதி அளிப்பு வழங்கும் வைபவமும் இவ் வருடத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது.

மேன்மைதங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள், சனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க அவர்கள், அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கோதாபய ராஜபக்ஷ அவர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் மற்றும் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக நன்கு அறிந்துள்ள சிரேஷ்ட அமைச்சர் கௌரவ டி.யு.குணசேகர அவர்கள் ஆகியோர் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக காட்டுகின்ற ஊக்கமும் ஒத்துழைப்பும் ஆணைக்குழு இதுவரை எய்துக்கொண்ட வெற்றிகளுக்கு காரணமென குறிப்பிடுகின்றேன். அதற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன், ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பதவியணியினறுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா
தலைவர்
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு



## நிறைவேற்றுப்பணிப்பாளரின் செய்தி

1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2013 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் தொடர்பான செய்தியினை வெளியிட கிடைத்தமையிட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் என்ற வகையில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஹெக்டர் கொப்பாகடுவ அவர்களுடன் இணைந்து 1972 ஆம் ஆண்டில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவை தேசத்திற்கு கொடையாக வழங்குவதற்கு பங்களிப்பு வழங்கிய மாபெரும் மனிதர்களில், மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களும் இன்று அதன் மேற்பார்வையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்கின்ற முன்னோடியாக உள்ளார்.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னரான ஆண்டுகளையும் பார்க்க ஆணைக்குழுவானது, இந்நாட்டின் பொருளாதார அமைப்பில் முக்கியமான நிறுவனமாக செயற்படுதல் நம் அனைவரது மகிழ்ச்சிக்கு காரணமாகும்.

ஆணைக்குழுவிற்குரிய காணிகளை பல்வேறு அபிவிருத்தி பணிகளின் பொருட்டும், கருத்திட்டங்களின் பொருட்டும் பயன்படுத்தும் போது, கௌரவ தலைவர் அவர்களுக்கு நேரடியான வழிகாட்டல்களை வழங்கும் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள் தமது வரலாற்று கடமைப்பொறுப்புகளை உயர் மட்டத்தில் நிறைவேற்றுதலானது நாம் இதுவரை பெற்ற வெற்றியின் அடிப்படையாகும்.

மகிந்த சிந்தனை கொள்கை பிரகாரம் இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியத்தின் பால் கொண்டுச்செல்லும் பயணத்தில், ஆணைக்குழுவிற்குரியதான காணிகளை முறையாகவும், பயனுள்ளதாகவும் பயன்படுத்திக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பெரும்பாலான நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேறியது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன். மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள், சனாதிபதி செயலாளர் உள்ளிட்ட ………. அரசியல் தலைமைத்துவம் கௌரவ தலைவர் அவர்களின் அர்ப்பணிப்பு, தைரியம் என்பவற்றின் காரணமாக ஆணைக்குழுவின் பணிகளை இவ்வாண்டில் சிறந்த மட்டத்திற்கு கொண்டு வர முடிந்ததென நினைக்கின்றேன்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் சபை உள்ளிட்ட எல்லா பதவியணியினறுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டத்தரணி

ஹரிகுப்தா ரோஹனதீர,

நிறைவேற்றுப்பணிப்பாளர்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

# அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு, 1972 ஆம் ஆண்டு வரை நீண்டுச் செல்லும் வரலாற்றைக் கொண்டுள்ளது.

ஆணைக்குழுவானது, ஏறத்தாழ 35 வருடங்களாக காணி சீர்திருத்த சட்டத்தினால் அளிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மற்றும் அராங்கத்தால் அவ்வப்போது மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் ஆகியவற்றுக்கமைவாக அதன் பணிகளை வழிநடாத்தியது. மேலும் காணி உரிமையாளர்களின் சட்ட ரீதியான பிணைப்புகளை வழங்குதல், அவர்களுக்கு நஷ்டஈடு செலுத்துதல், பராதீனபட்டுத்திய காணிகளை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல், ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல், காணிகளை பாதுகாத்தல், பதவியணியினரை பயிற்றுவித்தல் மற்றும் நலனோம்பல் ஆகியன இவற்றுள் முக்கியமான பணிகளாகும்.

2005 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலின் பின்னர் அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனை கொள்கைகளுக்கமைவாக, ஒரு இலட்சம் காணித்துண்டுகளை பொதுமக்களிடம் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதனை இலக்காகக்கொண்டு ஆணைக்குழுவின் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் மேற்படி பணியினுள் நிறுவனத்தின் ஊழியர்களது சம்பளம் அதிகரிக்கப்பட்டதுடன், தொழில் கட்டுக்காப்பை ஏற்படுத்துவதன் மூலம் புத்துயிரூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்பட்டது.

**2013 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்படும் அம்சங்கள் விசேடமாக இனம்காணப்பட்டன.**

i. ஆணைக்குழுவிற்கு சொந்தமான இனம்காணப்படாத காணிகளை இனம்காணல்.
ii. பயனற்ற முதலீடுகளுக்கு கையளிக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.
iii. 2002 – 2004 காலப்பகுதியில் சட்டத்திற்கமைவுறாத வகையில் வழங்கிய காணிகள் தொடர்பில் அமைச்சரவை தீர்மானத்தின் படி நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறித்த காணிகளை மீள சுவீகரித்து பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.
iv. ஒரு இலட்சம் காணித்துண்டுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்குரியதான பகிர்ந்தளிக்க முடியுமான காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் இதுவரை பகிர்ந்தளித்திருந்த காணிகளில் வதிவிடலாளர்களை ஒழுங்குப்படுத்தி தற்போது நடைமுறைப்படுகின்ற நிகழச்சித்திட்டத்திற்கு புது வடிவம் கொடுத்து தேசிய பணியாக ரன்பிம உறுதி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

v. வருமானத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்:-

(அ) ரணவிரு சேவை அதிகாரசபை

(ஆ) அரசினால் சுவிகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்துதல்

(இ) அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான வருமானங்களை பெறுதல்

(ஈ) குத்தகை அடிப்படையில் ஆட்களுக்கு கையளிக்கப்பட்ட காணிகளில் இதுவரை அறவிட முடியாதுள்ள குத்தகை பணத்தை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

(உ) கருங்கற்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் அதற்கான வருமானங்களை சேகரித்தல்.

(ஊ) இரத்தினக்கல் காணிகளுக்கு உரியதாக புதிய ஒழுங்கு விதிகளை விதித்து வருமானம் சேகரித்தல்

(எ) சிலிக்கா, டொலமைட், மணல் போன்ற கனிமப்பொருட்கள் உள்ள காணிகளில் இருந்து வருமானம் பெறுதல்.

நிறுவனத்தின் மேற்படி கடமைப்பொறுப்புகள் தொடர்பாக பதவியணியை அறிவுறுத்தல் மற்றும் அலுவலர்களின் கருத்துக்கள், பிரேரணைகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்காக, ஒவ்வொரு பணியின் பொருட்டும் நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களையும் கொண்டமைந்த குழுக்களை நியமித்தல், செயலமர்வுகளை நடாத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று பணிற்றொகுதிகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனையின் படியும் அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்புடையதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கும் துரிதகதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் காலோசிதமான நடவடிக்கையாக சனாதிபதியின் செயலாளருடன் எப்பொழுதும் கூட்டங்களை நடாத்தி தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் பின்னர் அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி பின்னாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பொது மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவர்களை அழைத்து நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் நேரடி கலந்துரையாடல்களை நடாத்தி உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பயனுள்ள முதலீடுகளை இனம்கண்டு அவைகளின் பொருட்டு காணிகளை வழங்குவதற்கு கௌரவ அமைச்சர் அவர்களின் அறிவுரைகளுக்கமைவாக நிபுணத்துவ அறிவுடைய ஆலோசனை குழுவின் பரிந்துரைகளின் படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி மற்றும் சனாதிபதி செயலாளர் ஆகியோரின் ஆலோசனையும் வழிகாட்டலுக்கும் அமைவாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் சுவிகரிக்கப்பட்ட பத்து இலட்சம் ஏக்கர் அளவிலான காணிகளுள் ஆணைக்குழுவிற்குறித்தாகியுள்ள காணிகள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் நிறுவனத்திடமிருந்து இல்லாது போன வளங்களை கொண்டு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியிலும் பங்களிப்புகளை மேற்கொள்ளப்பட்டது.

# காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

**நோக்குகை**

காணிச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் பராதீனப்படுத்திய காணிகள், பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்கள் மற்றும் தேசத்தின் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக செயற்படுதல்

# காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

## செயற்பணி

காணிச்சீர்திருத்த தொழிற்பாடு மற்றும் உச்ச எல்லைக்கு அதிகமான காணிகள் ஆகியவற்றை நாட்டின் நலன்கருதி அவற்றின் உற்பத்தி திறனை அதிகரித்தும், பௌதீக வளங்களின் உரிமையை பாதுகாத்து நிர்வகித்தும், காணிகளின் உச்ச எல்லையை காலத்திற்கேற்றவாறு நடைமுறைப்-படுத்தியும், சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டஈடு செலுத்தி பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்தும், எதிர்கால சந்ததியினரின் மேம்பாட்டின் பொருட்டு பயன்படுத்த முடியுமான காணி ஒதுக்கமொன்றை பேணிக்கொண்டும் தேசிய அபிவிருத்தியில் முனைப்பாக பங்களிப்புச் செய்தல்.

## நோக்கங்கள்:

01. காணிகளைப் பற்றிய தகவல்களை திரட்டுதல்

i. வெளிப்படுத்திய போதும் இனம் காணப்படாத காணிகளை இனம்காணுதல்.

ii. பொது மக்களிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் படி காணிச்சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை இனம்காணுதல்.

iii. கையளிக்கப்படினும் அச் செயற்பாடு நிறைவேறாதிருப்பின் அக் காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

02. ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக,

i. வெளியிடப்பட்ட நியதிச்சட்ட முறையிலான தீர்மானங்கள் மற்றும் சட்டமுறையிலான பிணைப்புகள் ஆகியவற்றை விடுவித்தல்.

ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

iii. ஏற்கப்பட்ட காணிகளுக்காக நஷ்டஈடு வழங்குதல்.

iv. வெளிப்படுத்திய எனினும் வெளிப்படாதோரின் காணிகளை மீள வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்

03. நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை முறையிலான தீர்மானங்களையும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஏற்கப்பட்ட காணிகளையும் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

04. ஆணைக்குழுவிற்குரியதாக உள்ள காணிகளில் கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல் மற்றும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டில் பங்களித்தல்.

## தொழிற்பாடுகள்:

* காணிச்சீர்திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆளொருவர் வைத்திருக்க முடியுமான ஆகக் கூடிய காணி அளவினை சட்ட முறைப்படுத்தல்.

* உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை அடையாளம் கண்டு ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொள்ளல்.

* சட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் ஏற்பாடுகளின் படி சட்டமுறையிலான பிணைப்புகளிலிருந்து விடுவித்தல்.

* ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக்கொண்ட காணிகளின் பொருட்டு வெளிப்படுத்துநர்களுக்கு நஷ்டஈடு செலுத்துதல்.

* பாராதீனப்படுத்தியிருப்பினும் சட்டத்திற்குப் புறம்பான காணிகளை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

* காணிகள் தொடர்பான பதிவேடுகளை நாளது வரைப்படுத்தல் மற்றும் வெளிக்கள துறையை தொடர்பு கொண்டு காணிகள் பற்றிய தகவல்களை சேகரித்தல்.

   i. வெளிப்படுத்தியிருப்பினும் அடையாளம் காணப்படாத காணிகள்.
   ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட வெளிப்படுத்தப்படாத காணிகள்.
   iii. கையளிக்கப்பட்டிருப்பினும் பயனுள்ள முறையில் முதலீடு செய்யப்படாத காணிகள்

❋ நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

1. முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
11. கமத்தொழில் சார்ந்த கருத்திட்டங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கு தேவையான காணிகளை வழங்குதல்.
iii. கைத்தொழில்களுக்கான காணிகளை வழங்குதல்.

* நாட்டின் சமூக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

i. காணிகள் இல்லாத மக்களுக்கு வீடமைப்பு நோக்கத்திற்காக காணி வழங்குதல்.
ii. அரச கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்படும் விஷேட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
iii. வழிப்பாட்டிடங்களுக்கு காணி வழங்குதல்.
iv. மக்களுக்காக பொது அலுவலகங்களின் பொருட்டு காணி வழங்குதல்
v. அரச நிறுவனங்களுக்கு காணி வழங்குதல்.

* வருமானம் சேகரிக்கும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.

i. நிலத்திலுள்ள வளங்களினால் வருமானங்களை சேகரித்தல்.
ii. குத்தகை அடிப்படையில் காணிகளை கையளித்து குத்தகை வருமானங்களை சேகரித்தல்.
iii. அரசு சார்ந்த, அரசு சாராத அத்துடன் ஆட்களிடம் இருந்து கிடைக்கவுள்ள பணத்தொகைகளை அறவிடுதல்.

* நிறுவனத்தின் அமைப்பான்மை கட்டமைப்பை அமைவுபடுத்தல்.

v. பயிற்றப்பட்ட மற்றும் வினைத்திறன்மிக்க பதவியணியினை உருவாக்குதல்.

vi. முறையாக கடமைகளை கையளித்தல்.

vii. அதிகாரங்களை பரவலாக்கி கடமைகளை கையளித்தல்.

viii. பதவியணியினரை கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றில் பங்குபெறச்செய்வித்தல்.

* நிறுவனத்தில் வினைத்திறன்மிக்க ஆக்கத்திறனை ஏற்படுத்துவதற்காக பௌதீக வளங்களை வழங்குவதோடு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தல்.

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

**கடமைப்பொறுப்புகள்**

சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக கையளிக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளுக்கு மேலதிகமாக அவ்வப்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளகின்ற கொள்கை முறையிலான தீர்மானங்களின் பிரகாரம், மேற்படி கடமைப்பொறுப்புகளை விரிவான விடயவெல்லைக்குள் அமுல்படுத்த வேண்டியுள்ளது.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

## சட்ட அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சட்டங்கள்

1. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டம்.
2. 1975 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
3. 1981 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
4. 1981 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
5. 1986 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
6. 1986 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.

சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளக வெளிப்படுத்துநர்கள் | - | ஏக்கர் 563,449 |
| 2. | தங்கப்பவுன் கம்பனிகள் | - | ஏக்கர் 195,644 |
| 3. | ரூபா கம்பனிகள் | - | ஏக்கர் 228,813 |

என்ற வகையில் 987906 ஏக்கர் அளவிலான காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி,

ஐ. திருத்தங்கள் - சட்ட இலக்கங்கள் 3 மற்றும் 6 ஆகியவற்றிலும்

ii. ஏற்பாடுகள் - சட்ட இலக்கங்கள் 4, 5 மற்றும் 6 ஆகியவற்றிலும் அளிக்கப்பட்டுள்ளன.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டமைப்பு கீழ் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

1. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற - தவிசாளர்

2. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற உறுப்பினர்கள் - 05

3. உத்தியோகபூர்வ முறையில் நியமனம் பெறுகின்ற உறுப்பினர்கள் - 03

ஆணைக்குழுவின் பணிகளை அமுல்படுத்தும் பொருட்டு இவ் ஆணைக்குழுவால் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் அங்கீகாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு பணிகளுக்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை 651 சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**சட்டத்தில் பிரிவு 45 (1) அ இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட தவிசாளர்**

| தொடர் இல. | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி நிமல் ஜீ புஞ்சிஹேவா | தவிசாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2008.03.12 தொடக்கம் இன்று வரை | C 82 ஹெக்றர் கொப்பேகடுவ மாவத்தை கொழும்பு - 07. | 011-2698798 |

**02. சட்டத்தின் பிரிவு 45(1) ஆ வின் கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்**

| தொடர் இல | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி திரு. ஹரிகுப்தா றோஹனதீர | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 2008.06.04 திகதி தொடக்கம் இன்று வரை | காணி சீர்திருத்த ஆணைக்குழு, C 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு - 07. | 011-2693967 |
| 02 | திருமதி.எம் அனோமா நந்தனி<br><br>திரு.எஸ்.ஆர். டபிள்யூ.எம்.பீ.சத்குமார் | பணிப்பாளர்<br><br>பணிப்பாளர் | 2012.11.23 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை<br><br>2012.11.23 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | தேசிய வரவுசெலவு திணைக்களம், பொது திறைசேரி, கொழும்பு-01.<br><br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 011-2484500<br><br>071-5320029 |
| 03 | திரு.பீ.எல்.யூ. திசாநாயக்க<br><br>திரு.யு.கே.எஸ் | மேலதிக செயலாளர் | 2009.10.21 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை<br><br>2013.09.01 ஆந் | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு – 02.<br><br>பெருந்தோட்டக் | 0112-438707 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மிஹிந்துகுலசூரிய | மேலதிக செயலாளர் | திகதி தொடக்கம் இன்று வரை | கைத்தொழில் அமைச்சு, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு – 02. | |
| 04 | திரு. ஜீ.டபிள்யூ சேனாரத்ன | ஆலோசகர் | 2007.01.01 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | மிலோதா நிறுவனம், ஒல்கட் மாவத்தை, கொழும்ப 11. | 071-4450080 |

## 03. சட்டத்தில் பிரிவு 45 (1) இ வின் கீழ் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

| **தொடர் இல** | **பெயர்** | **நிரந்தர பதவி** | **நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும்** | **அலுவலக முகவரி** | **தொலை பேசி இல.** |
|---|---|---|---|---|---|
| 01. | திரு.ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ | காணி ஆணையாளர் நாயகம் | 2010.08.19 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | காணி ஆணையாளர் திணைக்களம், பத்தரமுள்ள | 0112-866172 |
| 02 | எம்.ஏ.எஸ். வீரசிங்க | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | 2012.05.24 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | கமநல அபிவிருத்தி திணைக்களம், இல: 42, ஸ்ரீமத் மாகஸ்பர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-07. | 0112-672712 |
| 03 | திரு.கே.ஜீ. ஸ்ரீயாபால | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் | 2012.06.25 அந் திகதி வரை | கமத்தொழில் திணைக்களம் கன்னொறுவ பேராதனை | 081-2388331 |

# பௌதீக வளங்களின் முகாமை

| தொடர் இல. | சொத்துக்களின் வகை | ஆண்டு தொடக்கத்தில் இருந்த நிலை | ஆண்டிற்குள் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | ஆண்டு முடிவில் இருந்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விற்பனை | கொள்வனவு | | | |
| 01 | கெப் வண்டிகள் | 13 | 02 | 01 | | | 12 |
| 02 | மோட்டார் வாகனங்கள் | 01 | | 01 | | | 02 |
| 03 | மயிக்ரோ கயிரன் ஜீப் வண்டிகள் | 02 | | | | | 02 |
| 04 | வான் | 01 | 01 | 01 | | | 01 |
| 05 | மோட்டார் சைக்கிள்கள் | 01 | 01 | | | | |
| 06 | டுப்ளோ இயந்திரங்கள் | 01 | | | | | 01 |
| 07 | நிழற்பட பிரதி இயந்திரங்கள் | 06 | | | | | 06 |
| 08 | கணினிகள் | 41 | | 06 | | | 17 |
| 09 | கணினி அச்சுப் பொறிகள் | 31 | | | | | 34 |
| 10 | லெப்டொப் கணினிகள் | 01 | | | | | 01 |
| 11 | பெக்ஸ் இயந்திரங்கள் | 20 | | | | | 20 |
| 12 | தட்டச்சுக்கள் | 03 | | | | | 03 |
| 13 | காப்புப் பெட்டிகள் (லொக்கர்கள்) | 10 | | | | | 10 |
| 14 | கெமராக்கள் | 01 | | | | | 01 |
| 15 | தொலைக்காட்சிப் பெட்டிகள் | 01 | | | | | 01 |
| 16 | குளிர்சாதனப் பெட்டிகள் | 01 | | 01 | | | 01 |
| 17 | றோனியோ இயந்திரங்கள் | 02 | | | | | 02 |
| 18 | ஒலிபெருக்கி இயந்திரங்கள் | 01 | | | | | 01 |

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

காணி சீர்திருத்த சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட காணிகள் மற்றும் பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்களினதும் தேசத்தினதும் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக உருவாகுதல் எதிர்கால நோக்கமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக தவிசாளர் பணியாற்றுவதுடன், அவரின் உதவிக்காக நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம், பிரிவுகளுக்கு பொறுப்பான பணிப்பாளரகள் மற்றும் உதவிப்பணிப்பாளர்கள் உள்ளிட்ட 390 உத்தியோகத்தர்களை கொண்ட பதவியணி காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது.


குறித்த பதவியணி தலைமை அலுவலகத்தில் 14 பிரிவுகளையும் மாவட்ட அலுவலகங்கள் 20 உம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## 2013.12.31 ஆந் திகதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

| தொடர் இலக்கம் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | - |
| 02. | பணிப்பாளர் நிர்வாகம்-செயலாளர் | 1 | - | - |
| 03. | பணிப்பாளர் - நிதி | 1 | - | 1 |
| 04. | பணிப்பாளர் - சட்டம் | 1 | - | 1 |
| 05. | பணிப்பாளர் - காணி | 1 | - | 1 |
| 06. | பணிப்பாளர் | - | 1 | - |
| 07. | செயலாளர் | - | 1 | - |
| 08. | உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | - | 1 |
| 09. | உதவிப்பணிப்பாளர்(நிதி) | 2 | - | 2 |
| 10. | உதவிப்பணிப்பாளர் (சட்டம்) | 3 | 1 | 2 |
| 11. | உதவிப்பணிப்பாளர் (புலனாய்வு) | 1 | - | 1 |
| 12. | உதவிப்பணிப்பாளர் (மாகாணம்) | 18 | 27 | - |
| 13. | உதவிப்பணிப்பாளர் (கருத்திட்ட விவசாய அபிவிருத்தி) | 1 | - | - |
| 14. | உதவிப்பணிப்பாளர் (காணி உச்ச எல்லை) | 1 | - | - |
| 15. | உதவிப்பணிப்பாளர் (காணி பாராதீனப்படுத்தல்) | 1 | - | - |
| 16. | உதவிப்பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) | 1 | - | - |
| 17. | உதவிப்பணிப்பாளர் (அளவைகள்) | 1 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| 19. | பணிப்பாளர் 11 | - | **3** | - |
| 20. | கணக்காளர்111 | - | 1 | - |
| 21. | தனிப்பட்ட உதவியாளர் IV | - | 1 | - |
| 22. | சட்ட அலுவலர் v | - | 2 | - |
| 23. | கணக்கு அலுவலர் | 1 | - | 1 |
| 24. | நிர்வாக அலுவலர் | 1 | - | 1 |
| 25. | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 1 | - | 1 |
| 26. | மதிப்பீட்டு அலுவலர் | 1 | 1 | - |
| 27. | மதிப்பீட்டு பரிசோதகர் | **3** | - | **3** |
| 28. | பதவிநிலை உதவியாளர் V | - | **30** | - |
| 29. | கணக்கு அலுவலர் V | - | **5** | - |
| 30. | திட்டமிடலாளர் | **2** | - | **2** |
| 31. | போக்குவரத்து உதவியாளர் | 1 | - | 1 |
| 32. | முகாமைத்துவ உதவியாளர் | 200 | 252 | - |
| 33. | சாரதி | 17 | 17 | - |
| 34. | அலுவலக பணியாளர் | 44 | 46 | - |
| | | **307** | **390** | 18 |

# Organization Structure



காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவாலும் நிறைவேற்றுகின்ற பணிகளும், 2013 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகளும் தொடர்பான முன்னேற்ற சாராம்ச அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1. <u>தவிசாளர் பிரிவு மற்றும் நிறைவேற்றுப்பணிப்பாளர் பிரிவு</u>

**அமைப்பு**

| **தொடர் இல.** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | தவிசாளர் | 01 |
| 2. | நிறைவேற்றுப்பணிப்பாளர் | 01 |
| 3. | பணிப்பாளர் நாயகம் | 01 |
| 4. | தனிப்பட்ட உதவியாளர் | 01 |
| 5. | எழுதுநர் | 01 |
| 6. | தட்டெழுத்தாளர் | 01 |
| 7. | அலுவலக பணியாளர் சேவை | 03 |
| **மொத்தம்** | | **09** |

**பணிகள்:-**

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அனைத்து பணிகள் தொடர்பில் தேவையான அனுமதிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

ii. அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

iii. அமைச்சின் கூட்டிணைப்புடன் நிறுவன நடவடிக்கைகளை முறைசார்படுத்தல்.

iv. மேன்மைதங்கிய சனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சர் ஆகியோருடன் கூட்டிணைப்பினை மேற்கொள்ளுதல்.

2. <u>செயலாளர் பிரிவு</u>

**அமைப்பு**

| **தொடர் இல.** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | செயலாளர் | 01 |
| 2. | எழுதுநர் | 01 |
| 3. | தட்டெழுத்தாளர் | 01 |
| **மொத்தம்** | | **03** |

**பணிகள்**

i. தலைமை அலுவலகத்தில் அனைத்து பிரிவுகள் மூலம் சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழு பத்திரங்களை பரிசீலனை செய்து பணிப்பாளர் சபையிடம் அனுப்பி வைத்தல்.

ii. பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றை சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் அனுப்பி வைத்தல்

iii. கருத்திட்டங்களின் குழுக்களை கூட்டுதல் மற்றும் அதற்கு ஏற்புடையதான அறிக்கைகளை வைத்துக்கொள்ளுதல்.

3. <u>முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்தி பிரிவு</u>

**அமைப்பு**

| **தொடர் இல.** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பணிப்பாளர் | 01 |
| 2. | பதவிநிலை உதவியாளர் | 03 |
| 3. | எழுதுநர் | 08 |
| 4. | தட்டெழுத்தாளர் | 01 |
| 5. | கள அலுவலர் vii, vi | 02 |
| 6. | நிழற்பட பிரதி இயந்திர இயக்குநர் | 01 |

| | | |
|---|---|---|
| 7. | ரோனியோ இயந்திர இயக்குநர் | 01 |
| 8. | சாரதி | 17 |
| 9. | அலுவலக பணியாளர் சேவை | 03 |
| **மொத்தம்** | | **37** |

**பணிகள்**

i. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களுக்கும் ஏற்புடையதாகும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ii. ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம், வேதனவேற்றங்கள் மற்றும் ஊழியர் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iii. மாவட்ட அலுவலகங்களின் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iv. அலுவலர்களுக்கு ஏற்புடையதான நலனோம்பல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

v. அலுவலக தேவைகளை பூர்த்திசெய்தல்.

vi. அன்றாட அலுவலக பேணுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

vii. பெறுகை நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

viii. பொதுமக்கள் தினத்தை பேணிச்செல்லுதல்

ix. நிறுவனத்தின் இணைந்த திட்டம், செயற்றிட்டம், ஆண்டறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளை தயாரித்தல்

x. சுற்றுநிருபங்களை வெளியிடுதல்

xi. ஓய்வுபெற்ற மற்றும் இராஜினமா செய்த அலுவலர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவு, ஊழியர் சேமநல நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xii. பொது வைபவங்களை ஒழுங்கமைத்தல்

xiii. பொது வாகன முகாமைத்துவ முறைமையை பேணிச்செல்லுதல்

xiv. நிறுவனப்பதவியணியின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

xv. கணக்காய்வு அறிக்கைகளை பேணிச்செல்லுதல் மற்றும் அரச தொழில்முயற்ச்சி தொடர்பாக கணக்கு செயற்குழுவிடம் தேவையான தகவல் அறிக்கைகளை சமர்ப்பித்தல்

xvi. ஆண்டு அறிக்கைகளை அமைச்சரவையிடமும் பாராளுமன்றத்திடமும் அனுப்பி வைத்தல்

xvii. மாவட்ட அலுவலகங்களை கண்காணித்தல்.

**2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பிரதான பணிகள்.**

I. நிறுவனத்தின் பதவியணி முகாமைத்துவம்
II. மாவட்ட அலுவலகங்களை முறைசார்படுத்தல்
III. வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்
IV. அலுவலக தேவைகளை பூர்த்திசெய்தல்
V. காணி இல்லாத குடும்பங்களுக்கு தேசிய மட்டத்தில் ரண்பிம உறுதி வழங்கும் வைபவத்தை ஒழுங்கமைத்தல்.

VI. சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் நலனோம்பல் சங்கம் ஆகியன இணைந்து கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

i. **நிறுவனப்பதவியணியின் முகாமைத்துவம்**

❋ ஆணைக்குழுவின் பணிகளை மிக வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர் நாயகப்பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 இன் அலுவலரான திருமதி கலாநிதி எச்.எம்.எஸ் ஜயதுங்க அவர்களை 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆந் திகதி தொடக்கம் இரண்டாம் நிலை அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

❋ 1994 ஆம் ஆண்டு வரை காணி சீருதிருத்த ஆணைக்குழுவின் மொத்த பதவியணியின் எண்ணிக்கையான 190 பேருக்கு மட்டும் முறையான அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. மொத்த பதவியணியின் தொழில் கட்டுக்காப்பை ஏற்படுத்துவதற்காக பல ஆண்டுகள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக மொத்த பதவியணியின் எண்ணிக்கையை 307 ஆக உயர்த்துவதற்கு முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

❋ மொத்த பதவியணி எண்ணிக்கையான 307 பேரில் வெளியிடங்களில் சேவையில் ஈடுபடுத்தியுள்ள பதவியணி எண்ணிக்கையினரின் தேவையை தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் நியாயப்படுத்தி விடயங்களை சமர்ப்பித்துள்ளதுடன், அதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

ii. **மாவட்ட அலுவலகங்களை முறைசார்படுத்தல்**

- அலுவலக பணிகளின் பொருட்டு இரண்டு கட்டங்களில் கணினி இயந்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றாட கடமைகளுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படாத சில அலுவலகங்களின் பொருட்டு தேவையான அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாவட்ட கடமைகளை துரிதப்படுத்துவதற்காகவும் வருமானங்களை விருத்தி செய்வதற்காகவும் 14 நாள்கள் என்ற வகையில் உத்தியோகபூர்வ வாகன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- மாவட்ட கடமைகளை துரிதப்படுத்துவதற்காகவும் வருமானங்களை விருத்தி செய்வதற்காகவும் கண்டி. குருணாகல், புத்தளம் காலி/ மாத்தறை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் நிரந்தர அடிப்படையில் கடமை பொருட்டான வாகன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் வருமானம் அதிகரித்துக்கொள்வதனை இலக்காக கொண்டுள்ளதுடன், வாகனத்தின் மாதாந்த குத்தகை தொகையை உரிய மாவட்ட அலுவலகத்திடம் செலுத்த வேண்டியுள்ளது.

iii. **வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்**

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு ஏற்புடையதாகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இடமாற்றத்திட்டத்தின் படி 2014 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றங்களை எதிர்பார்க்கும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்காக நியமனம் செய்யப்பட்ட இடமாற்ற சபை மூலம் இயன்ற வரை நியாயமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

iv. **அலுவலக தேவைகளை பூர்த்தி செய்தல்**

- காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வருமான இலக்குகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு பங்களிப்பு வழங்குதல் மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. குறித்த வருமான நிலையை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் புத்தளம் தவுல் குருந்துவத்தையில் தெங்கு செய்கை கருத்திட்டமும், நுவரெலியாவில் லிந்துல பங்களாவ, சுற்றுலா விடுதியாக பேணிச்செல்வதற்கும் தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

❋ மேற்படி பிரதான கடமைகளுக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்புச்செய்தல், இடமாற்றங்கள் மற்றும் சம்பளவேற்றங்கள் என்பவற்றை வழங்குதல் போன்ற அன்றாட பணிகளும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆந் திகதி அம்பாறை ஹாடி கல்லூரி வலாகத்தில் நடைபெற்ற தெயட்ட கிருள தேசிய அபிவிருத்தி கண்காட்சியின் பொருட்டு வெற்றிகரமான கண்காட்சி கூடத்தை பேணிச்செல்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

v. **அலுவலகத்தின் தலைமை கட்டிடத்தை பேணிச்செல்லுதல்**

❋ 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் இது வரை ஹெக்ற்ர் கொப்பாகடுவ மாவத்தை, கொழும்பு 07 இல் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்குரிய சீ.81 மற்றும் சீ.82 ஆகிய கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் குத்தகை மதிப்பீட்டு தொகை எதிர்காலத்திற்கு ஏற்ற வாறு அதிகரித்ததன் காரணமாக வாடகை தொகை செலுத்தல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் ஆணைக்குழு பல கலந்துரையாடல் சுற்றுகளை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் நடாத்தியது.

ஆயினும் இது தொடர்பில் நல்லதொரு பதில் கிடைக்காதபடியால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியை 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு பிரேரணை செய்யப்படினும், அதிக செலவை செய்வதற்கு நேரிடுதலும், குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்கின்ற காணியில் கட்டிடங்கள் நிருமாணிப்பதன் காரணமாக ஆணைக்குழு சிரமங்களுக்குள்ளாகலாம் என கருதியதாலும் அதனை கைவிடப்பட்டது.

அதற்கு துரித தீர்வை பெற்றுக்கொள்வதற்காக பல கலந்துரையாடல் சுற்றுகளை நடாத்தி பிரேரணைகள் சிலவற்றை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், மிக விரைவில் பொருத்தமான பிரேரணையை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

vi. **காணி இல்லாத குடும்பங்களுக்கு தேசிய மட்டத்தில் ரண்பிம உறுதி வழங்கும் வைபவத்தை ஒழுங்கமைத்தல்**

நாட்டில் எல்லா மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் காணி இல்லாத குடும்பங்களுக்கு ரண்பிம உறுதி வழங்கும் வைபவமொன்று 2013.06.10 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மேன்மைதங்கிய மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்திலும் அதீதிகளின் பங்களிப்புடனும் அலரி மாளிகையில் நடைபெற்றது.

vii. **சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் நலனோம்பல் சங்கம் என்பவற்றுடன் இணைந்து நடைமுறைப்படுத்திய கூட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்**

- சனவரி மாதம் 01 ஆந் திகதி பதவியணியின் பங்களிப்புடன் புதிய ஆண்டை கொண்டாடுவதற்காக வைபவமொன்றை ஒழுங்கமைத்தல்.
- சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பொருட்டு ஏப்பிரல் மாதம் 22 ஆந் திகதி பதவியணியின் பங்களிப்புடன் புத்தாண்டு வைபவமொன்றை நடாத்தல்.
- காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஸ்தாபகரான காலஞ்சென்ற கௌரவ ஹெக்றயர் கொப்பாகடுவ அவர்களின் 29 ஆவது ஞாபகார்த்த விழாவை முன்னிட்டு தானம் வழங்கும் வைபவமொன்றை பதவியணியின் பங்களிப்புடன் ஒக்றொபர் மாதம் 04, 05, 06 ஆகிய திகதிகளில் பொலன்னறுவை சோமாவதி ரஜமகா விகாரையில் சங்கத நடாத்தப்பட்டது.
- மனித வளங்கள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் கௌரவ டியு குணசேகர அவர்களின் தலைமைத்துவத்திலும் அழைக்கப்பட்ட அதிதீகளின் பங்களிப்புடனும் ரண்பிம உறுதி வழங்கும் வைபவம் ஒக்றோபர் மாதம் 30 ஆந் திகதி தலைமை அலுவலகத்தில் நடாத்தல்.
- அலுவலக பணிற்றொகுதியன் குழு உளப்பாங்கினை விருத்தி செய்வதற்காக எல்லா மாவட்ட செயலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றில் பதவியணியுடன், கண்டி ஸ்ரீ தலதா மாளிகை, மாத்தளை அளுவிகாரை, கெடிகே, வட்டதாகே, மற்றும் பொலன்னறுவை போன்ற இடங்களுக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளுதல்.
- அதே போன்று பதவியணியின் கூட்டு உளப்பாங்கினை விருத்தி செய்வதற்காக திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி ஹொரணை செவின்ரோ வைபவ மண்டபத்தில் சந்திப்பும் பதவியணியினறுக்கு மதிய நேர உணவு விருந்துபசாரம் வெகு விமரிசியாக ஒழுங்கமைத்தல்.
- நலனோம்பல் சங்கத்துடன் இணைந்து பதவியணியினறுக்கு சலுகை அடிப்படையில் வியாபார நிறுவனங்களுடன் இணைந்து உடு துணிகள் மற்றும் மின் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமும், பதவியணியின் தேவைக்கெற்ப சலுகை அடிப்படையில் செலுத்துவதற்காக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமும் ஒழுங்கமைத்தல்.

viii **சேவைப் பெறுநர்களின் உபசரணை**

- சேவைப்பெறுநர்களின் கஷ்டங்களுக்கு நிவாரணம் வழங்கும் முறைமை. காணி பிரச்சினைகளை சீராக்குதல், பிரச்சினைகளை இனம்காணுதல், கலந்துரையாடல், முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் ஆகியவற்றின் பொருட்டு தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை பொது மக்கள் தினம் நடாத்தப்படுகின்றது. மொத்த நாடும் உள்ளடங்கும் வண்ணம் நாளொன்றுக்கு 200 - 300 இற்கும் இடையிலான சேவைப்பெறுநர்கள் பங்குபற்றுவதுடன், தவிசாளர், நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட கிளைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தமது பிரச்சினையை சமர்ப்பித்து நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்களுக்கு இடவசதி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்களில் பொதுமக்கள் தினம் திங்கள்கிழமை மற்றும் புதன்கிழமை என்று இரண்டு நாள்கள் நடாத்தப்படுகின்றன.

**மாவட்ட அலுவலகங்கள்**

2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும் போது, 20 மாவட்ட செயலகங்களில் ஆரம்பிக்கப்பட்டு பேணிச்செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டதுடன், திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தொடங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முழு இலங்கையிலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மாவட்ட செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட செயலகங்களில் முகவரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**காணி சீர்திருத்த ஆணைக்குழு – மாவட்ட அலுவலக வலையமைப்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | **களுத்துறை**<br>பணிப்பாளர்<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை<br>220, பழைய வீதி,<br>களுத்துறை.<br>தொலைபேசி இல:- 034-2223611 | 11 | **கேகாலை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை<br>அரசாங்க அதிபர் அலுவலகம்,<br>கேகாலை,<br>தொலைபேசி இல:- 035-2222664 |
| 02. | **காலி**<br>பணிப்பாளர்,<br>காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>காலி,<br>தொலைபேசி: 091-2232357 | 12. | **அம்பாறை**<br>பணிப்பாளர்,<br>காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>அம்பாறை,<br>தொலைபேசி: 063-2224021 |
| 03. | **மாத்தளை**<br>பணிப்பாளர்,<br>காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>மாத்தளை,<br>தொலைபேசி: 066-2232357 | 13. | **மட்டக்களப்பு**<br>பணிப்பாளர்,<br>காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>மட்டக்களப்பு,<br>தொலைபேசி: 065-2222986 |
| 04. | **மாத்தறை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>24, சம்போதி மாவத்தை,<br>பல்லேமுல்லை,<br>மாத்தறை,<br>தொலைபேசி: 041-22220 | 14. | **இரத்தினபுரி**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>பொதுச்செயலக கட்டிடம்,<br>நவ நகரம்,<br>இரத்தினபுரி<br>தொலைபேசி: 045-2222492 |
| 05. | **மொணராகலை**<br>பணிப்பாளர்,<br>காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>ஜனசவி கட்டிடம்,<br>கச்சேரி சந்தி, | 15. | **எம்பிலிபிட்டிய**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை<br>இலக்கம் 12 பி,<br>மொத்த களஞ்சிய வீதி, நவ நகரம், |

| | | | |
|---|---|---|---|
| | மொணராகலை,<br>தொலைபேசி: 055-2277208 | | ஜளம்பிலிபிட்டிய,<br>தொலைபேசி: 047-2261801 |
| 06. | **கண்டி**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>4 ஆவது மாடி,<br>புதிய பொதுச்செயலகம்,,<br>கண்டி,<br>தொலைபேசி: 081-2222316 | 16. | **மாதம்பே**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>சேனாநாயக்க ஆரண்ய முன்னிலையில்<br>பழைய நகரம் மாதம்பே,<br>தொலைபேசி: 032-2247183 |
| 07. | **கம்பகா**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>கிராமிய அபிவிருத்தி கருத்திட்ட கட்டிடம்,<br>கச்சேரி தொகுதி,<br>கம்பகா,<br>தொலைபேசி: 033-2230134 | 17. | **அநுராதபுரம்**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>இலக்கம் 229,<br>தஹய்யாகம சந்தி,<br>அநுராதபுரம்<br>தொலைபேசி: 025-2225890 |
| 08. | **கொழும்பு**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>சென்ட்ரல் பாமசி கட்டிடம்,<br>பாதுக்க<br>தொலைபேசி: 011-3154787 | 18. | **குருணாகல்**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>இலக்கம் 16,<br>உத்துரு வெவ வீதி,<br>குருணாகல்<br>தொலைபேசி: 037-2222553 |
| 09 | **பதுளை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>10/1 ஏ, தாவரவியல் பூங்கா வீதி,<br>பதுளை, | 19. | **நுவரெலியா**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>அய்.ஆர்.டி.பி.கட்டிடம்,<br>உடுபுஸ்ஸல்லாவ வீதி, |

| | | | |
|---|---|---|---|
| | தொலைபேசி: 055-2222308 | | நுவரெலியா<br>தொலைபேசி: 052-2235385 |
| 10. | **அம்பாந்தோட்டை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>பிரதேச செயலகம்,<br>தங்கல்லை<br>தொலைபேசி: 047-2241766 | 20 | **யாழ்ப்பாணம்,**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச்சீர்திருத்த அதிகாரச்சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>யாழ்ப்பாணம்,,<br>தொலைபேசி: 021-2219326 |

முழு இலங்கையிலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மாவட்ட செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட செயலகங்களில் முகவரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

காணி சீர்திருத்த ஆணைக்குழு – மாவட்ட அலுவலக வலையமைப்பு

**மாவட்ட அலுவலகத்தின் கடமைப்பொறுப்புகள்**

- களை நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- காணி பங்கீட்டாளர்களை தெரிவு செய்கின்ற விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அவர்களை அறிவுறுத்துதல்
- அரசாங்கத்தின் தேவைப்பாடுகளின் பொருட்டு நிறுவனங்களுக்கு காணி வழங்கும் போது தலையிடுதல்
- தலைமை அலுவலகத்தின் அனுமதிப்படி பகிர்ந்தளிப்பதற்குள்ள காணிகளை அரசாங்க நிறுவனங்களிடத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும் நடைமுறையினை செயற்படுத்தல்.
- பங்கீட்டாளர்களிடையே காணி பகிர்ந்தளிப்பதற்காக ஏ/எல் படிவத்தை பரிசீலனை செய்து பரிந்துரை செய்தல்.
- தவிசாளர், நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக தேவையான சந்தர்ப்பங்களில் விசேடமான கள விசாரணைகளில் பங்குபற்றுதல்
- அலுவலகத்தின் புதன்/திங்கள் ஆகிய நாள்களில் பொது மக்கள் தினத்தை நடாத்துதல் மற்றும் அதற்கு ஏற்புடைய கடமைகளை நிறைவேற்றுதல்.
- காணி ஆவணத்தை இற்றைப்படுத்தலுக்கு தேவையான தகவல்களை தொகுத்து கோவைகளை பேணிச்செல்லுதல்
- மாவட்டத்தின் வழக்குகளுக்கு பணிப்பாளர்கள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் பங்குபற்றுதல்
- கொள்கைகள் மற்றும் முக்கியமான தீர்மானங்கள் என்பவற்றை மேற்கொள்வதற்காக தவிசாளர் அவர்களிடம் அறிக்கையிடுதல்
- கடமை அலுவல்களின் பொருட்டு வருகை தரும் பொது மக்கள் மற்றும் வெளிப்படுத்துநர்கள் ஆகியோரின் பொருட்டு தவிசாளரின் கண்காணிப்பின் கீழ் அவர்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்
- மாவட்ட அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கைகளை கண்காணித்தல்
- வருமானம் சேகரித்தல்

- வெளிக்கள அலுவலர்களின் கள நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் பயிற்றுவித்தல்
- வெளியிடப்பட்டுள்ள வெளிக்களத்தில் இனம்காணப்படாத காணிகள் மற்றும் வெளிப்படுத்தாத 50 ஏக்கருக்கு அதிகமான காணிகள் தொடர்பான தகவல்களை கண்டறிதல்
- ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கை கருதி வருமான நிலைமைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- கள அலுவலர்களால் சமர்ப்பிக்கின்ற விசாரணை அறிக்கைகள் தொடர்பில் தேவையான கள விசாரணைகளை மேற்கொள்ளுதல்
- பங்கீட்டாளர்களை அறிவுறுத்தல் மற்றும் தெரிவு செய்யும் விசாரணைகளில் பங்குபற்றுதல்
- காணி நிர்ணயம் தொடர்பான விசாரணைகளை நடாத்தல்
- உறுதி வைபவங்களை ஒழுங்கமைத்தல்

**04. <u>உள்ள கணக்காய்வுப் பிரிவு</u>**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 2. | பதவிநலை உதவியாளர் | 01 |
| 3. | எழுதுநர் | 03 |
| 4. | தட்டெழுத்தாளர் | 01 |
| மொத்தம் | | 06 |

❋ **அறிமுகமும் பணிகளும்**

i. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த சட்டம் மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிக் கோவை பகுதி 11 பிரிவு 2 உப பிரிவு 01-03 இன் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கமைவாக கடமைகளை நிறைவேற்றுதல்.

ii. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள விவசாய காணிகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் தொடர்பான முன் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.

iii. உறுதிகளை தயாரிக்கும் போது அதற்கு ஏற்புடையதான கடித ஆவணங்கள் உள்ளனவா?, மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ள பணத்தை அறவிடுதல், ஆள்களின் நிலைமை ஆகியவற்றின் செவ்வைத்தன்மையை பரிசீலனை செய்தல்.

iv. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை பிரகாரம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் இறுதி கணக்குகளில் குறிப்பிடுகின்ற குறைபாடுகளை குறைத்துக்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவி வழங்குதல்

v. கணக்காய்வாளர் அதிபதியிடமிருந்து கிடைக்கப்பெறும் கணக்காய்வு உசாவுதல்களுக்கு ஏற்புடையதாக, சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து தகவல்களை கோருதல், போதுமானதா என்று பரிசீலனை செய்தல் மற்றும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகள்

01. நிதிப்பிரிவு நடவடிக்கைகளின் கணக்காய்வு

i. கிடைக்கப்பெறுதல்களதும் கொடுப்பனவுகளதும் பரிசீலனை

2013 ஆம் ஆண்டில் மாதிரி பரிசீலனையாக சனவரி, யூலை, செப்தெம்பர் ஆகிய மாதங்களுக்கு ஏற்புடையதாக 193393 மற்றும் கணக்கிலக்கம் 1443 இற்கு

ஏற்புடையதாக காசேடு, பணம் கையளிக்கும் வவுச்சர்கள், பற்றுச்சீட்டுப்புத்தகங்கள், பணம் வைப்புச் செய்யும் பற்றுச்சீட்டுகள், வங்கி கூற்று, வங்கி கணக்கிணக்கு கூற்று, பணக்கட்டளை பதிவேடு, செலுத்தல் வவுச்சர்கள் மற்றும் வரவு செலவு குறித்த செலவு விடயத்தின் கீழ் குறிப்பிடுதல் செவ்வையாக உள்ளதா எனவும், காசோலைகளை இரத்துச்செய்யும் பதிவேடு மற்றும் உப பத்திரிக்கைகள் செவ்வையானதா எனவும் கணக்காய்வு செய்தல்.

ii கணக்கிலக்கம் 1415 இற்கு ஏற்புடையதான மாற்றங்களை செவ்வையாக குறிப்பிடப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்தல்.

iii பணிக்கொடை பணம் செலுத்தல் வவுச்சர் 15 இல் முன் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.

iv காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளதால் அடிப்படை சம்பளத்தில் அமர்த்தியதற்கு அமைவாக எல்லா ஊழியர்களதும் சம்பள பத்திரிக்கைகளை கணக்காய்வு செய்தல்.

v சிறாப்பர் பிரிவில் புத்தகங்கள் மற்றும் பணம் என்பவற்றை சரிபார்தல் - 02 சந்தர்ப்பங்கள்

vi. பிரதான களஞ்சியத்தை பரிசீலனை செய்யும் சந்தர்ப்பங்கள் - 01

vii. இடர் கடன், ஒரு மாத கடன், பாடசாலை புத்தகங்கள் கடன் பேரேடை மாதிரி பரிசீலனைக்குட்படுத்தல்

viii. 2013 ஆம் ஆண்டில் போனஸ் வவுச்சர்களை கணக்காய்விற்கு உட்படுத்தல்

ix. (விடுமுறை ஆவணங்களுடன்)

**02. மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டு பிரிவின் நடவடிக்கைகளை பரிசீலனை செய்தல்**

i. நட்டஈட்டு கடிதக்கோவைகள் 10 ம் வட்டி செலுத்தும் கடிதக்கோவைகள் 08 ம் முன் கணக்காய்விற்குட்படுத்தல்'

ii. நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் முடிவுறுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள்

- காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிபடுத்தாமையால் நட்டஈடு செலுத்துவதற்கு முடியாமை
- நட்டஈடுக்குப்பதிலாக மாற்று காணிகளை கோருதல்'

- பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாமை’
- வெளிப்படுத்துநர்களிடத்தில் அனுப்பி வைக்கப்பட்ட நட்டஈட்டு அளிப்பு கடிதத்திற்கு அனுமதி கிடைக்கப்பெறாமை மற்றும் வவுச்சரகளை கையொப்பமிட்டு கையளிக்காமை.
- வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடப்பட்டு நட்டஈடுகளை தீர்மானித்தல்’

நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுவதற்கு உள்ள கடிதக்கோவைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அதனை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

## 03. காணி கையளிப்பு பிரிவு

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் உள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை கடைபிடித்து காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி கையளிப்பு பிரிவில் ஏ/எல் விண்ணப்பபடிவங்கள் மற்றும் உரிய ஆவணங்களை கையளிக்கும் கடிதக்கோவைகள் என்பவற்றுடன் கணக்காய்வு செய்தல்.

## 04. வரமானப் பிரிவின் நடவடிக்கைகளை பரிசீலனை செய்தல்

i. பேரேடுகள் பேணிச்செல்வதனை பரிசீலனை செய்தல்’

ii. நிலுவை வரி பணத்தை அறவிடும் நடைமுறைகளின் பரிசீலனை

iii. இலக்காக கொண்டுள்ள வருமானத்தை பூர்த்தி செய்துகொள்ளல் தொடர்பான பரிசீலனை

iv. பணிப்பாளர்(வருமானம்) உடன் கலந்துரையாடி வரி கடிதக்கோவைகளில் உள்ள குறைபாடுகளை தயாரித்துக்கொள்வதற்காக ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்தலும் அது தொடர்பான பின்னாய்வுகளும்.

## 05. முகாமைத்துவ மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவின் பணிகள்=

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களது வரவு மற்றும் வெளியேறல் குறிப்பு பத்திரங்களையும் லீவு அட்டவணைகளில் சம்பளமற்ற லீவுகளின் பரிசீலனையும் மேற்கொள்ளுதல்.

ii. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய வாகனங்களை பழுதுபார்த்தல், ஓட்டக்குறிப்புகளின் மாதிரிகளை பரிசீலனை செய்தல்'

iii. கேள்விச்சபைகளின் நடவடிக்கைகளை பரிசீலனை செய்தல்

iv. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மொத்த ஊழியர்களை புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் படியும் முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படியும் மேற்கொண்ட உள்ளீர்ப்புச் செயற்பாட்டை பரிசீலனை செய்தல்

## 06. சட்டப்பிரிவு

சட்டச்செலவுகளை குறைப்பதற்காக சட்டப்பிரிவின் வழக்கு கோவைகளை பரிசீலனை செய்த பின்னரும் சட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடிய பின்னரும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்ததுடன், அதன் மூலம் மேற்கொண்ட தீர்மானங்களுக்கமைவாக துரிதமான பிரேரணைகளை சமர்ப்பித்தல்.

## 06. கணக்காய்வு உசாவுதல்களுக்கு பதில் அனுப்புதல்

i. 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற 13 கணக்காய்வு உசாவுதல்களின் பொருட்டு கிளைகளிலிருந்து தகவல் கோருதல் மற்றும் அதன் படி பதில் கடிதங்களை தயாரித்து சமர்ப்பித்தல்

ii. 1971 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க நிதி சட்டத்தின் கீழ் 14(2) சீ பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கு பதில் அளித்தல்

## 07. முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தல்

2013 ஆம் ஆண்டில் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டம் 04 ஐ நடாத்தி மேற்கொண்ட தீர்மானங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து உரிய பிரிவுகளுக்கு அறிக்கையிடல் மற்றும் அவை தொடர்பாக பின்னாய்வுகளை மேற்கொள்ளல்.

## 08. மாவட்ட அலுவலகங்களில் கணக்காய்வுப் பரிசீலனை

நுவரெலியா, களுத்துறை, கொழும்பு, மாத்தறை, எம்பிலிபிட்டிய, அம்பாந்தோட்டை, பதுளை, கண்டி, மற்றும் அம்பாறை ஆகிய மாவட்ட அலுவலகங்களில் வரவு பதிவேடு, லீவு பதிவேடு, கணக்குகள் தொடர்பான புத்தகங்களும் ஆவணங்களும், பொருள்

பதிவேடு, கள அலுவலர்களின் வேலை குறிப்புகளும் களச்சோதனையும், உரிய கொடுப்பனவு பெயர் அட்டவணை, காணி பதிவேடு, வரி பதிவேடு மற்றும் பதவியணியின் கடமைகளை கையளித்தல் ஆகியவற்றை பரிசீலனை செய்தல்

**09. ஆணைக்குழவின் தீர்மானங்கள் மற்றும் கருத்திட்ட தொழில்நுட்ப குழு தீர்மானங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பின்னாய்வுகளை மேற்கொள்ளல்.**

தலைவர் அவர்கள், நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரின் திடீர் அழைப்புகள், கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் என்பவற்றில் பங்குகொள்ளுதல்.

**05' காணிகளின் உச்ச எல்லைப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 2. | பதவிநலை உதவியாளர் | 01 |
| 3. | எழுதுநர் | 12 |
| 4. | தட்டெழுத்தாளர் | 01 |
| 5. | புத்தகம் கட்டுநர் | 01 |
| 6. | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 17 |

**அறிமுகமும் பணிகளும்**

i. உச்ச எல்லைக்கு கூடிய அதாவது 50 ஏக்கருக்கு அதிகமான விவசாய காணிகள் உரித்தாகியிருந்த நபர்களிடமிருந்து வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல்.

ii. வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்த நபர்களிடமிருந்து அதாவது, வெளிப்படுத்துநர்களின் விருப்பம் படி அவர்களின் காணிகளில் 50 ஏக்கரை

நியதிச்சட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கிகொள்வதற்கு வர்த்தமானியில் வெளியிடுவதன் ஊடாக கையளித்தல்.

iii. வெளிப்படுத்துநரின் கோரிக்கை படி 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதை கடந்துள்ள அவரின் பிள்ளைகள் அல்லது பெற்றோர்கள் ஆகியோரில் ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற வரையறைக்கு அமைவாக காணி சீர்திருத்த சட்டத்தில் பிரிவு 14 இன் கீழ் காணிகளை வழங்குதல்.

iv. வெளிப்படுத்துநர் 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறைவாக இருப்பினும், காணிகளின் உரித்து இருந்த பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துநரின் கோரிக்கை படி ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற உச்ச எல்லைக்கு அமைவாக சட்டத்தில் பிரிவு 22 ஈ இன் கீழ் காணித்துண்டுகளை வழங்குதல்.

v. மேற்படி சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு காணிகளை வழங்கியதன் பின்னர், ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு தொடர்பான தகவல்களை நட்டஈடு செலுத்துவதற்கு மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டு பிரிவிடம் அனுப்பி வைத்தல்

1’ 2013 ஆம் ஆண்டில் 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை முன்னேற்றம்

| | | | |
|---|---|---|---|
| i. | தலைவர்கள், நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் அறிக்கைகள் சமர்ப்பித்தல் | - | 288 |
| ii. | மாவட்ட அலுவலகத்தில் அறிக்கைகளை கோருதல்/கிடைக்கப்பெறுதல் | - | 213 |
| iii. | கிளைகள்/மாவட்ட அலுவலகங்களுக்கு பதில் மற்றும் விபரங்கள் என்பவற்றை வழங்குதல் | - | 495 |
| iv. | அமைச்சுக்கள்/நிறுவனங்கள்/நபர்கள் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்புதல் | - | 287 |
| v. | மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்/கிடைக்கப்பெறுதல் | - | 41 |
| vi. | சனாதிபதி உசாவுதல்கள்களுக்கான பதில்கள் | - | 17 |
| vii. | கோவையிடல் | - | 277 |
| viii. | ஆணைக்குழு பத்திரிக்கைகளை தயாரித்தல் | - | 73 |
| ix. | வழக்குகளில் பங்குபற்றுதல் | - | 164 |
| x. | வழக்கு கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல் | - | 37 |
| xi | பணிகள் முடிவுறுத்தப்பட்ட கடமைகள் | - | 45 |

1.1 வர்த்தமானி அறிவிப்புகளை தயாரித்தல்

- குரு. நியதிச்சட்ட தீர்ப்பு
- 6$1$இரத்துச்செய்தல் கலஹவத்தை
- இர$106 நியதிச்சட்ட தீர்ப்பை இரத்துச்செய்யும் வர்த்தமானி
- கொ$1374 இரத்துச்செய்தல்
- கொ$3436 நியதிச்சட்ட தீர்ப்பு வர்த்தமானி அறிவிப்பு
- கொ$2472 நியதிச்சட்ட தீர்ப்பு வர்த்தமானி அறிவிப்பு
- கொ$2365 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2386 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2369 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ $1725 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$1646 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2386 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2362 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2390 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2364 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$2393 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- கொ$129 நியதிச்சட்ட தீர்ப்பு திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி
- குரு= 133 நியதிச்சட்ட தீர்ப்பு வர்த்தமானி அறிவிப்பு

ii.**22^1& அ பிரிவின் கீழ் பராதீனப்படுத்தல்**

- மாத்/59 22^1& **அ** ^நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று&

- ❖ கொ$3066 22^1& **அ** (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்)
- ❖ கொ$1569 22^1& **அ** (வெளிப்படுத்துநர் அல்லாத ) உறுதிகள் 02
- ❖ கண்டி$118 22^1& **அ** ^ வெளிப்படுத்துநர் அல்லாத & உறுதிகள் 01
- ❖ கொ$3374 22^1& **அ** ^ நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று & உறுதிகள் 01
- ❖ கொ$1936 22^1& **அ** ^ நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று & உறுதிகள் 01
- ❖ கொ$472 22^1& **அ** வெளிப்படுத்துநர் அல்லாத ) உறுதிகள் 01
- ❖ கண்டி$324 22^1& **அ** ^ நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று & உறுதிகள் 01
- ❖ கொ$1146 22 ^1& ஈ (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்)
- ❖ இர$220 22^1& ^ நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று & உறுதிகள் 01
- ❖ இர$143 22^1& **அ** (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்)உறுதிகள் 01
- ❖ கே$28 22^1& **அ** வெளிப்படுத்துநர் அல்லாத உறுதிகள் 01

iii. **22^1& ஈ பிரிவின் கீழ் பராதீனப்படுத்தல்**

- கொ$3217 22^1&ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 03
- கொ$1176 22^1& ஈ (மாற்று காணிகள்) உறுதிகள்) 01
- கொ$3217 22^1& ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01

**iv. 14 ஆவது பிரிவு**

- கா$98 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்) உறுதிகள் 01
- கொ$2770 14 ஆவது பிரிவு உறுதிகள் 01
- இர$43 14 ஆவது பிரிவு உறுதிகள் 01
- இர$126 14 ஆவது பிரிவு உறுதிகள் 01

**v. புதிய காணிப்பிரிவுகளை இனம்காணல்**

யாயின்ன நிந்தகம அளவு ஏக்கர் 1414

15$6$அயிலி வத்தை அளவு 1000 ம் ஏகக்ர் அளவாகும்.

**vi. காணிகளை சுவிகரிப்பு**

கொ/517 கோவையில் ஏக்கர் 2106 ரூட் 3 பேர்ச் 15 (இறுதி தீர்மானம் இல்லை)

**03’ ஏனைய** 28

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக bvuz m%;sixialrK fldusIka iNdjg mejrS we;s bvuz ms<sn|jo fldusIka iNdj jsiska ksoyia lr we;s bvuz ms<sn|j| fldusIka iNdj i;=j oekg we;s bvuz ms<sn| f,aLk we;;a wjidkd;aul kssjeros f,aLkhla wdh;kh i;=j fkdue;sjSu oSrA> ld,hl isg uqyqKoSug isoq jq .eg,qjls’

tlS oSrA> ld,skj meje;s .eg,qjla ksrdlrKh lr .eksfuz wgsfhka jHjia:dms; m%ldYl wdY%fhka fuf;la jHjia:dms; ne|Su i|yd ,ndoSug fkdyels jq bvuz m%udKh ksYaps;j .Kkh lsrSug;a fldusIka iNdj fj; mejreKq ish,qu bvuzj, nqla;sh yd whs;sh fldusIka iNdj i;= jS we;s njg ;yjqre lr .ekSu i|yd;a fldusIka iNdj i;= jq bvuzj,ska fuf;la isoq l, neyer lsrSuzo we;=,;a fldg fjku ixps;hla u.Zska bvuz f,aLkfha rdcldrS bgq lr .ekSfuz lghq;= wdruzN lr we;s w;r tlS ldrAhfhkaa 90% l muK m%.;shla fuz jk jsg <.Zd lr .ekSug yelshdj ,enS we;’

6. **மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டுப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மதிப்பீட்டுப் பரிசோதகர் (பதில் கடமையாற்றும் பணிப்பாளர்) | 01 |
| 2. | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 3. | தட்டெழுத்தாளர் | 01 |
| 4. | எழுதுநர் | 01 |
| 5. | நீதிமன்ற எழுதுநர் | 01 |
| 6. | தட்டெழுத்தாளர் | 01 |

| | | |
|---|---|---|
| 7. | அலுவலகப்பணியாளர் | 01 |
| மொத்தம் | | 07 |

**அறிமுகமும் பணிகளும்**

i. நட்டஈடு தொடர்பான காணிகளது உரித்துகளின் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்

ii. உரிமைகள், நட்டஈடு பகிர்ந்து செல்லுதல் மற்றும் மரணச்சொத்து வழக்கு தொடர்பான (நட்டஈடுகளுக்கு ஏற்புடையதாக) விசாரணைகளை மேற்கொள்ளுதல்

iii. வெளிப்படுத்துநர்களிடமிருந்து இறுதியாக ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் பொருட்டு நட்டஈடு செலுத்தல்

iv. காணி கையளிப்புகள், விற்பனைகள் ஆகியவற்றுக்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்

**<u>பிரிவின் கடமைப்பொறுப்பகள்</u>**

**இப்பிரிவின் கடமைப்பொறுப்புகள் இரண்டு பகுதிகளை கொண்டமைந்துள்ளது**

01. ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் பொருட்டு நட்டஈடு செலுத்தல். (நட்டஈட்டுப்பிரிவு)
02. ஆணைக்குழுவிற்குரிய காணிகளை விற்பனை செய்தல், குத்தகைக்குவிடுதல் என்பவற்றுக்காக பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து அறிக்கைகளை கோருதல்.

**<u>கடமைப்பொறுப்பு 01</u>**

ஐ. i. வெளியிடப்பட்டுள்ள காணிகளிலிருந்து ஆணைக்குழுவிற்குரிய காணிகள் தொடர்பாக நட்டஈடு செலுத்துவதற்கு பணியாற்றுதல்

இதற்காக 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தில் 29 ஆவது பிரிவு தொடக்கம் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள 42 ஆவது பிரிவு மூலம் அளிக்கப்பட்டுள்ள சட்டத்துடனான ஒதுக்கீடுகள் மற்றும் திருத்தச்சட்டம் மூலம் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களை பயன்படுத்தப்படுகிறது.

**கடமைப்பொறுப்பகள் 02**

2. i. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் காணிகளை விற்பனை செய்தல், குத்தகைக்குவிடுதல், அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல், குறித்த மதிப்பீட்டு பெறுமதிகள், எதிர்கால நடவடிக்கைகளின் பொருட்டு காணி கையளிப்பு, காணிகளின் உச்ச எல்லை மற்றும் கருத்திட்டப்பிரிவிடம் அறிக்கையிடுதல்.

ii. மேற்படி 02 ஆவது நடைமுறைக்கு மேலதிகமாக குத்தகை திருத்தம் செய்வதற்கு சனாதிபதி செயலாளரின் SEI/A/4/34 இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள வாறு குத்தகையை திருத்தம் செய்வதற்காக பணியாற்றுதல். (பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளை கோருவதற்கு அமைவாக)

iii. மரங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மொத்த மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல்

## 2013 ஆம் ஆண்டின் செயல்நிறைவேற்றுகை

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | பௌதீக | | | | நிதிசார் காணி விற்பனை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணி குத்தகைக்கு விடுதல் | விற்பனைகள் | குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல் | நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் | குத்தகைக்கு வழங்குதல் ரூபா | மாற்றங்களின் பேரில் விற்பனை ரூபா | விற்பனைகள் ரூபா. | ஏனைய உழைப்புகள் ரூபா | செலுத்தல்கள் ரூபா |
| 01 | மதிப்பீடுகள் கோருதல் | 58 | 209 | 22 | | | | | | |
| 02’ | வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் | 38 | 154 | 33 | | 305”739”750’00 குத்தகை முன்னேற்றம் 4% மற்றும் 6% | 134”728”511’00 | 83”364”700’00 | | |
| 03 | குத்தகை திருத்தங்கள் | | | | | | | | 16”086”951’00 | |
| 04 | மரங்களின் மதிப்பீடு | | 36 | | | | | | 996”663’91 | |
| 05 | கருங்கற்கள் மற்றும் ஏனைய | - | - | - | | | | | 8”480”000’00 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | செவை கட்டணங்களின் உழைப்பு | - | - | - | | | | | 5”606”858’00 | |
| 07 | வெளிப்படுத்துநர்களின் பொருட்டு நட்டஈடு செலுத்தல் | - | - | - | 17 | | | | | 6’536’713’59 |

## 07.காணி கையளிப்பு பிரிவு

❋ **அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிப்பணிப்பாளர் | 03 |
| 2. | பதவிநிலை உதவியாளர் | 04 |
| 3. | எழுதுநர்கள் | 18 |
| 4. | தட்டெழுத்தாளர் | 03 |
| 5. | அலுவலக பணியாளர் | 01 |
| **மொத்தம்** | | **29** |

**கடமைப்பொறுப்புகள்**

i. வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு நபர்களிடம் காணிகளை கையளித்தல்

ii. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு காணிகளை விற்பனை செய்தல் / குத்தகைக்குவிடுதல்

iii. விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு காணித்துண்டுகளை விற்பனை செய்தல்

iv. காணி கச்சேரிகளை நடாத்துதல் மற்றும் அனுமதியற்ற ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்

v. அளவை கட்டளைகள் தொடர்பான நடவடிக்கைகள்

vi. அளவை தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குதல்

vii. மாவட்ட அலுவலகங்களுக்கு கள அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல்

viii. அளவை திட்டங்களுக்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்

ix. அத்துமீறல் குடியிருப்பாளர்கள் தொடர்பான பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தல் மற்றும் பின்னாய்வுகளை மேற்கொள்ளுதல்

x. அனுமதியின்றி குடியிருப்பவர்களை அகற்றுதல், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விசாரணைகளை நடாத்துதல்.

xi. கா. ஒழுங்குப்படுத்தல் படிவங்களை பெற்றுக்கொள்ளுதல், கண்காணித்தல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xii. பின்னுரித்தாளிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xiii. காணி விற்பனை விண்ணப்பங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xiv. மாவட்ட அலுவலகங்களின் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகள்

i. விற்பனை

| | | **ஆட்களின் எண்ணிக்கை** | **அளவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **ஏக்.** | **ரூட்.** | **பேச்** |
| i. | வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு நபர்களிடம் கையளிப்பதற்காக உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | **3800** | **1903** | **0** | **00** |
| ii. | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு காணி விற்பனைக்காக உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | **20** | **500** | **0** | **00** |
| iii. | நபர்களிடம் விற்பனைக்காக (வயல் காணிகள்) உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | **35** | **61** | **0** | **00** |

**8' கருத்திட்டப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 2. | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 3. | எழுதுநர் | 04 |
| 4. | கள அலுவலர் | 01 |
| 5. | தட்டெழுத்தாளர் | 01 |
| 6. | பயிலுநர்கள் | 02 |
| 7. | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 11 |

அறிமுகமும் கடமைப்பொறுப்புகள்

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணிகளை குத்தகைக்கு விடும் போது (கருத்திட்டங்களின் பொருட்டு) கடைபிடிக்கப்படும் உரிய முறைமைக்கு அமைவாக காணிகளை குத்தகைக்குவிடுதல்.

ii. கருத்திட்டங்களின் பொருட்டு காணிகளை குத்தகைக்கு விடுவதற்கு முதல் கருத்திட்ட குழுவிடம் சமர்ப்பித்தல்

iii. பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக உரிய அறிக்கைகளை தயாரித்தல்

iv. விடயபொறுப்பு அமைச்சரின் அனுமதிக்கு சமர்ப்பித்தல்

v. மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்

vi. குத்தகை பணத்தை அறவீட்டு முறையான வாடகை உடன்படிக்கையை வழங்குதல்

**<u>2013’01’01 ஆந் திகதி தொடக்கம் 2013’12’31 ஆந் திகதி வரை முன்னேற்றம்</u>**

1. பல்வேறு கருத்திட்டங்களின் பொருட்டு 378 ஏக்கர் 0 ரூட் 06.4 பேர்ச் இற்காக அளவை கட்டளைகள் 70 வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டுள்ள

| | | | |
|---|---|---|---|
| I. | கைத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு | - | 09 |
| II. | விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு | - | 02 |

3. குத்தகை உடன்படிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

| | | | |
|---|---|---|---|
| I. | கைத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு | - | 37 |
| II. | விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு | - | 46 |
| III. | கனிம வளங்கள் | - | 10 |
| IV. | ஏனைய விடயங்களின் பொருட்டு குத்தகைக்குவிடுதல் | - | 18 |

## 09’ உறுதிப்பிரிவு

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சட்ட உதவியாளர் | 01 |
| 2 | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 3 | எழுதுநர் | 08 |
| 4 | தட்டெழுத்தளர் | 01 |
| 5 | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 12 |

**அறிமுகமும் பணிகளும்**

**நோக்கங்கள்:-**

விவசாய நடவடிக்கைகள், வீடமைப்பு நோக்கங்கள் மற்றும் விவசாயமல்லாத நடவடிக்கைகளின் பொருட்டு குத்தகை அடிப்படையிலும் விற்பனை அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் என்பவற்றுக்காக காணிகளை அகற்றப்படுவதுடன் அவ்வாறு மேற்கொள்கின்ற அகற்றப்படுதல்கள் உறுதிகள் தயாரிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

கடமைப்பொறுப்புகள்:-

நாட்டில் எல்லா மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் 2013 ஆம் ஆண்டில் 3500 இற்கு அண்மித்த பயனுகரிகளுக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக இதன் படி இப்பிரிவால் ஏறத்தாழ 55000 இற்கு அண்மித்த பயனுகரி குடும்பங்களுக்கு காணிகளின் உரித்து வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் அந்தந்த மாவட்டங்களின் படி வழங்கியுள்ள உறுதிகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

2. 2013 ஆண்டில் வழங்கிய உறுதிகளின் எண்ணிக்கை

| மாவட்டம் | உறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 122 |
| கம்பகா | 341 |
| கேகாலை | 365 |
| களுத்துறை | 185 |
| மாத்தளை | 85 |
| பதுளை | 251 |
| குருணாகல் | 220 |
| புத்தளம் | 385 |
| கண்டி | 385 |
| நுவரெலியா | 218 |
| அநுராதபுரம் | 60 |
| மட்டக்களப்பு | 103 |
| அம்பாறை | 102 |
| திருகோணமலை | 15 |
| மாத்தறை | 110 |
| அம்பாந்தோட்டை | 45 |
| காலி | 218 |
| இரத்தினபுரி | 111 |
| மொணராகலை | 98 |
| எம்பிலிபிட்டிய | 81 |
| மொத்தம் | **3500** |

iv. 2012 ஆம் ஆண்டில் உறுதிகளை வழங்கியதன் பின்னர் வங்கி கடிதங்கள் மற்றும் கையளிப்பு கடிதங்கள் வழங்கியதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்

| மாதம் | வருமானம் |
|---|---|
| சனவரி | ரூபா. 98”500’00 |
| பெப்ரவரி | ரூபா. 99”000’00 |
| மார்ச் | ரூபா. 82”000’00 |
| ஏப்பிரல் | ரூபா. 66”000’00 |
| மே | ரூபா. 110”500’00 |
| யூன் | ரூபா. 97”000’00 |
| யூலை | ரூபா. 93”000’00 |
| ஆகஸ்ட் | ரூபா. 102”000’00 |
| செப்தெம்பர் | ரூபா. 99”500’00 |
| ஒக்டோபர் | ரூபா. 91”000’00 |
| நவம்பர் | ரூபா. 93”500’00 |
| திசெம்பர் | ரூபா. 82”000’00 |
| மொத்தம் | ரூபா. **1”114”000’00** |

8. **10’ <u>அளவைகள் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவு</u>**

**அமைப்பு**

| **தொடர் இலக்கம்** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | அளவை ஆலோசகர் | 01 |
| 2 | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 3 | எழுதுநர் | 02 |
| 4 | தட்டெழுத்தாளர்’ | 01 |
| மொத்தம் | | 05 |

**கடமைகள்**

வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு காணிகளை வழங்குதல், வர்த்தக, விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை குத்தகைக்கு விடுதல், நியதிச்சட்ட முறையிலான தீர்ப்புகளுக்கு வழங்க வேண்டிய காணிகளை அளவிடுதல் மற்றும் அதனைச்சார்ந்த நடவடிக்கைகளை கூட்டிணைத்தல் என்பன இப்பிரிவின் கடமைப்பொறுப்புகளாகும். மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நிள அளவையாளர்களின் பட்டியலை வருடாந்தம் நாளதுவரைப்படுத்தி அவர்களின் சேவையை பெற்றுக்கொள்கின்றனர். இதனைத்தவிர்ந்த அரசாங்கத்தின் நிள அளவையாளர் திணைக்களம் மற்றும் பிம்சவிய உள்ளிட்ட ஏனைய அரசாங்க துறையின் காணிகளை அளவிடும் நடவடிக்கைகளை கண்காணித்தல் இப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று இப்பிரிவு மூலம் 2013 ஆம் ஆண்டில் ஏறத்தாழ மொத்தமாக 3384 ஏக்கர் காணிகளை விற்பனை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

i. அனைத்து மாவட்டங்களிலும் அளவை நடவடிக்கைகளின் பொருட்டு ஆலோசனை வழங்கி கண்காணித்தல் மற்றும் ஒவ்வொரு காணிகளின் பொருட்டும் அளவைப்படங்களை பரிசீலனை செய்து அங்கீகரித்தல்

ii குத்தகைக்குவிடுதல், நியதிச்சட்ட தீர்ப்பு மற்றும் குடும்பத்தில் கையளிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்குதல்

iii. தேவைக்கேற்ப களத்தின் அளவை நடவடிக்கைகள், காணிகளை இனம்காணுதல் என்பவற்றுக்காக கள அலுவல்களில் ஈடுபடுதல்.

iv. காணி உச்ச எல்லையின் கீழ் உறுதிகளை தயாரித்தல்

## 2013 ஆம் ஆண்டில் அளவைகள் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவின் முன்னேற்றம்

| மாதம் | அங்கீகரிக்கப்பட்ட அளவைகள் | துண்டுகள் | அளவு | | | | திருத்தங்கள் | வழங்கிய பிரதிகளின் எண்ணிக்கை | அதற்காக அறவிடப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | ரூட் | பேர்ச் | ஹெக்டெயார் | | | |
| சனவரி | 41 | 541 | 209 | 0 | 30 | 84”6583 | 10 | 50 | 62”000’00 |
| பெப்பரவரி | 53 | 353 | 309 | 0 | 30 | 125’1214 | 03 | 29 | 40”000’00 |
| மார்ச் | 49 | 426 | 189 | 2 | 13 | 76’7195 | 07 | 45 | 60”000’00 |
| ஏப்பிரல் | 29 | 371 | 144 | 1 | 22 | 59’4298 | - | 21 | 25”000’00 |
| மே | 34 | 190 | 121 | 0 | 01 | 48’8664 | 12 | 23 | 30”000’00 |
| யூன் | 29 | 200 | 56 | 2 | 04 | 22’8778 | 18 | 27 | 29”000’00 |
| யூலை | 47 | 357 | 202 | 0 | 33 | 81’8282 | 06 | 83 | 91”000’00 |
| ஆகஸ்ட் | 39 | 167 | 714 | 0 | 20 | 288’9902 | 07 | 65 | 97”000’00 |
| செப்தெம்பர் | 55 | 451 | 431 | 1 | 37 | 174’6128 | 08 | 54 | 56”000’00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒக்டோபர் | 35 | 415 | 216 | 0 | 02 | 87’4154 | 07 | 26 | 35”000’00 |
| நவம்பர் | 49 | 655 | 430 | 1 | 01 | 174’1196 | 13 | 39 | 45”000’00 |
| திசெம்பர் | 32 | 956 | 360 | 1 | 22 | 145’8418 | 04 | 32 | 44”000’00 |
| **மொத்தம்** | **492** | **5082** | **3384** | **1** | **15** | **1370’4812** | **95** | **494** | **614”000’00** |

**11’ சட்டப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பணிப்பாளர் | 01 |
| 2. | சட்ட அலுவலர் | 01 |
| 3. | சட்ட உதவியாளர் | 01 |
| 4. | பதவி நிலை உதவியாளர் | 01 |
| 5. | நீதிமன்ற எழுதுநர் | 01 |
| 6. | எழுதுநர் | 04 |
| 7. | தட்டெழுத்தாளர் | 02 |
| 8. | கள அலுவலர் | 01 |
| 9. | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 13 |

**I. அறிமுகம் (-**

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், தொழில் நியாய சபை, தொழிலாளர் பிணக்குகள், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஓம்புட்ஸ்மன் ஆகிய நிறுவனங்கள் மூலம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு எதிராகவும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் நபர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் என்ற வகையில் சட்டத்துடனான 535 தொழிற்பாடுகளின் பொருட்டு கடிதக்கோவைகளை தயாரித்தல், அறிக்கைகளை சமர்ப்பித்தல், பிரதிநிதி தொடர்பான நடவடிக்கைகள், வழக்குகளில் தோற்றுதல், சட்ட ஆலோசனைகள், பல்வேறு கையளிப்புகளின் பொருட்டு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள், ஆணைக்குழுவிற்கெதிராக உள்ள வழக்குகள்

தொடர்பில் செயற்படுதல் மற்றும் ஆணைக்குழுவால் தொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பில் செயற்படுதல் சட்டப்பிரிவின் பிரதான கடமைகளாகும்.

ii. கடமைகள்

- ❋ வழக்குகளின் பொருட்டு நீதிமன்றத்தில் தோற்றுதல்
- ❋ மாவட்ட அலுவலகங்களுக்கு ஏற்புடையதான வழக்குகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளை கூட்டிணைத்தல்
- ❋ நிறுவனத்தின் சட்டங்கள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல்

iii. வழக்குகளை குறைத்துக்கொள்வதற்கு மேற்கொண்ட செயற்பாடுகள்

- ❋ அளவைகளை வரைப்படமாக்கும் போது சரியான முறைமையியலை கடைபிடித்தல்
- ❋ கள அலுவலர்களை பயிற்றுவித்தல்
- ❋ சட்டத்துடனான அனுபவங்களை பிரிவுகளுக்கிடையில் பரிமாற்றிக்கொள்ளுதல்
- ❋ மாவட்ட அலுவலகங்களுடன் வழக்கு தொடர்பாக கலந்துரையாடல்

| | **2013.01.01 திகதி உள்ள வாறான வழக்குகள்** | **2013 ஆண்டிற்குள் முடிவுற்ற வழக்குகள் மற்றும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள வழக்குகள்** | **2013 ஆம் ஆண்டிற்குள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்** | **2013.12.31 திகதி உள்ளவாறான வழக்குகள்** |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 17 | 06 | 08 | 19 |
| மேம்முறையீட்டு நீதிமன்றம் | 32 | 07 | 11 | 36 |
| மேல் நீதிமன்றம் | 11 | - | - | 11 |
| வர்த்தக மேல் நீதிமன்றம் | 02 | ) | - | 02 |
| மாவட்ட நீதிமன்றம் | 417 | 01 | 08 | 424 |

| | | | | |
|---|---|---|---|---|
| நீதிவான் நீதிமன்றம் | 05 | - | - | 05 |
| சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் | 16 | 03 | 10 | 23 |
| ஆரம்ப நீதிமன்றம் | 01 | - | - | 01 |
| தொழில் நியாய சபை | 09 | - | 01 | 10 |
| மனித உரிமைகள் ஆணைக்குள் | 03 | 03 | 02 | 02 |
| ஓம்புட்ஸ்மன் | 01 | 01 | 01 | 01 |
| தொழில் திணைக்களம் | 01 | 01 | 01 | 01 |
| **மொத்தம்** | **515** | **21** | **42** | **535** |

**12’ புலனாய்வுப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | **ixLHdj** |
|---|---|---|
| 1. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 2. | எழுதுநர் | 01 |
| 3. | தட்டெழுத்தாளர் | 01 |
| 4. | கள அலுவலர் | 02 |
| 5. | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 06 |

## 1. கடமைகள்

i. நபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறும் காணி முறைப்பாடுகள் தொடர்பாக கள விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

ii. அதற்கான தரப்புகளை வரவழைத்து விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடைமுறைகளை பிரேரணை செய்தல்

iii. பிரச்சினைகள் தொடர்பான கள விசாரணைகள், இட விசாரணைகள் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்

i. மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் எண்ணிக்கை - 53

ii. எதிர் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள எண்ணிக்கை - 13

iii. வாகன விபத்துகள் தொடர்பாக மேற்கொண்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை - 03

## 13. நிதிப்பிரிவு அமைப்பு

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கணக்களார் | 01 |
| 2. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 3. | பதவிநிலை உதவியாளர் | 02 |
| 4. | எழுதுநர் | 05 |
| 5. | கணக்கு அலுவலர் | 04 |
| 6. | தட்டெழுத்தாளர் | 01 |
| 7. | அலுவலக பணியாளர்கள் | 01 |
| மொத்தம் | | 15 |

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சகல அலுவலர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் படிகள் ஆகியவற்றை செலுத்தல்

ii. உத்தியோகத்தர்களுக்கு உரிய ஊழியர் சேம நல நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை உரிய திகதிகளில் வைப்புச்செய்தல்

iii. மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரித்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல்

iv. மாதாந்த வங்கி கணக்கிணக்கு கூற்றுகளை உரிய திகதியில் தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்

v. மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு கூற்றுகளை கணக்காய்வாளர் அதிபதி மற்றும் அமைச்சிடம் அனுப்பி வைத்தல்

vi. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெறும் வருமானங்களை தேவையானவைகளுக்கு மட்டும் செலவிட்டு மீதியை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

20 மாவட்ட அலுவலகங்களில் நிதி நிர்வாகம், கண்காணிப்பு, ஆலோசனை வழங்குதல் மற்றும் இருப்பு புத்தகங்களை பேணிச்செல்லுதல்

vii. இறுதி கணக்கு அறிக்கைகளை தயாரித்தல்

viii. இலங்கை வங்கி, பொதுதிறைசேரி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, போன்ற நிதி நிறுவனங்களுடன் கூட்டிணைப்பு

ix. கொள்வனவு நடவடிக்கைகள்

**14’ வருமானம் பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பணிப்பளார் | 01 |
| 2. | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 3. | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 4. | எழுதுநர் | 03 |
| 5. | தட்டெழுத்தாளர் | 01 |
| 6. | அலுவலக பணியாளர் | 01 |
| மொத்தம் | | 08 |

i. காணிகளை குத்தகைக்குவிடுதல், விற்பனைகள் மூலம் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல், நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ii. கனியவளங்கள் மற்றும் வேறு வருமான வழிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iii. காணி கையேற்பு விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iv. கண்டறியாதுள்ள காணிகளை கண்டறிந்ததன் பின்னர் அதில் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல்

2012.12.31 ஆந் திகதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதி முன்னேற்றம்

| **விபரம்** | **2012 ஆண்டு (ரூபா')** | **2013 ஆண்டு (ரூபா)** |
|---|---|---|
| காணிகளை குத்தகையில் விடல் | 71,782,105.00 | 61,624,696.00 |
| இரத்தினக்கல் நிலங்களை குத்தகையில் விடல் | 1,402,000.00 | 2,042,000.00 |
| காணி விற்பனை மற்றும் சுவீகரிப்பு நட்டஈடுகள் | 157,535,344.00 | 88,985,633.00 |
| ஏனைய வருமானங்கள் | 22,115,571.00 | 66,010,294.00 |

## 2013.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக

## வருமான செலவின கூற்று

| | விபரம் | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| உழைப்பு | 1 | 218,662,622.17 | 252,835,020.58 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 2 | 99,576,554.08 | 64,502,778.11 |
| **மொத்த வருமானம்** | | **318,239,176.25** | **317,337,798.69** |
| | | | |
| **செலவினம்** | | | |
| நிர்வாக செலவுகள் | 3 | 190,546,334.52 | 170,365,243.30 |
| வழங்கல் மற்றும் தேவையான பொருட்கள் | 4 | 11,798,272.18 | 8,478,882.85 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 5 | 9,633,455.50 | 4,119,569.62 |
| நிதிசார் செலவுகள் | 6 | 5,313,742.73 | 4,642,921.18 |
| **மொத்த செலவு** | | **217,291,804.93** | **187,606,616.95** |
| | | | |
| **மேலதிகம்** | | 100,947,371.32 | **129,731,181.74** |
| | | | |
| **காலப்பகுதிக்கு ஏற்புடையதான தேறிய மேலதிகம்** | | 100,947,371.32 | **129,731,181.74** |
| | | | |
| 2013'01'01 ஆந் திகதியில் ஆரம்ப தேறிய மேலதிகம் | | 628,993,676.78 | 461,253,640.69 |
| | | | |
| **2013'12'31 ஆந் திகதியில் ஒதுக்கத்தின்** | | **729,941,048.10** | **590,984,822.43** |

| மேலதிகம் | | | |
|---|---|---|---|
| | | | |

## 2013.12.31 ஆந் திகதியில் ஐந்தொகை

| | விபரம் | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | _ | - | - |
| ***<u>நடைமுறை சொத்துக்கள்</u>*** | _ | | |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை | 7 | 76,403,934.92 | 36,058,628.09 |
| கிடைக்கப்பெற வேண்டிய வட்டி | 8 | 21,611,809.68 | 19,162,821.25 |
| கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் | | 15,386,290.94 | 29,731,610.01 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 9 | 2,218,340,803.23 | 2,165,434,692.52 |
| நடைமுறை கணக்குகள் | | - | 3,912,615.00 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 10 | 53,778,155.89 | 49546252.75 |
| இருப்புகள்-எழுதுகருவிப்பொருட்கள் | 11 | 1,439,845.04 | 1,722,525.48 |
| | | | |
| | | | |
| ***<u>நடைமுறையல்லாத சொத்துக்கள்</u>*** | - | | |
| முதலீடுகள் | 12 | 881,288,212.63 | 773,092,619.54 |
| சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் | 13 | 59,045,340.66 | 36,084,138.62 |

| | | | |
|---|---|---|---|
| காணிகள் | | 676,169,345.33 | 676,169,345.33 |
| - | - | | |
| | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | **4,003,463,738.32** | **3,790,915,248.59** |
| | | | |
| **<u>பொறுப்புகள்</u>** | - | | |
| | | | |
| ***<u>நடைமுறை பொறுப்புகள்</u>*** | - | - | - |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 14 | 95,361,624.55 | 90,600,701.66 |
| குத்தகை கடன்தருநர்கள் | 15 | 9,051,847.79 | 4,367,565.12 |
| | | | |
| | | | |
| | | | |
| ***<u>நடைமுறையல்லாத பொறுப்புகள்</u>*** | - | | |
| பணிக்கொடை ஒதுக்குதல் | 16 | 37,749,580.00 | 31,950,322.50 |
| குத்தகை கடன்தருநர்கள் | 17 | 10,095,929.37 | 3,649,907.51 |
| நட்டஈட்டு எதிர்பாரா கணக்கு<br>கட்டம் 01 | | 119,139,914.66 | 126,561,890.82 |
| பணிக்கொடை செலுத்தல்<br>கட்டம் 11<br>(நட்டஈட்டு எதிர்பாரா கணக்கு கட்டம் 11) | | 109,959,492.95 | 109,959,492.95 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | - | | |
| | | | |
| **தேறிய பெறுமதி** | | | |
| அரச பங்களிப்பு மற்றும் திறைசேரி அளிப்புகள் | 18 | 1,964,075,000.00 | 1,964,075,000.00 |
| ஒதுக்கங்கள் | 19 | 928,089,300.90 | 868,765,545.60 |
| மொத்த மேலதிகம் | | 729,941,048.10 | 590,984,822.43 |
| | | | |
| | | | |
| **தேறிய சொத்துக்கள் மற்றும்……** | | **4,003,463,738.32** | **3,790,915,248.59** |

…………………………..                ……………………….. ….

பணிப்பாளர்/நிதி                தலைவர்

காணிச்சீர்திருத்த ஆணைக்குழு                காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

මගේ අංකය
எனது இல. } LP/F/LRC /1/FA/13/07
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2015 பெப்ரவரி 16
Date

தலைவர்,

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1972 இன் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு 2014 செப்தம்பர் 26 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று மற்றும் நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 25(ஆ) பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள், அருவச் சொத்துக்கள் மற்றும் ஏனைய நீண்டகாலச் சொத்துக்கள் என்பவற்றை விற்பனை செய்தமையால் பெற்ற பணத்தை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 2,974,443 தொகையான பெறுமதி அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் காணி விற்பனையின் போது பெறப்படும் முழுப் பணத்தையும் ஆணைக்குழுவின் வருமானமாக கணக்கு வைக்கும் கொள்கை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விற்பனை செய்யப்பட்ட காணியின் கிரயத்திற்காக சீராக்கம் செய்யப்படாமையால் நிதி நிலைமை மற்றும் நிதி விளைவுகள் என்பன சரியான நிலைமையை காண்பிக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 904,437,579 தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 148,309,388 தொகையும் விற்பனை வருமானமாக கிடைத்திருந்ததுடன், ஆணைக்குழுவின் ஏனைய சொத்துக்களும் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 2,974,445 ஆக இருந்தது.

(ஆ) அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதாக கணக்கு குறிப்புக்கள் மூலம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத பல சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டன. அவ்வாறு கண்டறியப்பட்டவைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கணக்குகளைத் தயாரிக்கும் போது பெற வேண்டிய வரி வருமானம் மற்றும் முன்னதாக கிடைத்த வரி வருமானம் என்பன சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறவேண்டிய மிகை அறவீடு எதுவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் இரண்டு கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை ரூபா 28,480,750 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட அலுவலகங்களில் அட்டுறு கட்டிட வாடகையான ரூபா 113,250 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

### 2.2.4 நிகழகத்தக்க பொறுப்புக்கள்

காணி உரித்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கொன்றின் முறைப்பாட்டாளர்களுக்கு ரூபா 148,715,363 தொகை செலுத்துவதற்கு 2009 ஆம் ஆண்டின் போது மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. குறித்த வட்டியுடன் செலுத்த வேண்டிய தொகை 2014 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்த போதிலும், இப்பொறுப்பிற்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இழப்பீட்டு தொங்கல் I ஆம் கட்டம் மற்றும் II ஆம் கட்டத்தின் கீழ் மொத்த பொறுப்புக்கள் ரூபா 229,099,408 ஆக இருந்த போதிலும், மதிப்பீடு மற்றும் இழப்பீட்டுப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகை வட்டியுடன் ரூபா 590,000,000 ஆக இருந்தது. இதன் பிரகாரம் ரூபா 360,900,592 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் இதன் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களின் சரியானதன்மையை சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| கணக்கு விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | |
| காணி | 676,169,345 | காணி தொடர்பான முழுமையான விபரங்களை உள்ளடக்கிய பட்டோலை |
| கட்டிடங்கள் | 4,586,223 | சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| கணனி மற்றும் உபபாகங்கள் | 6,771,162 | |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 857,543 | |
| மோட்டார் வாகனங்கள் | 75,443,715 | |
| அலுவலக உபகரணங்கள் | 19,436,340 | |
| நலன்புரி உபகரணங்கள் | 954,146 | |
| **கடன் மற்றும் முற்பணங்கள்** | | |
| லோஹோர் சீமாட்டி நிதியம் | 300,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| எரிபொருள் முற்பணம் | 185,000 | |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 8,270,356 | ஏற்பாடு செய்வதற்கான அடிப்படை |
| பெறவேண்டிய வருமானம் | 29,731,610 | விரிவான பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் |
| இழப்பீட்டு தொங்கல் கணக்கு | 229,099,408 | விரிவான பட்டோலை |
| காணி கையேற்றல் | 55,147,644 | |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,158,312,885 தொகையான வியாபார கடன்பட்டோர் மீதிகளுக்கும் 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,921,575 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதிகளுக்கும் ரூபா 8,270,356 அறவிடமுடியாக்கடன் ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், ஆணைக்குழுவால் அக்கடனை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், அக்கடனை அறவிடுவதற்குள்ள இயலுமை குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,135,598,154 தொகை 06 அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியுள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஆணைக்குழுவிற்கு தீர்வு செய்ய வேண்டிய மீதிகள் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) ஆணைக்குழுவின் 49 ஊழியர்களிடமிருந்து 2010 ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 732,056 கூட்டுத்தொகையான கடன் மீதிகளிலிருந்து எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டம் | |
| (i) 45 (i) (அ) (iii) ஆம் பிரிவு | ஆணைக்குழுவிற்குரிய விடயத்திற்குப் பொறுப்பான ஜனாதிபதி செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) 33 ஆம் பிரிவு | உரித்தை உறுதிப்படுத்தப்படாத 71 கோவைகளுக்காக இழப்பீடு மற்றும் வட்டித்தொகை என்பன சிவில் நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 11 ஆம் பிரிவு | நிலையான வைப்புக்களாக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 85,000,000 தொகை தொடர்பாக நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | ஆணைக்குழு பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத காரணத்தால் அதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது அறவிடப்படபட வேண்டிய வரி வருமானமான ரூபா 26,239,515 தொகை அரசிற்கு கிடைக்காமல் போயிருந்தது. |
| (ஈ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பணிப்பாளர் நிதி பதவி 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 134(3) | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | ஆணைக்குழுவின் 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், 2012, 2013 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 2 விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப புலனாய்வை மேற்கொள்வதற்காக 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்ததுடன், இறுதி அறிக்கைகள் 2014 சனவரி 31 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய அரச கொள்வனவு வழிகாட்டி கோவையின் 7.1 மற்றும் 7.11.1 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் வாகனமொன்று ரூபா 535,405 தொகை செலவு செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், கேள்வி மதிப்பீட்டு செயற்பாடுகள் மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள்வதற்குப் பதிலாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.6 ஆம் பந்தி | காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை தயாரித்து உரிய அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதுடன், அதன் பிரதிகள் உரிய அமைச்சு மற்றும் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 97,096,038 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 129,731,182 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 32,635,144 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காணி கையேற்றல் இழப்பீட்டு வருமானம் ரூபா 105,896,914 ஆலும் காணி வாடகை வருமானம் ரூபா 11,084,170 ஆலும் குறைந்தமை இந்த வீழ்ச்சிக்கு காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் 1 : 22.98 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலான நடைமுறைச் சொத்துக்களிலிருந்து 24 உருப்படிகளுக்குரிய ரூபா 2,158,312,885 அல்லது 90 சதவீதம் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் அறவீடுகள் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்ட பெற வேண்டிய கடன் மீதிகளைக் கொண்டிருந்ததுடன், அது மொத்த சொத்துக்களில் 54 சதவீதமாக இருந்தன. அதன் பிரகாரம் சபையின் நிதி நிலைமை கூற்றின் மூலம் நிறுவகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமை தொடர்பாக உள்ளவாறான நிலைமை பிரதிபலிப்பதாக நிச்சயிக்க முடியவில்லை.

(ஆ) ஆணைக்குழு மீளாய்வாண்டிற்காக சேகரிக்கப்பட்டிருந்த காணி வரி வருமானம் ரூபா 60,697,934 தொகையாக இருந்ததுடன், காணி விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 93,054,187 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வாடகை வருமானம் மற்றும் காணி விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் என்பன முறையே ரூபா 11,084,170 ஆல் அல்லது 15 சதவீதத்தாலும் ரூபா 8,334,076 ஆலும் அல்லது 8 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது பிரதேச செயலாளரால் கையேற்கப்பட்டிருந்த காணிக்காக காணி கையேற்றல் இழப்பீட்டு வருமானமாக ரூபா 55,147,644 கிடைத்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அந்த வருமானம் ரூபா 105,896,914 ஆல் அல்லது 65.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

நிதிக்கூற்றுக்களில் ஆணைக்குழுவிற்கு எதிராகவும் ஆணைக்குழுவினாலும் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 626 ஆக இருந்த போதிலும், பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கோரப்பட்ட தகவல்களின் பிரகாரம் வழக்குகளின் எண்ணிக்கை 435 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

ஆணைக்குழுவால் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்பவர்களுக்காக செலுத்த வேண்டிய இழப்பீடு தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய சில ஆண்டுகளில், இழப்பீட்டு தொங்கல் கணக்கு 1 இலிருந்து செலுத்தப்பட்டுள்ள முறை தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | இழப்பீட்டு தொங்கல் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா | இழப்பீட்டு தொங்கல் கணக்கின் இறுதி மீதி ரூபா | செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா | சதவீதமாக |
|---|---|---|---|---|
| 2009 | 142,437,351 | 140,769,719 | 1,667,632 | 1.17 |
| 2010 | 140,769,719 | 138,136,888 | 2,632,831 | 1.87 |
| 2011 | 138,136,888 | 131,287,683 | 6,849,205 | 4.96 |
| 2012 | 126,561,890 | 126,561,890 | 4,725,793 | 3.6 |
| 2013 | 119,139,915 | 119,139,915 | 7,421,976 | 5.86 |

1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்ட காணிகளுக்காக ஆணைக்குழுவினால் இழப்பீடு செலுத்தப்பட வேண்டிய போதிலும், கடந்த 5 ஆண்டுகளின் செயலாற்றலை பார்க்கும் போது இழப்பீட்டு தொங்கல் கணக்கு I இலிருந்து 5 ஆண்டுகளில் இழப்பீட்டுத் தொகை தீர்வு செய்தல் 1.17 சதவீதத்திலிருந்து 5.86 சதவீதம் வரையான குறைந்த வீச்சில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இழப்பீட்டு

தொங்கல் கணக்கு II இலிருந்து இழப்பீடு தீர்வு செய்யப்படாமல் இருந்ததுடன் ரூபா 109,959,493 தொகையான அதன் மீதி வருடக் கணக்காக மாற்றமுறாது காணப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக மேலும் 600 கோவைகளுக்கு அண்மித்த அளவில் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) உரித்து உறுதிப்படுத்தப்படாத 104 "கூற்று கோவைகளில்" 49 கோவைகளுக்குரிய 66,161 ஏக்கர் 01 ரூட் 28 பேர்ச் அளவிலான காணிக்காக இழப்பீட்டுத் தொகை ரூபா 3,136,963 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 55 கோவைகளுக்குரிய இழப்பீட்டு தொகை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் காணி விற்பனை வருமானத்தின் 60 சதவீதம் செயற்பாட்டு செலவினமாகவும் 40 சதவீதம் ஒதுக்கமாகவும் ஏற்பாடு செய்வதற்குரிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மோட்டார் சைக்கிளொன்றை விற்பனை செய்வதற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்தி மேலும் மூன்று வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளான வாகனமொன்று ரூபா 1,434,302 தொகை செலவிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன், அதன் இறுதி மதிப்பீட்டிற்காக ஜனாதிபதி செயலகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் காப்புறுதி இழப்பீட்டிலிருந்து மேவுகை செய்யப்படாத ரூபா 82,219 தொகை பரிசோதனை சபை பரிந்துரையின் பிரகாரம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவின் காணி குத்தகைக்கு வழங்குதல் மற்றும் விற்பனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நும்பஹறபிட்டிய தோட்ட காணியின் பகுதியொன்றில் 2010 ஆம் ஆண்டிலிருந்து அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருக்கும் காணியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த 03 ஏக்கர் 01 ரூட் 18.90 பேர்ச் அளவிலான காணியின் இன்னும் ஒரு பகுதிக்கு 2014 சனவரி 31 ஆம் திகதி வரை குத்தகை உடன்படிக்கையொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மொனரகலே தோட்டத்திலிருந்து 280 ஏக்கர், குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 2011 பெப்ரவரி மாதத்தின் போது தனியார் கம்பனியொன்றுக்கு முப்பது ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், கம்பனி குத்தகை முற்பணமாக ரூபா 1,000,000 தொகையை 2011 ஒக்தோபர் மாதத்தின் போது செலுத்தி காணிக்கு உரித்தாகியிருந்த போதிலும், உரித்தை பொறுப்பளிக்கும் சான்றிதழொன்று வழங்குவதற்கு அல்லது குத்தகை ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2013 மார்ச் மாதத்தில் 2011 முதல் 2016 வரையான காலப்பகுதிக்குரித்தாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 10,764,622 தொகையான குத்தகை தொகை 2014 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) லேலண்ட் தோட்ட காணியிலிருந்து 01 ரூட் 10 பேர்ச் அளவிலான காணி ரூபா 80,000 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு 2006 ஒக்தோபர் 20 ஆம் திகதி முதல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் குத்தகை ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு 2014 சனவரி 30 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) கெட்டன்தொல தோட்ட காணியிலிருந்து 25.6 பேர்ச் அளவிலான காணி 2003 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியில் ஆணைக்குழுவிற்குரித்தான ரூபா 260,000 இற்கு மதிப்பிடப்பட்ட கட்டிடத்தின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

மேலும் காணியின் எஞ்சிய பகுதியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருப்பதும் அவர்கள் எத்தகைய பணத்தையும் செலுத்தாமல் காணியின் உரித்தைப் பெற்றமையும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டதுடன், ஆணைக்குழு 1975 இன் 39 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு திருத்த அதிகாரச்சட்டத்தின் 42(ஈ) இன் 1, 2, 3, 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பிட்டகந்த தோட்டம் என்ற பெயரிலான காணியிலிருந்து 06 ஏக்கர் அளவில் 1979 செப்தம்பர் 19 ஆம் திகதி புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கையளித்தல் செயற்பாடு முறையாக மேற்கொள்ளப்படாமையால் ஆணைக்குழுவிற்கு எவ்வித பணமும் கிடைக்கவில்லையென தலைவரால் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் குறித்த காலப்பகுதியில் 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் காணியை ரூபா 5,400,000 இற்கு தனியார் கம்பனியொன்றுக்கும், அக்கம்பனியால் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 400,000 இற்கும் இன்னுமொரு கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், தற்போது காணி உரித்துடைய கம்பனியுடன் குத்தகை உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள ஆணைக்குழு 2014 நவம்பர் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன், ரூபா 4,444,622 ஆன குத்தகை தொகை தொடர்ந்தும் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(vi) மொனறாகலை மாவட்டத்தின் யாழ்போவ தோட்டத்திலிருந்து 196 ஏக்கர் 0 ரூட் 04 பேர்ச் அளவிலான காணி 1975 முதல் 1982 வரை சீனிக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) ஆணைக்குழுவால் 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் கையேற்கப்பட்டிருந்த கும்பல்கொட தோட்டத்தின் 2.02 ஹெக்டேயர் காணி 1986 செப்தம்பர் 02 ஆம் திகதிய 417/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 1986 ஆம் ஆண்டு சபையால் இக்காணி முப்பது வருட அடிப்படையில் நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2005 செப்தம்பர் 30 ஆம் திகதிய இரத்தினபுரி மாவட்ட பணிப்பாளரின் கடிதமொன்றின் மூலம் 12 ஏக்கர் அளவிலான கும்பல்கொட தோட்ட காணியில் 06 ஏக்கர் அளவில் வெளிக்களத்தில் வெறுமையாக காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அவ்விடயத்தை கருத்திற் கொண்டு ஏற்றுமதி பயிர் செயற்திட்டமொன்றை பேணிச் செல்வதற்காக சட்டரீதியற்ற முறையில் வேறொருவருக்கு அக்காணியை குத்தகைக்கு வழங்க ஆணைக்குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சட்டரீதியான குத்தகையாளருக்கு காணியை பயன்படுத்துவது தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(viii) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தனஹேன தோட்ட காணியில் 01 ஏக்கர் 02 ரூட் 09 பேர்ச் முப்பது வருட அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் அக்காணியை வேறு நிறுவனமொன்றிற்கு உப குத்தகைக்கு வழங்கியிருந்தது. ஆணைக்குழு காணியை புதிய கைத்தொழிலொன்றுக்கு குத்தகைக்கு வழங்க தீர்மானித்திருந்ததுடன், முன்னைய நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு குத்தகை வழங்கல் கையளிக்கப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளித்தரப்பினராலும் ஆணைக்குழுவின் 402 பதவியணி உறுப்பினர்களாலும் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வைப்பாக ரூபா 11,772,992 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 6,770,644 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று விபத்திற்குட்பட்டமையால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 682,681 தொகை மற்றும் ரூபா 620,050 தொகை செலவிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 517,363 தொகைக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் அத்திருத்தத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 2,261,900 இற்கு 2014 ஒக்தோபர் 02 ஆம் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. 04 ஆண்டுகளான குறுகிய காலப்பகுதியில் ரூபா 6,770,644 பெறுமதியான வாகனத்தை ஓட்டத்திலிருந்து அகற்றியமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

### 4.4 வெளிப்படையான மோசடிகள்

அம்பாறை மாவட்ட பணிப்பாளர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அறையில் கோவைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட காசுப் பற்றுசீட்டுப் புத்தகங்கள் 2011 திசெம்பர் 20 ஆம் திகதி களவாடப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது மாவட்ட பணிப்பாளர் தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருந்தார். 2011 ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்களுக்குரிய வங்கியிலிடப்படாத தொகை ரூபா 1,299,750 ஆக இருந்ததுடன், அத்தொகையை 2014 ஆம் ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் தலைவரின் கட்டளைப் படி மாவட்ட பணிப்பாளரிமிருந்து ஆணைக்குழு அறவிட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் 3 மாதங்களுக்குரிய வருமானமாக ரூபா 14,480 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதிக்கு ஆணைக்குழுவிற்கு குறிப்பாக கிடைக்க வேண்டியிருந்த வருமானம் எவ்வாளவு என்பது தொடர்பாக கண்டுபிடிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இந்த மாவட்ட பணிப்பாளர் தொடர்பாக, ஆணைக்குழு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணனி மென்பொருள் பொதியொன்றை கொள்வனவு செய்வதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு 2002 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,700,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் பரிசோதனையொன்று நடாத்தப்படுவதாகவும் இவ்வாறான நிறுவனமொன்று இல்லையென கணக்காய்வாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தலொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 ஒக்தோபர் 03 ஆம் திகதிய DMS/E2/01/7/008/2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 307 ஆக இருந்ததுடன், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை மிகைத்து சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த எண்ணிக்கை 107 ஆக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் 24 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இதில் 13 பதவிகள் பதவிநிலைத்தரத்திலான பதவிகளாக இருந்தன.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 07 செயற்பாடுகளுக்காக செலவின மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், சில செயற்பாடுகளுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள 08 செயற்பாடுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இலக்குகள் கால அட்டவணைக்கு ஏற்ப பிரிந்து செல்லும் முறை குறிப்பிடாமல் இருந்த சந்தர்ப்பங்களும் சில செயற்பாடுகளில் திரட்டிய இலக்கு இலக்கிடப்பட்ட கால அட்டவணைக்கு

ஏற்ப பரிந்து சென்று இலக்குகளின் கூட்டுத்தொகையுடன் இணங்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(இ) சட்டரீதியான பிரச்சினைகளுக்காக மதிப்பீடு திட்டமிடப்பட்டு இலக்குகள் வழங்கப்பட்டு அதனை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 10 செயற்பாடுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருந்ததுடன், 14 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 2 சதவீதம் முதல் 48 சதவீதம் வரையான குறைந்த வீச்சில் காணப்பட்டன. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தைக் காண்பிக்கும் அறிக்கையில் 03 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் அதற்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

2013 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 துறைகளை மேவுகை செய்வதற்கு தவறியிருந்தது.

## 5.3 கணக்காய்வு குழு

ஆணைக்குழு சனாதிபதி செயலகத்தின் கீழ் இருந்த போதிலும் அதன் பிரதிநிதி ஒருவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்ட உறுப்பினராக சமூகமளித்திருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களைப் பரீட்சிக்கும் போது வருமானத்தில் 1 சதவீதம் முதல் 4,405 சதவீதம் வரையான விலகலும் செலவினங்களில் 7 சதவீதம் முதல் 348 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

5.5 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுத் துறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வாகன நிர்வாகம்
(ஈ) பதிவேடுகளைப் பேணுதல்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

1A/G/406 LP/F/LRC/1/FA/13/07 2014.11.28

கணக்காய்வாளர் அதிபதி,

கணக்காய்வாளர் திணைக்களம்

பத்தரமுல்லை

**காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதி கூற்றுகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் 14(2)(சீ) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

மேற்கூறிய விடயம் தொடர்பாக தங்களால் எனக்கு அனுப்பி வைத்துள்ள 2014.11.12 ஆந் திகதிய கணக்காய்வாளரின் அறிக்கை வரையுள் பிரதியுடன் தொடர்புடையதாகும்.

குறித்த கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை வரையுள் பிரதியில் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பான விரிவான பதில் அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

2.2 **நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்**

2.2.1 **கணக்கீட்டு கொள்கைகள்**

(அ) ஆண்டுக்குள் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் மிக பழமை வாய்ந்ததால், அவற்றுக்கான செலவு தொடர்பான தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெறாமையால் அதன் செலவு மற்றும் திரண்ட தேய்மானம் என்பவற்றை சீர்செய்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுவதற்க இயலாதுள்ளது. 2013 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் 1990 ஆம் ஆண்டுகளில் எமக்கு கிடைக்கப்பெற வேண்டிய பணத்தொகையின் பொருட்டு நெய்யப்பட்ட மற்றும் பட்டு துணி நிறுவனம் பயன்படுத்திய பின்னர் எமக்கு கிடைத்த வாகனங்களாகும். அதன் கொள்வனவு விலை எவ்வளவு என்பது தொடர்பாக குறிப்பிடவில்லையென்பதுடன், கண்டறியும் ஆற்றலும் இல்லை.

(ஆ) காணி குத்தகை பணம் வருடாந்தம் எமக்கு செலுத்தப்பட வேண்டுமாயினும், அது நீண்டகாலமாக எமக்கு கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் குறித்த நிலுவை பணத்திற்கு 10% ஆன மிகைகட்டணம் அடங்கலாக குத்தகை பணம் கணக்கிடப்பட்டு அறவிடும்படி அறிவிக்கப்பட்டதால் இவ்வாறு மிகைகட்டணம் அறிவடப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன.

எம்மால் அறவிடப்படும் வருடாந்த குத்தகை பணத்தை முதலீட்டாளர்களுக்கு செலுத்த இயலாத போது, ஏனைய பொதுவான செயற்பாட்டு செலவுகளும் அதிகரித்து செல்கின்ற இவ்வாறான காலகட்டத்தில் 10% ஆன மிகை கட்டணம் செலுத்துவதற்கு சிரமமாக உள்ளதென குத்தகைக்காரர்கள் எம்மை அறிவுறுத்தியுள்ளனர். இந்த குத்தகை பணம்

வெறுமனே குத்தகை தொகையை நேரங்காலத்திற்கு செலுத்துவதற்காக குத்தகைக்காரர்களை ஊக்குவிப்பதற்கு ஆணைக்குழுவால் மேற்கொண்ட தீர்மானமாகும். இப் பணத் தொகையை உறுதியாக அறவிட முடியுமா என்பது தொடர்பாக குறித்துறைத்து தீர்மானிக்க முடியாதபடியால், இது கிடைக்கப்பெற வேண்டிய வரி வருமானத்தை கணிப்பீடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை. முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பணியாக கருதி ஆணைக்குழுவால் அவ்வப்போது மேற்கொள்கின்ற தீர்மானங்களின் மீது இந்த மிகை கட்டணத்தை அறவிடுவதா? இல்லையா?, நடைமுறை காரணிகளின் மீது குறைக்கப்பட வேண்டுமா என்று தீர்மானிக்கப்படும். அதன் படி மிகை கட்டணம் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அதனை வருமானமாக அடையாளம்காணுதல் கொள்கையாகும். எவ்வாறாயினும் நிதிசார் கூற்றுகளில் உள்ளடக்குதல் மற்றும் நடைமுறை நிலைமைகளின் கீழ் பொருத்தமான வேலைத் திட்டம் தொடர்பாக இனிவருங் காலங்களில் ஆணைக்குழு கவனத்தில் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(இ) கணக்கு வைப்பதற்காக அட்டுறு அடிப்படை கடைபிடிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 <u>கணக்கீட்டு குறைப்பாடுகள்</u>

(அ) நிலையான வைப்புகளின் பொருட்டு வட்டி சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது ஆணைக்குழுவிற்கு உரியதாக பல்வேறு வங்கிகளில் ஏறத்தாழ 89 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் உள்ளதுடன், இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விபரங்கள் எவ்வகையிலான முதலீட்டுடன் தொடர்புபட்டுள்ளது என்பது பற்றிய தகவல் போதுமற்றதால் உரிய விபரங்கள் சரியாக கிடைத்த பின்னர் விபரமாக அறிவிக்க முடியும்.

(ஆ) இந்த வைப்புக்கான வட்டி, வட்டி கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அதாவது, வைப்புகளை புதுப்பிக்கும் போது. மூலதனமாக்கப்படுவதால் அது வரை கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2014.09.03 ஆந் திகதியில் முதிர்வடைவதால் அன்றைய திகதியில் குறித்த வட்டி தொகைக்கு ஏற்புடையதாக கணக்கு வைக்கப்படும். அதுவரை கிடைக்கப்பெற வேண்டிய ரூபா.1,270,677/= வட்டி தொகை சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபா.79,444,335/= ஆன திறைசேரி உண்டியலுக்கான வட்டி தொகை கணக்கிடும் போது, நாட் கணக்கில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாக ரூபா.85,957/= ஆன தொகை அதிகமாக கணக்கிலிடப்பட்டுள்ளது. அதனை இனி வருங் காலங்களில் செவ்வைப்படுத்தி குறிப்பு வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஈ) பண்டிகை முற்பணம் மற்றும் பாடசாலை புத்தக கடன் என்பவற்றின் பொருட்டு உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா.3500/= ஆன தவணை பணம் விசேட பண்டிகை முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தற்போது செவ்வையாக்கப்பட்டுள்ளது. (இது 14(2)C அறிக்கையின் படி ரூபா.7000/= ம் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது ரூபா.3500/= ஆதல் வேண்டும்.

(உ) திருமதி என்.பீ.குமாரி அவர்களால் பெற்றுக்கொண்ட விசேட பண்டிகை முற்பணமான ரூபா. 4500/= ஆன தொகை பேரேடில் சரியாக குறிப்பிடப்பட்டு தற்போது அறவிடப்பட்டுள்ளது. செல்வி.கே.ஆர்.ஆர்.ஜீவனி அவர்களால் பெற்றுக்கொண்ட ஒரு மாத கடன் தொகையின் மீதியான ரூபா.6725/= ஆன தொகையும் செவ்வையாக குறிப்பிடப்பட்டு தற்போது அறவிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ரூபா.11225/= ஆன பணத்தெகை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், நிதிசார் கூற்றுகளுக்கு ஏற்புடையதான செவ்வைப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| திரு.டபிள்யூ.லியனகே | பண்டிகை முற்பணம் | ரூபா.2500/= | |
| | விசேட முற்பணம் | ரூபா.3000/= | |
| | பாடசாலை புத்தக கடன் | ரூபா.4062/= | |
| | | | ரூபா.9562/= |
| திரு.பி.எம்.தர்மரத்ன | பண்டிகை முற்பணம் | ரூபா.1000/= | |
| | விசேட பண்டிகை முற்பணம் | ரூபா.1000/= | |
| | | | ரூபா.2000/= |
| | | | ரூபா.11562/= |

ரூபா.11562/= ம் ஆன மேற்படி கடன் தொகை 2013.12.31 ஆந் திகதியில் பேரேடில் உள்ளடக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டுள்ளது. அதன் படி அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி இல்லை.

(ஊ) சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகளை தயாரித்து எமது கணக்கு அறிக்கைகளின் படி செவ்வையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(எ) அமய, தற்காலிக மற்றும் பயிலுநர் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்கள் தொடர்ச்சியாக நீடித்து சேவையில் ஈடுபடுத்திக்கொள்வதில்லை. 03 மாதங்களுக்கொரு

முறை அல்லது 06 மாதங்களுக்கொரு முறை தொடர்ச்சியில் வேறுபாடு ஏற்படும். இதன் போது சேவை நீடிப்பு நிரந்தரமானதா இல்லையா என்பது தொடர்பாக சரியாக கூற முடியாத படியால் இதற்காக சம்பளம் அட்டுறுபடுத்தப்படவில்லை. இனி வருங் காலங்களில் உரிய ஆண்டுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ள அலுவலர்களை அடிப்படையாகக்கொண்டு இதனை சரி செய்து கொள்வதாக அறியத் தருகின்றேன்.

(ஏ) இரத்தினபுரி பாம்காட் தோட்டத்திற்கு ஏற்புடையதான கட்டிடத்தின் பொருட்டான செலவு மூலதனப்படுத்திய போதும், அதற்கான தேய்மானம் கணக்குகளிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது. அதன் படி கட்டிடங்களின் தேய்மானம் ரூபா.26,051/= குறைந்துள்ளது. ஆண்டுக்குள் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் தேய்மானங்கள் கணக்கிடுதலை உரிய ஆண்டில் கணக்குகளில் தவறவிடப்பட்டுள்ளது. இதன் படி இந்த தேய்மான சீராக்கல் தற்போது கணக்குகளிலிருந்து செவ்வையாக்கிகொள்வதற்கு பணிப்பாளர்/நிதியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஐ) தற்போது நுவரெலியாவில் அமைந்துள்ள லிந்துல பங்கலா மதிப்பிடப்பட்டுள்ளது. இரத்தினபுரி பாம்காட்ன் தோட்டத்தில் அலுவலக கட்டிடத்தை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஒ) இந்த விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெற வேண்டிய பணத்தொகையின் பொருட்டு, 1990 ஆம் ஆண்டுகளில் நெய்யப்பட்ட மற்றும் பட்டுத்துணி கைத்தொழில் நிறுவனத்திடமிருந்து எமக்கு கிடைக்கப்பெற்ற பயன்படுத்திய வாகனங்களாகும். இந்த 03 வாகனங்களுக்கான செலவு எவ்வளவு என்பது தொடர்பாக அறிய முடியாதபடியால் அதற்கான செலவு மற்றும் திரண்ட தேய்மானம் சீராக்குவதற்கு முடியவில்லை. இது தொடர்பாக தங்களது திணைக்களத்தில் அலுவலர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி பணிப்பாளர்/நிதியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஓ) மேற்படி (எ) பதிலின் படி சம்பளம் கணக்கிடாத படியால் இது மாற்றமடைந்துள்ளது. இதனை இனி வருங் காலங்களில் செவ்வையாக்கி கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஔ) எல்.ஆர்.சீ. 181802 ஆம் இலக்க இரசீதுக்கு ஏற்புடையதான கிடைக்கப்பெறுதல்கள் திசெம்பர் மாதம் இரண்டு முறை பணப் பேரேடில் உள்ளடக்கப்பட்டமை இதற்கு காரணமாவதுடன், அது 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் வங்கி கணக்கிணக்கு கூற்று தயாரிக்கும் போது அறியவந்ததால் அதனை குறித்த மாதத்திற்குள் செவ்வையாக்கப்பட்டது.

(க) 2013.12.31 ஆந் திகதியில் எழுதுகருவி பொருட்களின் இருப்புகளை கணக்கிடும் போது மாவட்ட செயலகங்களில் மற்றும் பிரதான அலுவலகங்களில் மீதி இருப்புகள் கணக்கிடப்படும். இதன் போது மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதான அலுவலகங்களின் பிரிவுகளுக்கிடையில் பொதீக இருப்புகளின் ஒப்பாய்வு அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.

நிதி பிரிவில் உள்ள பிரதான களஞ்சியத்தில் அதிகளவிலான இருப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதிப் பிரிவின் இருப்புகள் ஆய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படினும், உரிய பிரிவின் மீதி எழுதுகருவிப் பொருட்கள் உள்ளடக்கப்படினும், களஞ்சியத்தில் உள்ள இருப்புக்கள் அதிகமாவதால் அதனை உள்ளடக்கப்படமாட்டாது. களஞ்சியத்தில் பெணிச் செல்லப்படுகின்ற பொருட் பதிவேடில் மீதி மற்றும் பௌதீக இருப்பு என்பவற்றை பரிசீலனை செய்து குறித்த பதிவேட்டின் செவ்வைதன்மை உறுதிப்படுத்தப்படும். அதன் படி கணக்குகளை தயாரிப்பதற்காக இருப்புகளின் பெறுமதியை குறிப்பிடுகின்ற மீதி பெற்றுக்கொள்ளப்படும். அதன் படி ரூபா.1,334,403/= ஆன மீதி களஞ்சியத்தில் 2013.12.31 ஆந் திகதியல் எழுதுகருவிப் பொருட்களின் இருப்புகளின் பெறுமதியாவதால் இது செவ்வையான தொகையாகும்.

### 2.2.3 <u>எதிர்பாராப்பின்னிகழ்வு பொறுப்புகள்</u>

ஆணைக்குழுவிற்கு உரியதாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக இனிவருங் காலங்களில் செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு தொகை தொடர்பாக எதிர்பாராப்பின்னிகழ்வு பொறுப்புகள் சபையிடம் இருப்பினும், குறித்த வழக்குகள் எந்தச் சந்தர்ப்பத்தில் முடிவடையும்? அதற்காக எவ்வளவு செலுத்தப்பட வேண்டும்? என்பது தொடர்பாக மதிப்பிட முடியாதபடியால் ஆணைக்குழுவிற்குரியதாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை மட்டும் நிதிசார் கூற்றுகளில் குறிப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விசேட வழக்கு தொடர்பான செலுத்தல்களுக்கு உரிய மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்படுவதுடன் அது தொடர்பாக அமைச்சரவை ஆலோசனைக்கமைவாக விசேட மேன்முறையீடொன்றை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 2.2.4 <u>தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்</u>

(அ) 1972 ஆம் ஆண்டு தொடக்கம் எம்மால் பல்வேறு நிருமாணிப்புகள் மற்றும் பேணுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பயன்படுத்தும் இக்கட்டிடத்திற்காக ஆரம்பத்தில் செலுத்தப்பட வேண்டிய வாடகை ரூபா.1400/=, ரூபா. 14000/= ம் போன்ற மிக குறைந்த பெறுமதியிலிருந்து ஒரே முறையில் ரூபா.280,000/=, ரூபா.330,000/= போன்ற தொகைக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே போன்று ஆணைக்குழுவால் 10 மில்லியனுக்கும் அதிகமாக

செலவிடப்பட்டு கட்டிடங்களையும் நிருமாணிக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒரே முறையில் அதிகளவு வாடகை தொகை செலுத்தலானது எமது நிறுவனத்திற்கு சிரமமாகும். ஆகையால் மேற்படி காரணங்களின் மீது குறித்த தொகையை நியாயமாக குறைப்பதற்கும், செலுத்தப்பட வேண்டிய தவணை தொகையை சலுகை காலப்பகுதிக்குள் செலுத்துவதற்கும் அரசாங்க நிர்வாக அமைச்சுடன் பல கலந்துரையாடல்களை நடாத்தப்பட்டுள்ளதுடன், தற்போதும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது. அதன் படி 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட தொகையை கணக்குகளில் சீராக்கப்படவில்லையென்பதுடன், 2012 ஆம் ஆண்டுக்கு பின்னரான ஆண்டுகளுக்கு உரியதான வாடகை நிலுவையின்றி இன்று வரை செலுத்தப்பட்டு கணக்கு வைத்தலையும் சரியாக மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) அண்ணளவாக மொத்த நட்டஈடு மற்றும் வட்டி தொகை 590 மில்லியன் ரூபா ஆவதுடன், இது சரியான எண்ணிக்கையல்ல என்பது அறிய வருகின்றது. பல்வேறு காலகட்டங்களில் மேற்கொண்டுள்ள மதிப்பீடுகளின் படி இது வேறுபட்ட தொகையை காட்டப்படுவதுடன், இது தொடர்பாக நீண்ட காலமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்துரையாடப்படுகிறது. அதன் படி நட்டஈடு செலுத்தப்பட வேண்டிய சரியான கடிதக்கோவைகளின் எண்ணிக்கையை அடையாளம் காணப்பட்டு செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு எவ்வளவு என கணக்கிடும் படி உரிய அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) வருமானப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு என்பவற்றின் குத்தகைக்கான பதிவேடுகளை விரிவாக பரிசோதனை செய்து உரிய மாற்றங்களை இவ்வாண்டுக்கு ஏற்புடையதாக கணக்குகளில் செவ்வையாக்கிகொள்வதற்கு கணக்குப் பிரிவிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) இனி வருங்காலங்களில் வருமானப் பிரிவின் அறிக்கைகளையும் நிதிப் பிரிவின் அறிக்கைகளையும் செவ்வையாக்கப்பட்டு ஒப்பீட்டு ரீதியாக அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டு அதன் படி கணக்கு அறிக்கைகளை செவ்வைபடுத்திக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வரி கிடைக்கப்பெறுதல் தொடர்பான விபரங்கள் வருமான பிரிவில் கடிதக்கோவைகளில் வெவ்வேறாக பேணிச் செல்லப்படுவதுடன், அவற்றை கணக்காய்வில் சமர்ப்பிப்பதற்கு முடியும்.

(உ) வருமான பிரிவின் அறிக்கைகள் மற்றும் நிதிப் பிரிவின் அறிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு வேறுபாட்டுக்கான காரணங்களை இனி வருங் காலங்களில் அறிக்கையிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஊ) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றின் ஆவணங்களும் கொடுப்பனவுகளும் செவ்வையாகும். நிதிக் கூற்றுகளில்

குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரியதான செலவு மற்றும் பொறுப்பு நிதியத்திற்கு உரியதான செலவு ரூபா.15,391.103.76/= ஆக வேண்டுமாயினும், ரூபா.15,355,252.52 கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அதன் படி வேறுபாடு ரூபா.75,734/= அல்ல ரூபா. 35,854.24 ஆகும். இது சம்பளக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தற்போது செவ்வையாக்கப்பட்டுள்ளது. இதன் போது ஊழியர்களுக்கான உதவுத்தொகை சரியாக உரிய கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

### 2.2.5 <u>கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்</u>

(அ) எமது ஆணைக்குழுவின் சொத்துக்களில் காட்டப்படும் கிடைக்கப்பெற வேண்டிய கடனாளிகளின் எண்ணிக்கை 2158 ஆகும். இந்த தொகை அரச மற்றும் பகுதி நேர அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறுதல் வேண்டும். இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை ஹதபிம அதிகார சபை, போன்ற அரச நிறுவனங்களுக்கு இந்த பணத் தொகை செலுத்தும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. வருடாந்த கணக்கு அறிக்கைகளின் படி கிடைக்கப்பெற வேண்டிய பண மீதிகளை உறுதிப்படுத்தி அனுப்பும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, என்பவற்றிடம் சுவிகரிக்கபப்ட்ட காணிகளை மீண்டும் குறித்த நிறுவனத்தால் தேசிய கால்நடை வளங்கள் சபை, தெங்கு அபிவிருத்தி சபை, கஜு கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிறுவனங்களில் தலைவர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டது. அதன் போது குறித்த நிறுவனங்களுக்கு போதியளவு ஒதுக்கீடுகள் இல்லாமையும், சரியான புள்ளிவிபரங்கள் இல்லாமையும் போன்ற பிரச்சினைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்காக சனாதிபதி செயலாளர் தலைமைத்துவத்தில் திறைசேரி அலுவலர்களையும் அழைத்து கலந்துரையாடும் படி கோரிக்கை முன் வைக்கப்பட்டதுடன், செயலாளரால் ஒவ்வொரு நிறுவனமிடமிருந்தும் கிடைக்கப்பெற வேண்டிய பணம் தொடர்பாக விபரங்கள் கோரப்பட்டுள்ளன. உரிய கடிதக்கோவைகளின் படி அதன் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் படி கிடைக்கப்பெற வேண்டிய பணம் பெற்றுக்கொள்ளுதல் தொடர்டபாக பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், தனிப்பட்ட ரீதியாக எமது ஆணைக்குழுவிற்கு மட்டும் தீர்மானிக்க முடியுமான பிரச்சினை இல்லையெனவும், இது பொதுவாக கொள்கை முறையிலான தீர்மானமொன்றை மேற்கொண்டு பொது திறைசேரியின் தலையீட்டுடன் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

தேர்தல் காணி சீர்திருத்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் தற்போது செலுத்தல்களை தீர்க்கப்படுகின்றன என அவ்வப்போது எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானம் படி இந்த அறவிடப்பட வேண்டிய கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாக கூட்டுறவு ஆணையாளரிடம் எழுதி அதன் பிரகாரம் தீர்மானம் மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த கடனாளி மீதிகளை பதிவழிப்பதற்கு எப்போதும் அனுமதி கிடைக்கப்பெறாத படியாலும், குறித்த கடன் மீதியை அறவிடுவதற்காக பாரிய முயற்சி எடுக்கப்படுவதுடன் இந்த பணம் கிடைக்கப்பெறாது என்ற அடிப்படையிலும், கிடைக்கப்பெறாத தொகை எவ்வளவு என்பது தொடர்பாக சரியாக அறிந்து கொள்வதற்கு முடியாத படியாலும், இதற்காக ஐயப்பாட்டுக்குரிய கடன் ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படுவதில்லை.

(இ). இந்த அலுவலர்களில் சில அலுவலர்களின் பணி தடை செய்தல் ஆகிய சட்டத்துடனான நடவடிக்கை காரணமாக பணிக்கொடை பணம் பெற்றுக்கொள்ளவில்லை. குறித்த சட்டத்துடனான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் குறித்த பணிக்கொடை செலுத்துவதன் மூலம் இந்த தவணை பணம் அறவிட முடியும். கடன் செலுத்தலை தவறவிடப்பட்டுள்ள சில நபர்கள் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுவாக கடன் செலுத்தலை தவறவிட்டுள்ள எல்லா நபர்களிடமும் கடன் செலுத்துமாறு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்த நபர்கள் தொடர்பாக புறம்பான அறிக்கையொன்றை எதிர் வருங்காலங்களில் தயாரித்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஈ) 2002-2004 காலப் பகுதிகளில் அமைச்சரவையின் தீர்மானம் மூலம் தடைசெய்யப்பட்ட இக் காணி கொடுக்கல்வாங்கல் குறித்த நிறுவனம் அல்லது நபர்களால் மீண்டும் கையளிக்கும் படி முன்வைத்த கோரிக்கை படி ஆணைக்குழு மூலம் விடய பொறுப்ப அமைச்சர் அவர்களின் அனுமதி பெற வேண்டி இருந்தது. அதன் போது அமைச்சரவையால் தடை செய்யப்பட்ட இந்த காணி கொடுக்கல்வாங்கலுக்கு உரிய காணியை மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால், அதற்காக திருத்தங்களுடன் கூடிய அமைச்சரவை பத்திரிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று சனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி உரிய அமைச்சரவை பத்திரிக்கை சமர்ப்பிக்கப்படினும், அதற்காக இதுவரை தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. இதன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் கையேற்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மேலதிகமாக முற்பணங்களை மீண்டும் பெற்றுத் தருமாறு கோரிக்கைகளை முன்வைக்கின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம்

அந்தப் பணத் தொகைகளை ஆணைக்குழுவின் அனுமதியுடன் விடுவிக்கப்படுகிறது. அமைச்சரவையின் உறுதியான தீர்மானம் கிடைக்கப்பெறும் வரை இதனை சீராக்குவதற்கு ஆற்றல் இல்லை.

(உ) கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக 20 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் கணக்கு அறிக்கைகளில் காட்டப்படும் இந்தக் கணக்கின் மீதி வருடாந்தம் குறைந்து செல்கின்றது. தற்போது கிடைக்கப்பெற வேண்டிய குத்தகை வருமானத்திற்குள் உள்ளடங்காத முன்னரான ஆண்டுகளுக்கு உரிய வருமானம் கிடைக்கப்பெறுதல் இந்தக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் 1455 பேரேடு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டது.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| | |
|---|---|
| **நிலையான சொத்துக்கள்**<br><br>**காணிகள்** | காணி பதிவேடுகளை நாளதுவரைப்படுத்திய பின்னர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| **கட்டிடங்கள்** | மொணராகலை, மாவட்ட அலுவலகம் கட்டிடங்களின் பெறுமதி லிந்துல பங்களா மற்றும் இரத்தினபுரி பாம்காட்ன் தோட்டம் என்பவற்றுக்கு மேற்கொள்ளப்படும் மூலதனச் செலவு உள்ளடங்கலாக ரூபா.4586223/= கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| கணினி உதிரிபாகங்கள், தளபாடங்களை பொருத்துதல், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், நலன்புரி உபகரணங்கள் | 2013.12.31 ஆந் திகதியில் உரிய இருப்பு மீளாய்வினை மேற்கொண்டு மீளாய்வு குழு அறிக்கை மற்றும் அது தொடர்பான சொத்துக்களின் பதிவேடை கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **கடன் மற்றும் முற்பனங்கள்** | |
| அச்சீடு மற்றும் எழுதுகருவிப்பொருட்கள் லோஹஹர் லேடி நிதியம், எரிபொருள், முற்பணம், மோட்டார் வாகன பழுதுபார்த்தல்களுக்கான முற்பணம் | மீதிகளை உறுதிப்படுத்தி பதிலை நேரடியாகவே கணக்காய்வாளர் அதிபதியிடம் கிடைக்க கூடிய வாறு கடிதம் மூலம் உரிய நிறுவனத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **<u>அறவிடமுடியா கடன் ஒதுக்கீடுகள்</u>** | 10 ஆண்டுகளுக்கு மேலதிகமான காலப்பகுதியில் இதனை கணக்குகளில் காட்டப்படுவதுடன் எவ்வாறு கணக்கிடப்பட்டிருந்தது என்பது தொடர்பாக கண்டறிவதற்கு முடியாதுள்ளது. |
| **<u>கிடைக்கப்பெற வேண்டிய வருமானம்</u>** | இந்த வருமானம் உறுதிப்படுத்தியுள்ள முறை தொடர்பாக தற்போது தகவல்களை பரீட்சிக்கப்படுவதுடன் பின்னர் விபரங்களை சமர்ப்பிக்கின்றேன். |
| **<u>மரங்களை விற்பனை செய்தல்</u>** | உரிய கடிதக்கோவைகளில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| **நட்டஈடு தொங்கல், காணி சுவீகரிப்பு, வயல் காணிகளை விற்பனை செய்தல்** | இது தொடர்பான விபரங்கள் வெவ்வேறாக் அதிகளவில் கடிதக்கோவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| **அம்பாறை மாவட்ட அலுவலகத்தின் வருமானம்** | 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத வருமான அறிக்கை, நிதி பிரிவில் உள்ள அம்பாறை மாவட்ட கடிதக்கோவையில் உள்ளது. 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாத காலத்திற்கு ஏற்புடையதான பற்றுச்சீட்டு புத்தகங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ளன. |

**2.2.7 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

**(அ) 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சிர்திருத்த சட்டம்**

| | |
|---|---|
| **(i).45(1)(அ)(iii) பிரிவுகள்** | காணி சீர்திருத்த சட்டத்தில் குறித்த பிரிவில் பிரதம மந்திரி அவர்களால் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் அவர்களை உசாவி ஒரு உறுப்பினரை நியமனம் செய்தல் வேண்டும் அல்லது உரிய விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் ஒருவரை |

நியமனம் செய்தல் வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தி உறுப்பினர் ஒருவர் பங்குகொள்கின்றார்.

ஆயினும் கணக்காய்வு அறிக்கையில் உரிய விடயபொறுப்பு அமைச்சர் (சனாதிபதி அவர்களின்) பிரதிநிதி ஒருவரை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமனம் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பிரிவு பிரகாரம் அவ்வாறான உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்து கொள்வதற்கு ஏற்பாடுகள் குறிப்பிடப்படவில்லை.

| | |
|---|---|
| **(ii) பிரிவு 33** | நட்டஈடு மற்றும் வட்டி தொகை என்பன நீதிமன்றத்தில் வைப்புச்செய்வதற்கு உரியதாக அதிகளவிலான கடமைப்பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டுமென்பதுடன், அதற்காக தற்போது 57 கடிதக்கோவைகளின் பொருட்டு பத்திரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு காணியின் பொருட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டியுள்ளதால் அதற்காக குறித்த கடிதக்கோவைகளில் தகவல்கள் சட்டப்பிரிவிடம் அனுப்பி வைக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு வருகின்றதுடன், உரிய வெளிப்படுத்துநர்களின் உரித்துகள், குறிப்பிடப்பட்ட நட்டஈடு மற்றும் வட்டி தொகை என்பவற்றை ஆணைக்குழுவால் அப்புறப்படுத்தி சிவில் நீதிமன்றத்தில் வைப்புச்செய்வதற்கு அதன் பின்னர் ஆற்றல் உள்ளது. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி சட்டத்தில் பந்தி 11 | முதலீடு தொடர்பாக நிறுவனத்தால் பெற்றுக்கொண்ட பொது தீர்மனங்களின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீது வரிச் சட்டம் | இந்த இரண்டு சட்டங்களின் கீழ் பதிவு செய்வதனை கவனத்தில் கொள்வதற்கு, ஆணைக்குழுவின் தீர்மானத்தை பெற்றுக்கொண்டு அதன் படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதிப் பிரிவில் |

உள்ள 3/3/48 என்ற கடிதக்கோவையில் உரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

அத்தியாயம் 11 பிரிவு 13:3

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் நீண்டகாலம் தொடக்கம் வெற்றிடமாக உள்ள பணிப்பாளர்/நிதி பதவிக்காக தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பத்திரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்பட்ட பின் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் முன்னர் நடைமுறைப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களை ஏற்புடையதாகக் கொண்டு 2007.03.16 மற்றும் 2009.03.30 ஆகிய திகதிகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் நடைமுறைப்படும் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் படி 2012.12.11 மற்றும் 2013.05.20 ஆகிய திகதிகளில் பத்திரிக்கை அறிவிப்பு மூலம் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரியதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பபடிவங்களுக்கு அமைவாக விண்ணப்பத்தாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டது

ஆயினும் சமர்ப்பித்திருந்த விண்ணப்பத்தாரிகள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள தகைமைகளை கொண்டிராத படியாலும், சமர்ப்பித்திருந்த விண்ணப்பத்தாரிகள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள சம்பளம் தொடர்பாக இணங்காதபடியாலும், என்ற காரணங்களை கொண்டு உரிய பதவிக்கான ஆட்சேர்ப்புகளின் பொருட்டு ஆட்சேர்ப்பை செய்வதற்கு ஆற்றல் இருக்கவில்லை.

குறித்த காரணங்களின் பேரில் பணிப்பாளர்/நிதி

பதவியில் நிரந்தரமான அலுவலரை தெரிவு செய்து நியமனம் செய்வதற்கு ஆற்றல் இல்லாத படியால், 2008.01.01ஆந் திகதி தொடக்கம் கணக்காளர் தரம் 111 இற்கு ஆட்சேர்ப்புச் செய்த அலுவலரைக் கொண்டு பணிப்பாளர்/நிதி பதவியில் கடமைகளை நிறைவேற்றிகொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்காக தாபன விதிக் கோவையில் சீராக்க முடியுமான ஒதுக்கீடுகளின் கீழ் 1/6 கொடுப்பனவு செலத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும் இது தொடர்பாக 2014.10.10 ஆந் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் நீண்டகாலமாக கலந்துரையாடப்பட்டதுடன், ஆணைக்குழுவிடம் முன்வைத்து ஆட்சேர்ப்புத் திட்டத்தில் தகைமைகளை திருத்தம் செய்தல் அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் படி பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(இ). இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள்

| | |
|---|---|
| (i). நிதி ஒழுங்குவிதிகள் 502(2) | காணிகள் தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடை நிதிப் பிரிவில் பேணிச் செல்லப்படுகிறது. அதன் செலவு, கையேற்கப்பட்ட திகதி, வருடாந்த தேய்மான விகிதாசாரம் என்பவற்றை குறிப்பிட்டு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த பதிவேடை நாளதுவரைப்படுத்தி பேணிச் செல்லப்படுகிறது. |
| (ii). நிதி ஒழுங்குவிதிகள் 134(3) | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி உரிய அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டது. |
| (iii). நிதி ஒழுங்குவிதிகள் 104(3) மற்றும் (4) | 2012.12.31 ஆந் திகதியில் கா.சீ.ஆ. உரியதான PB-7869 ஆம் இலக்க வாகனம் விபத்துக்குள்ளாதல் |

தொடர்பாக ஆரம்ப புலனாய்வு அறிக்கை 2013.06.24 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், குறித்த அறிக்கையில் குறித்த விபத்து நடைபெற்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டிய சாரதியின் தவறு காரணமாக நிகழவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த வாகனத்திற்கு 2013.04.24 ஆந் திகதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பாக 2013.12.11 ஆந் திகதியிலான ஆரம்ப புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெற்ற காப்புறுதி நட்டஈட்டுக்குப் புறம்பாக வாகனத்தின் பழுதுபார்த்தலுக்கு செலவிடப்பட்டுள்ள கட்டணங்களின் அளவு அந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டிய சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படி நி.ஒ.விதி 104 இன் படி நடைபெற்ற விசாரணை சபை தீர்மானித்ததால் அதன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

(ஈ) 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவை

| | |
|---|---|
| 7.1 மற்றும் 711.1 பிரிவுகள் | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வாகனங்களை பழுதுபார்க்கும் போது இதுவரை கடைபிடித்த நடைமுறைகளின் படி அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டாவிட்டலும், தற்போது அதற்கு புறம்பாக பெறுகை வழிகாட்டல் கோவையை அடிப்படையாகக்கொண்டு வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**(உ) 2003 ஆம் ஆண்டு 2 ஆந் திகதிய பீஈசி/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபங்கள்**

| | |
|---|---|
| பிரிவு 4.2.6 | வருடாந்த செயல் நிறைவேற்றுகை அறிக்கை உரிய அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டில் காலாண்டுகளுக்கான நிதிசார் |

| | |
|---|---|
| | அறிக்கைகள் அரச வியாபார திணைக்களத்திடம் உரிய திகதியில் அனுப்பி வைக்கப்பட்டள்ளது. |
| பிரிவு 6.5.1 | 2013 ஆம் ஆண்டுக்காக வருடாந்த அறிக்கை வரையுள் பிரதி 2014.03.18 ஆந் திகதிய தழுவு அங்கீகார கடிதம் மூலம் உரிய நிறுவனங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 3. <u>நிதிசார் மிளாய்வு</u>

### 3.1 <u>நிதிசார் பயன்கள்</u>

அரசாங்கத்தின் துரித பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு 2010-2012 ஆண்டு காலபகுதிக்குள் அரச நிறுவனங்களிடம் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் அதிகளவிலான நட்டஈடு அளவு கிடைக்கப்பெற்றது. அதன் படி 2012 ஆம் ஆண்டில் காணிகளை சுவிகரிக்கும் வருமானம் வளர்ச்சியடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் ஒப்பீட்டு ரீதியாக காணிகளை சுவிகரிக்கும் நட்டஈடுகளின் பொருட்டு போதியளவு ஏற்பாடுகள் அரசாங்க நிறுவனங்களுக்கு வரவு செலவுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு இயலாத காரணத்தால் 2013 ஆம் ஆண்டு இந்த காணிகளை சுவிகரித்துக் கொள்ளும் வருமானம் குறைந்துள்ளது. 2008-2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரிய சட்ட ரீதியான காணிகளை குத்தகைக்கு விடும் முறை துரிதமாக்கப்பட்டுள்ளதால், குறித்த ஆண்டுகளில் வரி வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக குத்தகையில் விடுவதற்கு சீராக்கப்பட்ட காணிகள் குறைவாக உள்ள படியால் புதிதாக வரி வருமானம் சேர்த்தல் முறையாக குறைந்துள்ளது.

### 3.2 ஆய்வுடன் கூடிய நிதிசார் மீளாய்வு

வியாபார மற்றும் ஏனைய கடனாளிகளின் பெறுமதி 2,218 மில்லியன் ரூபாவாகியதன் காரணமாக, இந்த விகிதாசாரம் அதிகரித்துள்ளதுடன், நடைமுறை சொத்துக்களில் காட்டப்படும் எல்லா சொத்துகளும் எளிதில் பணமாக்ககூடிய சொத்துக்களாவதுடன், எமது நிறுவனம் சேவை வழங்கும் நிறுவனமாவதாலும், இறுதி இருப்பு காணப்படாமையாலும், எழுதுகருவி பொருட்களின் பெறுமதி மிகவும் குறைந்த நிலையில் உள்ளதாலும் நடைமுறை விகிதாசாரம் மற்றும் உடனடி விகிதாசாரம் சமமான பெறுமதியை காட்டுகின்றது.

### 3.3 <u>நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டத்துடனான நிகழ்வுகள்</u>

நிதிசார் கூற்றுகளில் 2013.12.31 ஆந் திகதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 626 ஆக குறிப்பிடப்பட்டிருப்பினும், அது தொடர்பாக மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகங்கள் என்பவற்றின் ஒவ்வொரு பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களும், சட்டப் பிரிவால் பேணிச்செல்லப்படுகின்ற கடிதக் கோவைகளையும் அடிப்படையாகக்கொண்டு 2013.12.31 ஆந் திகதி வரை செவ்வையான வழக்குகளின் எண்ணிக்கை 435 ஆகும்.

2014.11.01 ஆந் திகதியில் இந்த வழக்குகளின் எண்ணிக்கை 480 என அறியத் தருவதுடன், அது தொடர்பாக விபரமான அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அறிக்கை முன்னாள் சட்டப்பணிப்பாளர் ஈ.டபிள்யு.வசந்தா சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், முடிவுறுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகளை உள்ளடக்கி பொறுப்பின்றி பணியாற்றியுள்ளதாக அறிய வருகின்றது. இவ்வாறான விடயங்கள் காரணமாக அவரது சேவை நீடிப்பு வழங்கப்படவில்லையென்பதுடன், அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அவரால் முறைப்பாடு செய்த போதிலும், அதனையும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## 4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>

### 4.1 <u>செயல் நிறைவேற்றுகை</u>

எமது ஆணைக்குழுவில் பிரதான வருமான வழி காணி முதலீடு என்பதை குறிப்பிடலாம். இந்த வளம் வரையறுக்கப்பட்டுள்ளதால் தற்போது காணி விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் குறைந்து வருகின்றது. மேலும் 2002-2004 காலப் பகுதியில் தடை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் இதுவரை அமைச்சரவையால் ஏற்புடைய தீர்மானத்தை மேற்கொள்ளப்படாததால், இந்த வருமானத்தை அதிகரித்துக்கொள்ளுதல் தொடர்பாக எதிர்காலத்தில் பிரச்சினைகள் தோன்றலாம்.

### 4.2 <u>முகாமைத்துவ திறமையின்மை</u>

(அ) ஆணைக்குழுவால் நட்டஈடு செலுத்தும் செயற்பாட்டை துரிதப்படுத்தியிருப்பினும், நட்டஈடுகளை பெற்றுக்கொள்வதற்கு வெளிப்படுத்துநர்கள் முன்வராத படியாலும், அதற்காக மாற்று காணிகள் பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்தலும், வெளிப்படுத்துநர்களின் உரிமை(உரித்துகள்) உறுதிப்படுத்தும் கடித ஆவணங்கள் என்பன தொடர்பாக தோன்றியுள்ள பிரச்சினைகளுடன் கூடிய நிலை காரணமாக நட்ஈடு செலத்தல் தாமதமாகியுள்ளது. தற்போது இவ்வாறு சிறிதளவிலோ செலுத்தப்படுவதற்கு காரணம், வெளிப்படுத்துநர்களின் உரித்துகள் உறுதிப்படுத்துவதற்கும் நீதிமன்ற கட்டளையின் பேரில் நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்குமாகும்.

(ஆ) தற்போதுள்ள ஏறத்தாழ 600 இற்கும் அண்மித்த கடிதக் கோவைகளை பரிசீலனை செய்து, நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஆணைக்குழுவிடம் இறுதியாக கையளிக்கப்படும் காணிகள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்வதை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த தகவல்கள் பெற்றுக்கொள்ளும் முன்னேற்றம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் அறிக்கையிடுவதற்கு ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளதால் உரிய தகவல்கள் குறித்த குழுவிடம் அறிவிக்கப்படும்.

மேலும் நியதிச்சட்ட முறையிலான தீர்ப்புகளை வழங்கப்படாத வெளிப்படுத்துநர்களின் கடிதக்கோவைகள் இருத்தல், கடிதக்கோவைகளுக்கு ஏற்புடையதாக காணிகளை களத்தில் அடையாளம் காணுவதற்கு முடியாமை, குடும்பத்தில் கையளிப்புகளுக்கு அமைவாக சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு காணிகள் வழங்க வேண்டியிருத்தல், காணிகளின் உரித்துகளை உறுதிப்படுத்துவதற்கு உரியதாக ஆவணங்களை சமர்ப்பிக்கப்படாமை, உரிமையாளர்கள் முன்வராமை ஆகிய காரணங்களினால் நட்டஈடு செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு சிரமமாக உள்ளது.

(இ). உரித்துகள் உறுதிப்படுத்தப்படாத சட்டத்தில் பிரிவு 29 இன் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை 104 ஆகும். குறித்த கடிதக்கோவைகளில் 49 இற்காக அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரால் நட்டஈடு தீர்ப்பை எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எமது ஆவணங்களின் படி குறித்த நட்டஈடு தீர்ப்பு ரூபா. 3,136,936/= ஆவதுடன், அதற்கு உரியதான நிள அளவு 2591 ஏக்கர், 1 ரூட், 05 பேர்ச் ஆகும். தங்களது உசாவுதலில் காட்டப்பட்டுள்ளவாறு 66161 ஏக்கர் இல்லையென்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். நட்டஈடு தீர்ப்புச் செய்யப்படாத 55 கடிதக்கோவைகளுக்கு ஏற்புடையதான நில அளவு 2874 ஏக்கர் ஆவதுடன், 3 ரூட், 34 பேர்ச் ஆகும். ஒவ்வொரு வெளிப்படுத்தநர்களின் கடிதக்கோவைகளின் கீழ் கையளிக்கப்படும் காணிகளின் அளவில் மாற்றம் ஏற்படலாம் என்பதுடன், அதற்கு சமமாக நட்டஈடு தொகை தீர்மானிப்பதற்காக கவனத்தில் கொள்ளும் விடயங்களின் (கையளிக்கப்பட்டுள்ள காணிகளில் உள்ள பயிர்ச் செய்கை, அறுவடை, மற்றும் சட்டத்திற்கேற்ப 01 ஏக்கருக்கு செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள நட்டஈடு தொகை) மீது நட்டஈட்டு தொகையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## 4.3 <u>தொழிற்பாட்டு வினைத்திறமையின்மை</u>

(அ) இது தொடர்பாக பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்ட பொது தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 2013.03.13 ஆந் திகதிய BD/GPS01/1/8/1 ஆம் இலக்க கடிதம் பிரகாரம், தேசிய வரவு செலவு திணைக்களத்தின் மூலம் மோட்டார் வண்டியினை கொள்வனவு செய்வதற்காக

அதன் செலவு மற்றும் செலவுக்கு உரியதான குத்தகை அடங்கலாக 10 மில்லியன் ரூபாவிற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 2013.11.05 ஆந் திகதி டொயோட்டா லங்கா நிறுவனம் மூலம் விலை கணக்குகளை பெற்றுக்கொண்டதுடன், வாகனத்தின் விலை ரூபா.8808,036/= ஆவதுடன், அதற்கான வெட் தொகை ரூபா. 1,056,964/= அடங்கலாக ரூபா.9,865.000/= இற்கு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா.9,865,000/= தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், அந்தச் செலவு அனுமதி பெற்றுக்கொண்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

மேற்படி குறிப்பிட்ட தொகையில் ரூபா.5,000,000/= ம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதற்கான முத்திரை கட்டணம் ரூபா.55760/= ஆகும். மேலும் மோட்டார் வண்டியை பயன்படுத்தும் போது செலுத்தப்பட வேண்டிய பகுதிநேர சொகுசு வரி ரூபா.150,000/= ஆகும்.

இந்த கொள்வனவுக்கு ஏற்புடையதாக டொயோட்டா நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டில் எல்லா வரிகளும் அடங்கலான விலை ரூபா.9,865,000 ஆகும்.

இந்த மோட்டார் வண்டி அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் கொள்வனவு செய்யப்பட்டது என, ஆணைக்குழுவை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்த 51-6460, 53-9673 ஆம் இலக்க கெப் வண்டிகள் இரண்டும் 61-1117 ஆம் இலக்க Van வண்டியும் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டி ஏற்படுவதாலும், குறித்த பழுதுபார்த்தல்களின் பொருட்டு அடிக்கடி அதிக செலவு செய்வதாலும் இந்த மூன்று வாகனங்களையும் விற்பனை செய்து அதற்குப் பதிலாக புதிய கெப் இரண்டும், Van வண்டியும் கொள்வனவு செய்வதற்கு சனாதிபதி அலுவலகத்திடம் 2011.11.04 ஆந் திகதியில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த மூன்று வாகனங்களையும் விற்பனை செய்வதற்கான பிரேரணையை, சனாதிபதி செயலகம் மூலம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரிடம் அனுப்பி வைக்கப்பட்ட 2012.01.31ஆந் திகதிய கடிதத்திலும் குறிப்பிடப்படுகிறது.

ஆயினும் அரச வியாபார திணைக்களத்தால் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 2012.09.18 ஆந் திகதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன். வாகனங்களை விற்பனை செய்வதற்கான அனுமதி உள்ளடக்கப்படவில்லை.

அயினும் 110-7479 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் விற்பனை செய்வதற்காக தேசிய வரவு செலவு திணைக்களத்தால் 2012.07.25 ஆந் திகதியில் அனுமதி வழங்கிய

கடிதத்தில் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதென குறித்துரைத்து அடையாளம் காணும் வாகனங்களை அகற்றுவற்கு தேசிய வரவு செலவு திணைக்களத்திடமிருந்து புறம்பான அனுமதி தேவையில்லையெனவும், பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதென அடையாளம் காணும் வாகனங்களை அரசாங்க நிதி சுற்றறிக்கை 353 இன் பிரகாரம் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் அறிவித்திருந்ததால், இரண்டு கெப் வண்டிகளையும், Van வண்டியும் குறித்த ஆலோசனைகளை கடைபிடித்து சுற்றுநிருப விதிகளை பின்பற்றி விற்பனை செய்யப்பட்டது.

**(ச) இலக்கம் PC– 6654 என்ற வாகனம் விபத்துக்குள்ளாகுதல்**

PC– 6654 என்ற இலக்கத்தைக் கொண்ட வாகனத்தை திருத்துவதற்காக வாகனத்தின் முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது செலவு மதிப்பீட்டிற்காக சனாதிபதி செயலகத்திடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது. முகவர் நிறுவனமானது, மூன்றாவது மதிப்பீடொன்றாக செலவுகளைக் குறிப்பிட்டு பட்டியலொன்றை இவ்வாணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், அவர்களால் காப்புறுதி நிறுவனத்திற்கு திருத்தங்கள் குறிப்பிடப்பட்டு மேலதிக மதிப்பீடுகள் (Supplementary) மூன்றினை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொண்டு வாகனத்தின் திருத்தம் நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர், எமது நிறுவனத்திற்கு அனைத்து செலவுகளும் உள்ளடங்கலாக இறுதி விலைபட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் மூன்றாவது மதிப்பீடு என்ற ரீதியில் வேறாக ஒரு ஆவணம் சமரப்பிக்கப்படவில்லை என்பதுடன், இறுதி விலைபட்டியலின் மூலம் மொத்தச் செலவுகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இவ்வாகன விபத்து தொடர்பில் நி.ஒ.விசாரணையின் பின்னரும் ஆணைக்குழுவிற்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆணைக்குழுத் தீர்மானமும், வாகன திருத்தத்திற்காக செலவு செய்யப்பட்ட முழுச் செலவில் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட வேண்டிய செலவுகள் தொடர்பில் 2013.11.12ஆந் திகதி சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில், நி.பி.104 விசாரணை மேற்கொள்வதற்காக, வாகனத்தின் திருத்தத்திற்காக பொறுப்பேற்கவேண்டிய முழுத்தொகை தொடர்பில் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். முகவர் நிறுவனத்திடமிருந்து ஆணைக்குழுவிற்கு இறுதி விலைபட்டியல் 2013.09.20ஆந் திகதியன்றே கிடைக்கப்பெற்றதென்பதுடன், காப்புறுதி நிறுவனத்தினால் இவ்விபத்து தொடர்பில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் பின்னரே காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட இறுதித் தொகையும் தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும், ஆணைக்குழுவினால், இறுதி விலைபட்டியலுக்கமைவாக ரூ.82,219,26/- தொகை வாகனத்தின் உரிமையாளரது கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததால், அத்தொகையை கழித்துக் கொள்வது தொடர்பில் முகவர் நிறுவனத்திடம் விபரங்கள் கோரப்பட்டன. இச்செயன்முறைக்கு நீண்ட காலம் எடுத்ததன் காரணமாக நி.பி.104 விசாரணை நடாத்துவதிலும் தாமதமேற்பட்டுள்ளது. தற்போது இந்த ரூ.82,219,26/- தொகை, தொடர்புடைய உத்தியோகத்திரிடமிருந்து தவணை ரீதியாக அறவிடப்படுகின்றது. எவ்வாறாயினும், இனிவருங் காலங்களில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும் என அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**(உ) KH 9751 இலக்க வாகனத் திருத்தம்**

அலுவலகத்தில் உள்ள வாகனப் பற்றாக்குறை மற்றும் ஓட்டங்களது அவசியத்தன்மை என்பன கருத்திற்கொள்ளப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதியுடன் இத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டதுடன், 2013.06.10ஆந் திகதிய கடிதத்தின் மூலம் திருத்தத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் அறிவிக்கப்பட்டு, சனாதிபதி செயலாளரது அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அத்திருத்தத்திற்காக 2013.06.25 ஆந் திகதி அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அக்கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாகனம் செயலிழந்துள்ளமை தொடர்பாக தொழிநுடப் அலுவலரது அறிக்கையின் அடிப்படையில், முகவர் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கும்போது கோளாறுகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் ஒன்றிற்கொன்று வேறுபட்ட திருத்தங்கள் என அவதானிக்கப்பட்டது. அது தொடர்பான தீர்மானங்கள் தேவையான தொழிநுட்ப அறிவுடைய உத்தியோகத்தரது விதப்புரைகளின் அடிப்படையில், உரிய முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது விசேடமானதொரு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படாவிட்டாலும், செய்த திருத்தங்கள் தொடர்பில் உரிய நிறுவனமானது உத்தரவாதக் காலமொன்றைப் பெற்றுக் கொடுத்ததோடு, அக்காலத்திற்குள் எமது நிறுவனத்தினாலும் அச்சேவையானது மீளவும் செய்யப்படவில்லை என்பதுடன், அது தொடர்பாக நிறுவனமானது மிகுந்த கவனமாகவுள்ளது. இவ்வாகனம் தொடர்பில் நிறுவனமானது ஓரளவு அசௌகரியங்களுக்குள்ளானதுடன், இந்நிலைமையானது வாகனத்தினது உற்பத்தித் தரம் உயர் தரத்திலமையாததன் காரணமாக ஏற்படக்கூடியதொன்றாக இருக்கலாம்.

இது முறையற்ற பாவனையினால் ஏற்பட்டதொன்று என்ற முடிவுக்கு வருவதற்கு எந்தவித காரணிகளும் இல்லையெனவும் குறிப்பிடுகின்றேன். இந்நிலைமையானது இந்த வகையான வாகனங்களது இயல்பு என அறியப்பட்டுள்ளது.

இவ்வாகனம் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட கணக்காய்விற்கும் உட்பட்டதுடன் சிக்கலான நிலைமையொன்று நிறுவனத்தினாலும் நடைமுறைரீதியாக எதிர்கொள்ளப்பட்டதென்பதுடன், மேலும் இவ்வாகனத்தை இந்நிறுவனத்தில் வைத்திருப்பது பொருளாதார ரீதியில் பாரிய நட்டத்தினை ஏற்படுத்துமென்பதுடன் இதனை விற்பனை செய்தல் மிகவும் பொருத்தமானது எனக் கருதுகின்றேன்.

இவ்வாகனமானது விலை கூடிய நவீன ரக புதிய வாகனமொன்றென்பதால், இதன் என்ஜினில் காணப்படுகின்ற கோளாறுகளை நோக்கும் போது, இது கொள்வனவு செய்யப்பட்டு 2 வருடங்கள் கடந்த ஒரு வாகனமாகும். நாளாந்தம் சாரதியினால் செய்யப்படுகின்ற பரிசீலனைகளின் பின்னர் வாகனம் செலுத்தப்படுவதுடன், எந்தவித முன்னெச்சரிக்கைக் குறியீடுகளும் இன்றி இவ்வாகனமானது செயலிழ்ந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ட்ரான்ஸ்மெக் இன்ஜினியரிங் நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டதுடன் வானத்தினது பெயாரின் கட்டமைப்பில் ஏற்பட்ட நிறுத்தம் காரணமாக என்ஜின் செயலிழந்துள்ளதாகவும் பொதுவாக அதிவேக பாதைகளில் பயணிக்கின்ற வாகனங்களது என்ஜின்களில் இவ்வாறான தொழிநுட்பக் கோளாறுகள் பல ஏற்படுவதற்கான காரணங்கள் இருக்கக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வனைத்து விடயங்களின் அடிப்படையிலும் இவ்வாகன வகை மற்றும் உரிய கம்பனி தொடர்பாக ஆணைக்குழுவானது கலந்துரையாடியுள்ளதுடன், அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் வாகனங்களை வாங்கும்போது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(ஊ) <u>காணிகளை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் விற்றல்</u>**

**(I) <u>ஹும்பகஹபிட்டிய தோட்டம்</u>**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியொன்றை கருத்திட்டமொன்றிற்கு வழங்கும்போது ஆணைக்குழுவானது முறையான நடைமுறைகளைப் பின்பற்றி மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் குத்தகைப் பணம் அறவிட்டு காணியினது உரிமையை ஒப்படைக்கும்.

அவ்வாறு உரிமை ஒப்படைக்கப்படும்போது, ஆணைக்குழுவின் அதிகாரி தலைவர் என்பதால் அவரால் அதிகாரமளிக்கப்படுகின்ற ஒரு பிரதிநிதியாளராக மாவட்ட பணிப்பாளர் அல்லது மாவட்ட பணிப்பாளரினால் அதிகாரம் கையளிக்கப்படுகின்ற வெளிக்கள உத்தியோகத்தரொருவருக்கு காணியினது உரிமையினை ஒப்படைப்பதற்கு இயலும். அதனடிப்படையில் எனது வாய்மொழி அறிவுறுத்தலுக்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கும்புறுஹேன காணியில் அத்துமீறி குடியிருப்பவர்களால் பயன்கொண்ட பகுதியை குத்தகை அடிப்படையில் பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக பிரதேசத்திலுள்ள அரசியல்வாதிகள் மற்றும் அத்துமீறி குடியிறுப்பவர்களுடன் கலந்துரையாடி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணியாற்றப்படுகின்றது.

களுகொஹுதென்ன காணியில் 03 ஏக்கர் 1 ரூட் 18.90 பேர்ச்சஸ் காணித்துண்டை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கும்போது ரூ.113,600/- தொகை பணம் 2009 தொடக்கம் 2014 வரை அறவிடப்பட்டது குத்தகைப் பணமாக அல்ல. அத்தொகையுள் மொத்த குத்தகைப் பணம் ரூ.95000/- மும் அத்துமீறி அகற்றப்பட்ட மரங்களது மதிப்பீட்டுத் தொகையான ரூ.18600/- ம் காணப்பட்டது.

இக்காணிக்காக 2009ஆம் ஆண்டில் மதிப்பீடு கோரப்பட்டிருந்தாலும், இம்மதிப்பீடு இற்றைவரை கிடைக்கப்பெறாததுடன், மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் மதிப்பீட்டுத் தொகை அறவிடப்பட்டு குத்தகை உறுதி தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக எல்பீ/ஏ/எல்ஆர்சீ/02/2013/01 மற்றும் 2013 டிசம்பர் 02ஆந் திகதிய கணக்காய்வு விசாரணையின் (ஊ) பதிலின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**(II)<u>மொணறகெலேதோட்டம்</u>**

மொணறாகலை மாவட்டத்தில் அமைந்துள்ள மொணறகெலே தோட்டக் காணியில் இறப்பர் செய்கை மேற்கொள்வதற்காக வேர்ல்ட் விவ் இம்பெக் நிறுவனத்திற்கு வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை கருத்திட்டக் குழுவின் விதப்புரைகளுடன் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 7521ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானம் யாதெனில், இக்காணியின் 2467 மற்றும் 2468 நில அளவைப்படத்திற்குரிய 280 ஏக்கர் அளவான காணியை அங்கு வசிக்கும் 153 தமிழ் வதிவிடதாரர்களது உரிமை இல்லாமல் போகாதவாறு, குத்தகை அடிப்படையில் வழங்குவதாகும். இதன்போது வதிவிடதாரருக்கு, சிறு பெருந்தோட்ட முயற்சி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், இறப்பர் செய்கை மேற்கொள்வதற்காக மானியங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களது காணித்துண்டிற்காக குத்தகை ஒப்பந்தமும் கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இருதரப்பினருடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பிரச்சினைக்குரிய நிலைமைகளைத் தீர்த்து மீளவும் எல்லைகளை இனங்கண்டதன் பின்னர், அதனை முறைமைப்படுத்துவதற்காக கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எல்லைகளை இனங்காண்டு மீண்டும் நில அளவைப் பத்திரங்கள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தற்போது அனைத்து பிரிவுகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குத்தகை முற்பணமாக ரூ.10,00,000/-மானது 2011.10.28 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தாலும் மேலே குறிப்பிடப்பட்ட சிக்கலான நிலைமைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர், உரிய மதிப்பீட்டுத் தொகையை அறவிட்டு கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் குத்தகை ஒப்பந்தம் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011ஆம் ஆண்டு தொடக்கம் வேர்ல்ட் விவ் இம்பெக் நிறுவனமானது இக்காணியை பயன் கொண்டு வருவதாலும், 2013.03.08 ஆந் திகதியே மதிப்பீட்டு அறிக்கையை வழங்கியிருந்ததாலும்,வழங்கப்பட்ட அறிக்கை 2011ஆம் ஆண்டிற்குரியதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் அறவிடப்படவேண்டிய உரிய குத்தகைத் தொகையானது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிக்கலான நிலைமைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் உரியவாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(எல்பீ/ஏ/எல்ஆர்சீ/02/2013/05 மற்றும் 2013 டிசம்பர் 02ஆந் திகதிய கணக்காய்வு விசாரணையின் (உ) விடையில் விளக்கப்பட்டுள்ளது.)

**(III) <u>லேலன்ட் தோட்டம்</u>**

2013.07.16 லேலன்ட் தோட்டம் என்ற காணியில் 00 ஏக்கர் 1 ரூட் 10 பேர்ச்சஸ் அளவு காணி பிரினிகா பிளாஸ்டிக் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் அமைச்சினது அனுமதியையும் பெற்றுக் கொண்டு அதற்காக ரூபா.80,000/- குத்தகைப் பணம் அறிவிடப்பட்டுள்ளதோடு, குத்தகை ஒப்பந்தத்தை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தினால், பணிப்பாளர் சபை என்பன தொடர்பான விபரங்கள் மீண்டும் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்பதால், அது தொடர்பில் அந்நிறுவனத்தினால் தகவல்களை வழங்குதல் தாமதமானதன் காரணமாக குத்தகை ஒப்பந்தமொன்று தயாரிக்கப்படவில்லை. உரிய நிறுவனமானது ஒரு கம்பனியல்லாததாலும் தனிநபர் நிறுவனமாக இருந்ததாலும் அதற்கான அனுமதிக்காக அது தயாரிக்கப்படவேண்டியுள்ளது. அதனால் உரிய தகவல்களை பெற்றுக்கொண்டு குத்தகை ஒப்பந்தத்தை தயாரிப்பதற்கு உறுதிப் பிரிவிற்கு முன்னளிக்கப்பட்டுள்ளது.

**(IV) <u>மாகந்துற தோட்டம்</u>**

ஆடை உற்பத்திக்கு தேவையான பிளாஸ்டிக் உதிரிப்பாகங்கள் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தித் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக குருணாகல் மாவட்டத்தில்

அமைந்துள்ள மாகந்துற தோட்டக் காணியை பீனிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கம்பனிக்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2006.06.08ஆந் திகதி அமைச்சரவை அனுமதித்தது.

அதனடிப்படையில் கைத்தொழில் அமைச்சினால் 2006.06.29ஆந் திகதியன்றே காணியினது சட்டபூர்வ உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் காணியினது உரிமையை வழங்கிய ஆண்டுக்கு உரித்தான மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில், இக்காணியை 30 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 7495ஆம் இலக்க மற்றும் 2011.01.24ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய 30 வருட காலத்திற்கு பீனிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அதிமேதகு சனாதிபதியின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

காணியினது பயன்கொள்ளலை ஒப்படைத்த திகதியானது, உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியானது, குத்தகை ஒப்பந்தம் ஆரம்பமாகும் திகதியாவதால் அன்றைய திகதி தொடக்கம் மதிப்பீடு கணிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 30 வருட காலத்திற்கு இக்காணித்துண்டின் 5546 ம் 5547 மற்றும் 5548 ஆகிய குத்தகை ஒப்பந்தங்கள் 2013.12.26 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**(V) <u>கெடன்தொல தோட்டம்</u>**

காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள கெடன்தொல தோட்டம் என்ற காணியில் 25.6 பேர்ச்சஸ் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கும் போது அக்காணியில் அமைந்துள்ள கட்டிடத்திற்காக மதிப்பீடு அறவிடப்படவில்லை என்பதுடன், பின்னர் அதற்காக அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீடு கோரப்பட்டு, மதிப்பீட்டு தொகை அறவிடப்பட்டு உறுதியைத் தயாரிப்பதற்காக உறுதி கிளைக்கு முன்னளிக்கப்பட்டுள்ளது.

இக்காணியிலுள்ள அத்துமீறியவர்களை முறைமைப்படுத்துதல் தொடர்பில் மாவட்ட பணிப்பாளரிடமிருந்து அவர்களது வதிவிடத்தையும் பயன்கொள்ளலையும் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட கலமாக வசித்து வருகின்ற நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொண்டுள்ள வதிவிடதாரர்களை வெளியேற்றுதல் பாரதூரமான சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடுமாகையால் சுற்றறிக்கையின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(VI) <u>லிட்டில்வெலி தோட்டம்</u>**

ஹதபிம அதிகாரசபையினால் 1980.10.26 ஆந் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த கடிதமும், அது சரியானது என ஹதபிம அதிகாரசபை தலைவரால் 2006ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதும் 2005.10.03 அளவைக் கட்டளையொன்றை வழங்கி அது செயற்படுத்தப்படாமல் இருப்பதும், மக்கள் பிரதிநிதிகளால் (அரசியல் தலைமைத்துவங்கள்) அது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கவனத்திற் கொண்டும், அவர் பயன்கொள்ளுதலை கருத்திற் கொண்டும், அந்த அளவிற்கென 2009.11.26ஆந் திகதி அளவைக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஹதபிம அதிகாரசபையின் ஆவணங்களில் அவரது பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என அறிக்கையிடப்பட்டதன் பின்னர் அந்த அளவைக் கட்டளையானது 2010.07.26ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டது.

மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி சரத் அமுணுகம அவர்களை விளித்து எமக்கும் பிரதியிட்டு, அக்காணிக்கு உறுதியொன்று வழங்கப்பட்டிருந்தால், விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. உரிய கோரிக்கைகளைக் கவனத்திற் கொண்டு விண்ணப்பதாரரால் மீண்டும் மீண்டும் முறைப்பாடு செய்யப்பட்டதன் காரணமாக, மீண்டும் 2011 சனவரி 07ஆந் திகதி அளவை புதுப்பிக்கப்பட்டது. விண்ணப்பதாரர் அவருக்கு “நெட்சா” நிறுவனத்தின் மூலம் 2 ½ ஏக்கருக்கு நட்டவீடாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறி அதற்கான அளவைக் கட்டளை கோரப்பட்டதால் 2011.02.23 ஆந் திகதி 02 ஏக்கர் 2 ரூட் 00 பர்ச்சசுக்காக மீளமைக்கப்பட்ட அளவைக் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் 2011.03.16ஆந் திகதிய கடிதத்தின் கோரிக்கையை கவனத்திற் கொண்டு உரிய அளவையானது இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையானது 2011.06.13 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதியின் தொடர்பாடல் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் 2011.05.26ஆந் திகதி விண்ணப்பதாரருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ½ ஏக்கர் காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு பிரேரிக்கப்பட்டாலும், விண்ணப்பதாரர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கண்ட பின்னணியின் கீழ் அதே விதத்தில் விடயங்கள் இடம்பெற்றுள்ளன. 2012.06.20 திகதியிலும் இது தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து விடயங்கள் கோரப்பட்டிருந்தாலும் இன்னமும் பதில் வழங்கப்படவில்லை. ஆகையால் அது இன்னமும் தீர்க்கப்படாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

**(VII) <u>பிட்டகந்த வத்த</u>**

ஆணைக்குழுவினது சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளுக்கமைய நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு பிட்டகந்த காணியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தினால் ஆணைக்குழுவின் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக 2005ஆம் ஆண்டில் ரூ.5,400,000/- தொகைக்கு குத்தகை அடிப்படையில் சூரியா டெக்ஸ்டைல் மில்ஸ் தனியார் கம்பனிக்கும், அவர்களால் மேற்கண்ட ஆதனத்தை ரூ.400,000/- தொகைக்கு எஸ்.எஸ்.எச்.ஒட்டோ மொபைல் அன்ட் இன்வெஸ்ட்மன்ட் தனியார் கம்பனிக்கும் விற்றிருத்தல். நெசவுக் கைத்தொழில் திணைக்களமானது இது தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்காத காரணத்தினால் இது இடம்பெற்றுள்ளது. இத்தரப்பினரை அழைத்து கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**(VIII) <u>யாலபோவ தோட்டம்</u>**

மொணறாகலை மாவட்டத்தில் அமைந்துள்ள யாலபோவ தோட்டக் காணியில் 196 ஏக்கர் 0 ரூட் 04 பர்ச்சஸ் அளவான காணி குத்தகைப் பணம் செலுத்தாமல் சீனி நியதிச்சட்ட சபையினால் 1982ஆம் ஆண்டு வரை பயன்கொள்ளப்பட்டுள்ளது.

இக்காணியின் அளவானது பெலவத்தை சீனிக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதில் 50 ஏக்கர் காணி மஹ/650 வெளியீட்டினது நியதிச்சட்டத்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் பெலவத்தை சீனி கம்பனி அதன் 146 ஏக்கரை பயன்கொண்டுள்ளது.

அந்த 146 ஏக்கரை முறைமைப்படுத்துவதற்காக காணியினை அளக்கும் போது அவர்கள் ஆட்சி செலுத்திய அளவு ஏக்கர் 224 ரூட் 2 38 பர்ச்சஸ் என தெரியவந்துள்ளது. பெலவத்தை சீனிக் கம்பனி பயன்கொண்ட காணியினைப் பெற்றுத்தருமாறு விடுத்த கோரிக்கையை, ஆணைக்குழு அனுமதித்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முழு காணியையும் பெலவத்தை சீனிக் கம்பனிக்கு வழங்கியுள்ளதால் சமூக நலனோம்பல் அமைச்சரின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என மொணறாகலை மாவட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

பெலவத்தை சீனி கம்பனிக்கு 146 ஏக்கர் காணியை வழங்கி மிகுதியாகவுள்ள 78 ஏக்கர் காணியை நகர அபிவிருத்திக்கு விடுவித்தல் வேண்டும் என மாவட்ட அலுவலகத்தின் பதவிநிலை உதவியாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அளவை செய்வதற்கு முன்னர் இம்முழுக் காணியானது, பெலவத்தை சீனிக் கம்பனியினால் பயன்கொண்டுள்ளதால் 5795 ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானத்தின் மூலம் 224 ஏக்கர் 2 ரூட் 38 பர்ச்சஸ் அளவான காணியை பெலவத்தை சீனிக் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு

இருக்கையில் மீண்டும் இம்முழுக் காணியையும் பெற்றுத் தருமாறு பெலவத்தை சீனிக் கம்பனி கோரியுள்ளது. எவ்வாறாயினும் இக்காணியானது வர்த்தகங்களை எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**(IX) கும்பல்கொட தோட்டம்**

இவ்வாணைக்குழுவின் ர/103 கூற்றாளரான திரு.டீ.எஸ்.தர்மதாசவினால் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள கும்பல்கொட குரூப் என்ற காணியில் 03 பகுதிக்கான உரிய படிவங்கள் 03ன் மூலம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு வெளியீட்டுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| விபரமான விசேச இலக்கம் | காணியின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | ரூட். | பர். |
| ர/103/ர/01 | கும்பல்கொட குரூப் | 12 | 0 | 30 |
| ர/103/ர/07 | கும்பல்கொட குரூப் (மெதலந்த பகுதி) | 09 | 0 | 08 |
| ர/103/ர/09 | கும்பல்கொட குரூப் | 20 | 3 | 20 |

மேலே குறிப்பிடப்பட்டவாறு வெளியிடப்பட்ட காணிகளுள் ர/103/ர/07 மற்றும் ர/103/ர/09 இன் கீழ் வெளியிடப்பட்ட அளவுகள், கூற்றாளரது சட்டரீதியான பொறுப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக, கோவையின் அடிப்படையில் தெளிவாகின்றது.

ர/103/ர/01 இன் கீழ் வெளியிடப்பட்ட காணியானது தனிக்காணியல்லாததுடன், அது கீழே காட்டப்பட்டுள்ளவாறு 04 காணித்துண்டுகளைக் கொண்டுள்ளதாக கோவையின் அடிப்படையில் தெளிவாகின்றது.

i. பரதெனிய ஹேன மற்றும் தெஹிகஹஹேன
ii. கம்இமே ஹேன
iii. கல்கொட்டுவே ஹேன
iv. பரஹ வத்தே ஹேன மற்றும் தொம்பகஹவெல ஹேன

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளில் வெளியீட்டாளருக்கு உரிமையான பகுதிகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உள்ளதாக ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தரால் வழங்கப்பட்டுள்ள 1981.01.20ஆந் திகதிய அறிக்கையின் அடிப்படையில் தெளிவாகின்றது.

**காணியின் பெயர்** **அளவு**

| | | ஏக். ரூட். பர். |
|---|---|---|
| i. | ரதெனிய ஹேன மற்றும் தெஹிகஹஹேன | 15 1. 19. |
| ii. | கம்இமே ஹேன | 01. 0. 03. |
| iii. | கல்கொட்டுவே ஹேன | 00. 2. 00. |
| iv. | பரஹ வத்தே ஹேன மற்றும் தொம்பகஹவெல ஹேன | 03. 0. 37. |
| | | 10. 0. 19 |

அதனடிப்படையில் அந்த அளவானது ஆணைக்குழுவுக்குச் சொந்தமாகியுள்ளதுடன் அந்த அளவில் 2.02 ஹெக்டெயார் அளவான காணியானது 417/9ஆம் இலக்க மற்றும் 1986.09.02 ஆந் திகதிய அரசாங்கத்தினது அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட 04 காணித் துண்டுகள் தொடர்பில் கூற்றாளருக்கு உள்ள உரிமைக்குச் சமமான உரிமை கூற்றாளரல்லாத ரத்னா விஜேசிறிவர்தன என்ற நபருக்கும் இருந்துள்ளதாக கோவையின் அடிப்படையில் தெளிவாகின்றது.

காணித்துண்டினது களநிலவரம் தொடர்பில் வெளிக்கள உத்தியோகத்தரின் அறிக்கை மாவட்ட பணிப்பாளரது விதப்புரைகளுடன் பெற்றுக்கொண்டதன் மூலம் களத்தில் காணி சுதந்திரமாக காணப்படுவதாக உறுதியானதால், 6046 ஆம் இலக்க மற்றும் 2005.11.07 ஆந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானத்தின் மூலம் குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை அனுமதித்துள்ள அமைச்சரின் அனுமதிக் கடிதத்திலும் இக்காணியினது அளவு 42 ஏக்கர் 18 பர்ச்சஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உரியவாறு வழங்கப்பட்டுள்ள அளவிற்கு (2.5 ஹெக்) மேலான காணி அளவு மேற்கண்ட விடயங்களின் அடிப்படையில் காணப்படுவதால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவரது கடிதமானது, அதற்குரியதாக வழங்கப்பட்டுள்ள 2.2 ஹெக்டெயார் அளவிற்கு மட்டுப்படுகின்றது என தெரிகிறது.

எவ்வாறாயினும் இவ்வனைத்து விடயங்களின் அடிப்படையிலும் ஆணைக்குழு செயற்பட்டுள்ள விதம், காணப்படுகின்ற நடைமுறைகளுக்கமைய தவறானதென புலப்படவில்லை என்பதுடன், குறித்த அளவிற்காக சட்டரீதியான குத்தகைதாரராக முன்னைய குத்தகைதாரரை அடையாளங்காண முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

### (X) தணஹேன தோட்டம்

குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான தணஹேன தோட்ட காணியில் 2001/21ஆம் இலக்க நில அளவைப் பத்திரத்திற்கு அமைய துண்டு இலக்கம் 1-5 வரை காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் 2 ரூட் 11.7 பர்ச்சஸ் அளவான காணியை தொழிற்சாலைகள் அமைச்சின் அனுமதியின் பேரில்

5122 ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் நோர்த் வெஸ்டன் அபரல் கம்பனிக்கு 30 வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அக்கால கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அனுமதித்துள்ளார்.

பின்னர் இந்நிறுவனத்தினால் டிசைன் ஸ்டுடியோ மெனுபக்சரீஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்திற்கு இக்காணியை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கமைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியின் கீழ் பெற்றுக்கொடுப்பதற்கு 7791ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு மீண்டும் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டதுடன், இதற்கு முன்னர் இக்காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அக்கால விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி கிடைக்கப்பட்டதால் மீண்டும் அனுமதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடு எழாது என ஆணைக்குழுவினால் 8339 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிய நிறுவனங்கள் இரண்டினதும் வியாபார நடவடிக்கைகள் ஆடைத் தொழிலாகையால் அது தொடர்பான இடம் மற்றும் நடவடிக்கைக்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஒருதடவை அனுமதித்திருந்தால் பெயர் மாற்றத்தின்போது மீண்டும் அதற்காக அனுமதியொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியப்படாது என்ற அடிப்படையில் ஆணைக்குழுவானது அத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இத்தீர்மானம் இதற்கு முன்னர் 2013.11.26ஆந் திகதி கணக்காய்வு விசாரணையின்போதும் வினவப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழு தீர்மானம் தொடர்பில் 2014.01.13ஆந் திகதி எனது கடிதத்தின் அ பந்தியின் கீழ் இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

**(XI)** <u>**முல்கெலே தோட்டம் (தென்னஹேன தோட்டம்)**</u>

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நுவரெலியா மாவட்டத்திலுள்ள தென்னஹேனயில் அமைந்துள்ள முல்கெலே தோட்டக் காணியில் 02 ஏக்கர் அளவான காணி காசல் பவர் ஹவுஸ் தனியார் கம்பனிக்கு நீர்மின்சாரத் திட்டத்திற்கு 2012.04.07ஆந் திகதி பயன்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் திருமதி.டப்ளியு.எம்.யூ.என்.கே.ரத்னாயக்க அவர்களால் 2014.04.23ஆந் திகதி எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 5772ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**4.4<u>புலப்படும் முறைகேடு:</u>**

அம்பாறை மாவட்டக் காரியாலயத்தின் பணிப்பாளரது அலுவலக அறையில் இருந்த கடித கோவைகள் மற்றும் பணப் பற்றுச்சீட்டு புத்தகங்கள் காணாமற் போனமை தொடர்பில்

உரிய பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், உரிய பொலிஸ் நிலையத்தால் விசாரணைகள் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்காலப்பகுதியுள் அம்பாறை மாவட்டக் காரியாலயத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த மாவட்டப் பணிப்பாளரை பிரதான காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்ததோடு, அவரது கடமை நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு 2011ஆம் ஆண்டு தொடக்கம் பணப் பற்றுச்சீட்டு மூலம் அறவிடப்பட்டு வங்கியில் இடப்படாத ரூ.1,299,750/- பெறுமதியான தொகையை தவணை அடிப்படையில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக விசாரணை உத்தியோகத்தரொருவரை நியமித்து ஆரம்ப விசாரணையொன்றை நடாத்தியதோடு, அவரால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் விசாரணை குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு முறையான ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

## 4.5 <u>இனங்காணப்பட்ட நட்டங்கள்</u>

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தும் செயன்முறையின் கீழ் 2002ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட கணனித் தொகுதி தொடர்பாக இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறையிட்டதன் பின்னர் அத்திணைக்களத்தினால் விசாரணை நடவடிக்கைகள் நடாத்தப்பட்டு அதற்கான சட்டரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டமாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமாஅதிபரால், முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டதால், இவ்விடயங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு 2006.04.20ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் இது தொடர்பாக BC/1322/06/3-14 இன் கீழ் விசாரனை நடவடிக்கைகள் நடாத்தப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவ்விசாரணையுடன் தொடர்புடைய ஆவணங்களும் அந்நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் தற்போது அவ்வாவணங்கள் கா.சீ.ஆ.குழுவிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இவ்விடயங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணையின் மூலம் வெளிப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இலஞ்சம் தொடர்பான சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து சாதாரண சந்தேகத்திற்கு மேலாக நிரூபிக்கத்தக்க போதுமான விடயங்கள் இல்லாததால் இது தொடர்பில் இனியும் செயற்படாதிருப்பதற்கு

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு தீர்மானித்தது என அறிவித்து 2014.02.07ஆந் திகதிய கடிதத்தை அனுப்பியுள்ளது.

இவ்விடயங்களை அடுத்துவரும் ஆணைக்குழு கூட்டத்தில் சமர்ப்பித்து அதன்போது கிடைக்கும் அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 4.6 ஆளணி நிருவாகம்

தற்போது கா.சீ.ஆ.குழுவிற்கான ஆளணி எண்ணிக்கை 307ற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அனுமதிக்கப்பட்ட ஆளணிக்குப் புறம்பாக உள்ள ஆளணி தொடர்பில், அவர்களது தேவைப்பாட்டை நியாயப்படுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான தகவல்களை சனாதிபதி செயலகத்திற்கூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முழு ஆளனிக்கும் அண்மித்த காலப்பகுதியுள் அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் அவ்வாறு அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக தகைமை பெற்றவர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

## 5. கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

### 5.1 இணைத்திட்டம்

2013 – 2017ஆம் ஆண்டு இணைத்திட்டத்தை நிழற்பட பிரதி எடுக்கும்போது ஏற்பட்ட சிற்சில தாமதங்கள் காரணமாக ஒரு பக்கம் இல்லாமலேயே ஆவணத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதென அவதானிக்கின்றேன். இது வெறுமனே ஏற்பட்ட ஒரு தாமதமென்பதுடன், இனிவரும் காலங்களில் தயாரிக்கப்படும் ஆவணங்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

### 5.2 செயற்றிட்டம்

(அ) (ஆ) (இ) (ஈ) கணக்காய்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துமாறும் இனிவரும் வருடங்களுக்காகத் தயாரிக்கப்படும் செயற்றிட்டம் தொடர்பில் மீண்டும் மீண்டும் பின்னூட்டல் நடவடிக்கைகள் எடுக்குமாறும் உரிய அலுவலகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2013 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது உடனடி உறுதி பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டிற்காக முன்னுரிமையளித்து, நிறுவனத்தின் பிரேரிக்கப்பட்ட பல விடயங்கள்

நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் காணி உச்ச எல்லை பிரிவின் கோவைகள், நட்டவீட்டுக் கொடுப்பனவுகள் என்பனவற்றைப் பரிசீலிக்கும் போது கூற்றாளர்களின் கோவைகள்,சட்டரீதியான உரிமம், குடும்பங்களுக்கிடையே உரிமைமாற்றம், பரிமாற்றம், உரிமையைப் பொறுப்பேற்கும் சான்றிதழ், கா.சீ.ஆ.குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அளவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதா, நட்டவீடு வழங்கப்பட்டுள்ளதா, சட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் காணியின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா, காணியைப் பரிமாற்றும் போது பிரதான மதிப்பீட்டாளரால் காணி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா, மதிப்பீட்டு பெறுமதியின் வேறுபாடு அறவிடப்பட்டுள்ளதா போன்ற விடயங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறே அளவைப் பிரிவை பரிசீலனைக்கு உட்படுத்தும்போது கா.சீ.ஆ.குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள், பதிவுசெய்யப்பட்ட அளவையியலாளரால் சுவட்டுப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதா, அது அளவைப் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளதா, அதற்காக 10% மேற்பார்வைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா, எனவும் காணிகளில் துண்டுகளைப் பிரிப்பதற்கு உரியவாறு அளவை கட்டளை வழங்கப்பட்டுள்ளதா, அளவைக்கட்டளை சரியான பந்திக்கமைய வழங்கப்பட்டுள்ளதா (குத்தகையா/விற்பனையா) என்ற ரீதியில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து மாவட்ட காரியாலயங்களையும் கணக்காய்வு செய்வதற்கு திட்டமிட்டிருந்தாலும், அது காணப்பட்ட கடமைகளுக்கு மத்தியில் மேற்கொள்ள முடியாததொரு நிலை காணப்பட்டதோடு, 2014ஆம் ஆண்டு அதனை நிறைவேற்றுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 5.4 <u>கணக்காய்வு குழு</u>

பீ௭/சுற்றறிக்கை 12 (நல்லாட்சிக்கான வழிகாட்டல்) சுற்றறிக்கையின் 7.41 இற்கமைய நிறைவேற்றுத் தரமல்லாத ஆணைக்குழு அங்கத்தவர்கள் மூன்றுபேரைக் கொண்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்படுவதுடன், கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு இது தொடர்பான 2014.10.10ஆந் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 5.5 <u>வரவுசெலவுத்திட்ட பதிவேடு ரீதியான கட்டுப்பாடு:</u>

மதிப்பீடு செய்யப்பட்ட வருமான செலவு மற்றும் உண்மையான வருமான செலவிற்கிடையில், வேறுபாட்டைக் கண்டறிந்து வரவுசெலவு மதிப்பீட்டைத் திருத்தி பேணப்படவேண்டிய நடவடிக்கைகளை செய்யவேண்டியிருப்பினும், 2013ஆம் ஆண்டிற்குள் அவ்வாறு செய்வதற்கு முடியாமல் போனது. தற்போது 2014ஆம் ஆண்டிற்காக வரவுசெலவு

மாறிகளைப் பரிசீலித்துப் பார்த்து அதற்குக் காரணமாக அமைந்த காரணங்களுடன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் இதனை சிறந்த முறையில் செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 5.6 <u>வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்:</u>

2012 வருடாந்த அறிக்கைக்காக அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டவுடனேயே பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான இயலுமை காணப்படும்.

## 6. <u>கட்டமைப்பும் நிருவாகமும்</u>

(அ) 2013ஆம் ஆண்டு தொடக்கம் கணக்குப் பிரிவிற்குரிய பற்றுச்சீட்டுக்களது பிரதிகளை பிரதான காரியாலயம் பெற்றுக் கொண்டதுடன், 2014ஆம் ஆண்டிற்குள் அவ்வருமான அறிக்கையை, காசுப் புத்தகத்தின் பிரதியொன்றுடன் பெற்றுக் கொள்வதற்கான முறைமையொன்று பேணப்படுகின்றது.

(ஆ) மாவட்ட காரியாலயத்திற்குக் கிடைக்கின்ற வருமானத்தினை பிரதான காரியாலயத்தின் கணக்கிற்கு மாற்றுவதற்கான செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வருமான அறிக்கையானது அதற்கடுத்து வரும் மாதத்தின் 05ஆந் திகதிக்கு முன்னர் தொலைபேசியினூடாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற வருமானமானது பதிவேடுகளுடன் ஒப்பிடும்போது பெரும்பாலும் சரியாகவே காணப்படுகின்றது. அனைத்து மாவட்ட காரியாலயங்களுக்கும் வருமான அறிக்கையை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்தாலும், சில மாதங்களில் அனுப்பப்படுகின்ற அறிக்கைகள் கோவைப்படுத்தப்படாததன் காரணமாக குறைந்துள்ளது. 2014 ஆண்டு தொடக்கம் அனைத்து வருமான அறிக்கைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர்/வருமானம் மற்றும் பணிப்பாளர்/நிதிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(இ) அனைத்து கணக்குகளுக்குரிய வங்கி கணக்கிணக்கக்கூற்று பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு அடுத்தமாதம் 15ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அதிபதிக்கும் அனுப்பப்படும். அதில் தயாரிக்கப்பட்டது, பரிசீலிக்கப்பட்டது, அனுமதிக்கப்பட்டது என கையொப்பங்கள் இடப்பட்டுள்ளன.

(ஈ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நாளாந்த வாகன ஓட்டக் குறிப்பை பேணிச்செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டப் பணிப்பாளர், சாரதி மற்றும் வாகன ஓட்டக் குறிப்பைப் பரிசீலிக்கின்ற அலுவலர் என்போர் அறிவுறுத்தப்பட்டனர்.

(உ) வழக்குப் பதிவேடொன்றைத் தயாரிப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதனைத் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு ஆண்டுகளிலும் கணக்குகளில் காட்டப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்தி அனுப்புமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக கிடைக்கின்ற பதில் நடவடிக்கைகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. சில நிறுவனங்கள் தற்போது இல்லாத காரணத்தினாலும், முகவரிகள் மாறியுள்ளதால் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாத காரணத்தினாலும் மீதி தொடர்பான உறுதிப்பாடு கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும் இதற்காக மிக அதிகளவான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

வழக்கறிஞர் நிமல் ஜீ.புஞ்சிஹேவா

தலைவர்

காணி சீர்திருத்த ஆணைக்குழு

பிரதிகள்:- சனாதிபதி செயலாளர்

சனாதிபதி செயலகம்

கொழும்பு

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்ட அறிக்கைகள் 2013

**<u>2013.06.02 ஆந் திகதி மு.ப. 2.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான 01 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

**வரவு**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 05. | திரு.எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பீ.சத்குமா ர | - | உறுப்பினர் |
| 06. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | செயலாளர் |
| 07. | திரு.செனரத் வனிகதுங்க | - | உறுப்பினர் |
| 08. | திருமதி. ~ியாமலி இரத்நாயக்க | - | உறுப்பினர் |
| 09. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | - | உறுப்பினர் |

**வருகைதராதவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.யு.கே.மிஹிந்துகுலசூரிய | - | உறுப்பினர் |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான சாராம்ச மீளாய்வினை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது

இக் குழு கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தும் விடயங்களை உரிய பத்திரிக்கைகளின் மூலம் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அவை தொடர்பாக விரிவாக கவனத்தில் கொண்டு தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படுமாயின், அதன் போது மேற்கொள்கின்ற பரிந்துரைகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென திறைசேரியின் பிரதிநிதியாக கலந்து கொண்ட திருமதி அனோமா நந்தனி அவர்கள் அறிவித்தார்.

01.

- **காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிப்படுத்தப்படாமையால் நட்டஈடு செலுத்தவதற்கு முடியாமை.**

  கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 115 ஆகும்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிப்படுத்தப்படாமையால் நட்டஈடு செலுத்துவதற்கு முடியாமை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், இவ்வாறு நட்டஈடு செலுத்துவதற்கு தாமதமாவதால், அதிக அளவில் வட்டி பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுதல் தொடர்பாக விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட்டது.

அதன் படி உரிய காணிகளின் பெயர்கள் மற்றும் வெளிப்படுத்துநர்களின் பெயர்கள் உள்ளடக்கிய பதிவேடை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பத்திரிக்கைகளில் வெளியிடுவதற்கும், அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் பதில் கிடைக்கவில்லையெனில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் தீர்மானமாகியது. எவ்வாறாயினும் இந்த அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன்னர் சட்ட ஆலோசகரிடம் அனுப்பி பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

ை. **நட்டஈடுக்குப் பதிலாக மாற்று காணிகளை கோருதல் கடிதக்கோவைகளின் எண்ணிக்கை - 25**

சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நட்டஈடுக்குப் பதிலாக மாற்று காணிகளை ஒதுக்கீட்டு சட்டத்தில் ஏற்பாடுகள் அளிக்கப்படவில்லையெனவும், ஆகையால் ஒரு மாத காலம் தவணை வழங்கப்பட்டு அதற்கு பதில் நடவடிக்கைகள் கிடைக்கப்பெறவில்லையெனில், உரிய நட்டஈட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்படுவதாக அறிவித்து அனுப்புவதற்கும், அதன் படி செயலாற்றுவதற்கும் தீர்மானமாகியது.

ைை. **பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாமை - கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 37**

இந்தச் சான்றிதழ் இல்லாமை காரணமாக உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டு கோவைகளை முடிவுக்குகொண்டு வர முடியாமை உள்ளக ரீதியாக ஏற்படும் பிரச்சினையாகும். ஆகையால் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் நட்டஈடு கோரியிருப்பின், அந்தப் பணிக்கு தேவையான காணிகளை தேடித் தரும்படி எழுத்து மூலம் அறிவித்து அனுப்பி உரிய காணியை கண்டறிவதற்கு செயற்படுதல் இதற்கான நடைமுறை தீர்வாகும். அவ்வாறு காணிகளை காட்டுவதற்கு முடியாது போயின் குறித்த விடயங்களை அடிப்படையாகக்கொண்டு உரிமையாளர்களுக்கு அறிவித்து, உரிய கோவையை தற்காலிகமாக முடிவிடுவதற்கு முடியுமா என்பது தொடர்பாக கவனத்தில் கொள்வதற்கு தீர்மானமாகியது.

ை **வெளிப்படுத்துநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நட்டஈட்டு அளிப்பு கடிதத்திற்கு அனுமதி வழங்கப்படாமை மற்றும் வவுச்சர்களில் கையொப்பமிட்டு கையளிக்கப்படாமை - கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 127 ஆகும்.**

இவ்விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் அதன் படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எ **ஏனைய விடயங்கள் - கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 26**

ஒவ்வொரு கடிதக்கோவையையும் தனித் தனியாக ஆராய்ந்து பிரச்சினையை தீர்மானித்து அதன் படி செயலாற்றுவதற்கு தீர்மானமாகியது.

எை. **வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டு நட்டஈடு தீர்மானிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்கின்ற கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 200**

இது தொடர்பாக ஆராய்ந்து ஆணைக்குழுவிடம், ஆணைக்குழு பத்திரமொன்றை தயாரித்து சமர்ப்பிக்கும் படி பணிப்பாளரிடம் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) ஆலோசனை வழங்கப்பட்டது.

எைை. **நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தில் பிரிவு 29 இன் படி வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்குள்ள கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 670 ஆகும்.**

இந்த 670 கடிதக்கோவைகள் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முடிவுறுத்துவதற்கு தேவையான செயற்றிட்டத்தை தயாரிக்கும் படி கூறப்பட்டதுடன், பணிப்பாளர் - காணி உச்ச எல்லை மற்றும் பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) ஆகியோருடன் கலந்துரையாடி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் முன்வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

02. வெட் வரி பதிவுசெய்தல் மற்றும் எதிர் கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரை யாடுதல்

இது தொடர்பாக விரிவான கடிதமொன்றை நிதி அமைச்சு, அரச நிதி கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து தேவையான ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

03. மாவட்ட செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் பல்வேறு வருமானங்களை மேம்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்.

பணிப்பாளர்(வருமானம்) உடன் கலந்துரையாடப்பட்டு வரி பேரேடை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பல்வேறு வருமானங்களின் கீழ் இரத்தினக் கல், கருங்கற்கள் ஆகிய கனிம வளங்களுடன் கூடிய காணிகளில். நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்படும் காணிகள், குத்தகை மற்றும் சிறு குத்தகைக்கு வழங்கப்படும் காணிகள் ஆகியவற்றின் குத்தகை பணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீண்ட காலம் கலந்துரையாடப்பட்டதுடன், தற்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ள அனைத்து காணிகள் தொடர்பான பதிவேடை மாவட்ட அலுவலகங்களில் பேணிச்செல்வதில்லை என அவதானிக்கப்படுகிறது. குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுள் கருத்திட்டங்களை பேணிச்செல்லுதல் தொடர்பாக, உள்ளக கணக்காய்வாளருடன் மாவட்ட அலுவலகங்கள் இணைந்து அறிக்கையொன்றை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. குறித்த அறிக்கையை அவதானிக்கப்பட்டதன் பின்னர் உள்ளக சுற்றுநிருபம் மூலம் உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

04. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்திற்கு மாதமொன்றுக்கு ரூபா.330000.ஃ.ஸ்ரீ வீட்டு வாடகை செலுத்த வேண்டியுள்ளதுடன் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்

கொழும்பிற்கு அண்மித்த மாற்று காணியொன்றில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை கட்டிடத்தை நிருமாணிப்பதற்கு காணி ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடுவதற்கு ஆணையாளர் நாயத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

05. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 307 அளவிலான பதவிகளை அங்கீகரித்துள்ளதுடன், மீதி ஆளனியை அங்கீகரித்துக்கொள்ளுதல் தொடர்பாக கலந்துரையாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படி ஊழியர்கள் அனைவரையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு சம்பளம் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படி திருத்தம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்து அனுப்பிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் னுஆஊ.ஃஊ1.ஃ1021 ஆம் இலக்க மற்றும் 2012.11.12 ஆந் திகதிய கடிதத்தின் படி தற்போது உள்ளீர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கடிதத்தில் பந்தி 02 இன் படி காணி சிர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் அவர்களது 2.ஃ1.ஃ113.ஃ(1) மற்றும் 2012.10.18 ஆந் திகதிய கடிதத்தில் 345 ஆம் இலக்க மற்றும் பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுடன் கூடிய

நிலைமைகளை அகற்றுவதற்காக அந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதில் இணைப்பு 02 மற்றும் உள்ளீர்ப்பு செயற்பாடு என்பவற்றுக்காக தயாரிக்கப்பட்ட அட்டவணையுடன் ஒப்பிடும் போது மேலும் முரண்பாடு உள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஆகையால் பணிப்பாளர் முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தியால் இணைப்பு 2 இற்கு அமைவாக சம்பந்தப்பட்ட பதிவேடை தயாரித்து மேலும் முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பின் குறித்த முரண்பாடுகளை விரிவாக தயாரித்து (பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி) குறித்த அட்டவணையை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானமாகியது. இவ்விடயம் பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் நடைபெற வேண்டுமென்பதுடன், செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள் -வதற்காக உள்ளக கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

06. காணி சிர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் சேர்மத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வருமானம் அதிகரிப்பதற்காக வழங்கிய வாகனங்கள் ஆகியவற்றின் பேணுதல் நடவடிக்கைகளுக்கு அதிக பணம் செலவாகின்றதெனவும், கடந்த காலகட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகள் தொடர்பாகவும், வாகனங்களை நிறுத்தி வைத்தல், வாகனங்களின் தனிப்பட்ட பயன்பாடு தொடர்பாக கலந்துரையாடுதல்.

குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டப்படாமையால் இது தொடர்பாக செயலாற்றுவதற்கு சிரமமாவதுடன், நிகழ்வுகளை உள்ளடக்கி அறிக்கையொன்றை தயாரித்து அடுத்த கணக்காய்வு கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

07. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடனாளிகள் தொடர்பாக, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய சட்டத்துடனான நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுதல்.

கிடைக்கப்பெற வேண்டிய பணம் தொடர்பாக விரிவான பதிவேடை சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

08. ஏனைய விடயங்கள்

- நிலையான வைப்புகளில் நிதி முதலீடு செய்வதற்காக பொது திறைசேரியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனவும், அதற்காக சனாதிபதியின் செயலாளர் மூலம் அனுமதி கோருதல் பொருத்தமானதெனவும் பிரேரணை செய்யப்பட்டது.

- எதிர் வருங் காலங்களில் கலந்துரையாடுவதற்கு உட்படும் விடயங்களை உள்ளடக்கி பத்திரிக்கையாக (உதா:- ஆணைக்குழு பத்திரிக்கைகளை தயாரித்தல்) தயாரித்து ஒரு கிழமைக்கு முன்னதாக உரிய உறுப்பினர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குழு செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அடுத்து வரும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

…………………………………

………………………………..

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு |

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.எம்.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பு | |
| திரு.எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பீ.சத்குமார | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| திரு.செனரத் வனிகதுங்க | - | செயலாளர் | |
| திருமதி. ியாமலி இரத்நாயக்க | - | உறுப்பினர் | |
| திரு.ஜே.டப்ளியூ.ஹப்புஆராச்சி | - | உறுப்பினர் | |

**<u>2013.09.17 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான 02 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

வருகை

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 05. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | செயலாளர் |
| 06. | திருமதி. ியாமலி இரத்நாயக்க | | |
| 07. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | | |
| 08. | திரு.குமுது தர்மப்பிரிய | | |

**வருகைதராதவர்கள்**

01. திரு.செனரத் வனிகதுங்க

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவின் கலந்துரையாடலுக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2013.09.17 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

01.

ை.ை உரித்துகளை உறுதிப்படுத்தப்படாத வெளிப்படுத்துநர்களின் கடிதக்கோவைகள் 115 உள்ளதெனவும், அவை முடிவடைந்த பின்னர் உடனடியாக சட்ட ஆலோசகரிடம் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டு அடுத்து வரும் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) கூறினார்

ை.ைை நட்டஈடுக்குப் பதிலாக மாற்று காணிகளை கோருகின்ற 25 நபர்களுக்கு பதிவு தபாலில் அறிவித்து அனுப்பியுள்ளதாகவும், பதில் கிடைத்த பின்னர் ஏனைய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கூறப்பட்டது.

ை.ைை பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாத கோவைகள் 37 இற்கு ஏற்புடையதான தகவல்கள் குறித்துரைத்து கண்டறிவதற்கு சிரமமாவதால், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து மீண்டும் வேண்டுகோள் முன்வைத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இயன்றவாறு உரிய கோவைகளை புறம்பான பதிவேட்டில் குறிப்பிட்டு தற்காலிகமாக மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ைை. ஏனைய காரணங்களால் தாமதப்படும் 26 கடிதக்கோவைகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக பணிப்பாளர்(மதிப்பீடு மற்றும் நட்டஈடு) கூறுனார்

ை.எைை. நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தில் 29 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்குள்ள 670 கடிதக்கோவைகள் தொடர்பாக கடந்த குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறு செயற்றிட்டமொன்றை தயாரிப்பதற்காக ஆவணகூடத்தில் கடிதக்கோவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமம் உள்ளதாக கூறப்பட்டதால், அது தொடர்பாக உயர் முகாமைத்துவத்திடம் சமர்ப்பித்து தீர்வு பெற்றுக்கொள்வதற்கு தீர்மானமாகியது.

02. வெட் வரி செலுத்தல் அத்தியாவசியமானதென குழுவால் தீர்மானிக்கப்படுவதுடன், இது நியதிச்சட்ட முறையிலான பிணைப்பு ஆவதால் அது தொடர்பாக நிறுவனம் கடினமாக செயற்பட்டு தீர்மானமெடுக்க வேண்டுமென குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது.

03. வரி பேரேடு தற்போது தயாரிக்கப்படுவதாகவும், அடுத்த கூட்டத்தின் போது முன்னேற்றம் அறிக்கையிடப்படுவதாகவும் கூறப்பட்டது.

04. தலைமை அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்கு காணி தேடப்படுகிறது என கூறப்பட்டது

05. தற்போது இவ்விடயங்களை தலைவர் அவர்களிடம் முன்வைத்துள்ளதுடன் சனாதிபதி செயலகத்துடன் கலந்துரையாடப்பட்டு இது தொடர்பான விபர அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதாக கூறப்பட்டது

06. கடனாளிகள் தொடர்பான விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2013.09.17 ஆந் திகதி கலந்துரையாடப்பட்ட பத்திரிக்கைகள்

**பத்திரிக்கை இலக்கம் 01**

ஆணைக்குழு அலுவலர்களின் பணிக்கொடை பணத்தை கணக்கிடுதல்

**தீர்மானம்**

இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பணிக்கொடை பணம் செலத்தல் தொடர்பாக தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பித்து தீர்மானமெடுத்தல் பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டது.

( பொறுப்பு - பணிப்பாளர் நிதியிடம் கையளிக்கப்பட்டது)

**பத்திரிக்கை இலக்கம் 02**

காணி உச்சஎல்லை பிரிவிற்கு ஏற்புடையதாக சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு ஆவணத் தகவல்களை வழங்குதல்

**தீர்மானம்**

நியதிச்சட்ட முறையிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்வராத உரிமையாளர்களை அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பாக ஆணைக்குழு பத்திரிக்கையை சமர்ப்பித்து குறித்த கோவைகளை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ மூடிவிடுவதற்கு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும் படி பரிந்துரை செய்யப்பட்டது.

**பத்திரிக்கை இலக்கம் 02**

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கை

**தீர்மானம்**

2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய மதிப்பீட்டின் வருமானம் தொடர்பாக குழுவின் அதிக கவனம் செலுத்தப்பட்டது. குத்தகை காணிகளை விற்பனை செய்தல், கையேற்புகளுக்கு ஏற்புடையதாக வருமானத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உள்ள படியால் அது முழு மொத்த மதிப்பீட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக கூறப்பட்டது. அதன் படி அவ்விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர்களுடன்

கலந்துரையாடப்பட்டு திருத்தங்கள் தேவைப்படுமாயின் திருத்தங்களுடன் அனுமதிக்காக ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தலை பரிந்துரை செய்கின்றேன்.

ஏனைய விடயங்கள்

01. விசேடமாக வருமானம் கிடைக்கப்பெறுதல் தொடர்பாக மாவட்ட பணிப்பாளர்களுடன் மாதாந்தம் கலந்துரையாடுதல் அத்தியாவசியமானதென கணக்காய்வு குழு அவதானிக்கின்றது.

02. திறைசேரி அலுவலரால் பீஈடீ.'.2.'.2013 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மீது கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2013.10.08 ஆந் திகதி பி.ப.2.30 இற்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

……………………………. ……………………………………

தலைவர் செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.எம்.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| திரு.செனரத் வனிகதுங்க | | | |
| திருமதி. ÿயாமலி இரத்நாயக்க | | | |
| திரு.ஜே.டப்ளியூ.ஹப்புஆராச்சி | | | |
| திரு. குமுது தர்மபிரிய | | | |

**<u>2013.11.06 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான 03 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

வருகை

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 05. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | செயலாளர் |
| 06. | திரு.செனரத் வனிகதுங்க | - | |
| 07. | திருமதி. ீயாமலி இரத்நாயக்க | | |
| 08. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | | |
| 09. | திரு.குமுது தர்மப்பிரிய | | |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவின் கலந்துரையாடலுக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2013.06.11 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

01. ை. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிப்படுத்தப்படாமையால் நட்டஈடு செலுத்துவதற்கு முடியாமை

உரிய அறிக்கை பணிப்பளாரால் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் படி 104 கோவைகள் தொடர்பான விபரங்கள் ஆவணப்படுத்தியதுடன், 2013.11.05 ஆந் திகதி சட்ட ஆலோசகரிடம் முன்வைத்து பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த பரிந்துரைகளை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் படி சட்ட ஆலோசகரிடம் வழங்கியுள்ள இறுதி பரிந்துரை அதாவது, மூன்று வாரங்களுக்குள் காணிகளை அடையாளம்கண்டு, உரிமைகளை கூறுகின்ற எவரொருவரும் தொடர்பாக விபர அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு, அறிவிக்கும்

படி மாவட்ட பணிப்பாளரிடம், மற்றும் பணிப்பாளிடம் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) ஆலோசனை வழங்கப்பட்டது.

02. மாவட்ட அலுவலகங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பல்வேறு வருமானங்களை விருத்தி செய்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்

இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பிரேரணையை அடுத்த குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி செயலாளர், பணிப்பாளர், முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி மற்றும் பணிப்பாளர், காணி உச்ச எல்லை ஆகியோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்தின் பொருட்டு மாதமொன்றுக்கு ரூபா. 330000 வீட்டு வாடகை செலுத்த நேரிட்டுள்ளதால் புதிய கட்டிடத்தை நிருமாணித்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்

காணி தேடப்படுகிறது

03 காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கமைவாக முகாமைத்துவ சேவை திணைக்களம் 307 பதவிகளை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மிதி ஆளனியை அங்கீகரித்தக்கொள்ளுதல் தொடர்பாக கலந்துரையாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படி ஊழியர்கள் அனைவரையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், சம்பளம் தயாரிப்பதற்கு பணியாற்றப்பட்டுள்ளது.

தற்போது பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

04. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக சேர்மத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வருமானத்தை அதிகரித்தக் கொள்வதற்காக வழங்கியுள்ள வாகனங்களின் பேணல் நடவடிக்கைகளின் பொருட்டு அதிக பணம் செலவாதல், கடந்த காலப்பகுதியில் நடைபெற்ற வாகன விபத்துகள், வாகன தரிப்பிடங்கள் மற்றும் வாகனங்களின் தனிப்பட்ட உபயோகம் என்பன தொடர்பாக கலந்துரையாடுதல்

இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து அடுத்த குழு கூட்டத்தில் விடயங்களை முன் வைப்பதற்கு பணிப்பாளர் முகாமைத்துவம் மற்றும் மனிதவள அவிவிருத்தியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது

இது தொடர்பாக வாகனங்களின் பேணல் தொடர்பான தொழில்நுட்ப அறிவுள்ள அரச அலுவலரிடம் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்குள்ள ஆற்றலை ஆராய்ந்து

பரிந்துரை அல்லது ஆணைக்குழு பத்திரிக்கை சமர்ப்பிக்கும் படி பணிப்பாளர், முகாமைத்துவம் மற்றும் மனிதவள அவிவிருத்தியிடம் அறிவிக்கப்பட்டது.

07. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடனாளிகள் தொடர்பாக அரச நிறுவனங்கள் மற்றம் தனியார் நிறுவனங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய சட்டத்துடனான நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுதல்

ஆவணம் தயாரிக்கப்படுகிறது

08 ஏனைய விடயங்கள்

சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் நாயகம், அரச நிதி கொள்கைகள் மற்றும் திட்டமிடல் திணைக்களத்திடம் 2013.10.01 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் அக் கடிதம் பணிப்பாளர் நாயகம், அரச வியாபார திணைக்களத்திடம் அனுப்பி வைக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டது. (பணிப்பாளர்.∴நிதி)

ை. மேலும் இக் கடிதத்தில் உரிய பணிக்காக அனுமதி கோரப்பட்டுள்ளதால், அவ்வாறு நிதி முதலீடு செய்த தேவையினை குறிப்பிட்டு ஒவ்வொரு முதலீட்டுக்கும் வெவ்வேறாக பெற்றுக்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## <u>2013.11.06. அந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானங்கள்</u>

01. **மாவட்ட அலுவலகங்களை கணக்காய்வு செய்தல்**

தற்போது இது தொடர்பாக உள்ள சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதுடன். அதனை செயற்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளதாக அறிய வருகின்றது. இது தொடர்பாக பூரண அறிக்கை சமர்ப்பிக்கும் படி பிரதான உள்ளக கண்க்காய்வாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பின்னர் அடுத்த குழுகூட்டத்தில் கவனத்தில் கொள்வதற்காக.

02. **இலக்குபடுத்திய வருமானங்களை தேடுதல்**

இந்த சந்தர்ப்பத்தில் பணிப்பாளர்.∴வருமானத்தால் அறிக்கை சமர்ப்பித்து முழுமொத்த வரி தொடர்பான கடிதக்கோவைகள் 290 உள்ளதெனவும், அதில் தற்போது 202 இல் மட்டும் வரி அறவிடுவதாகவும் 88 இற்கு தற்போது வரி அறவிடப்படுவதில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வரி உடன்படிக்கையில் உள்ள குறைப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் படி அவ்விடயங்களை உள்ளடக்கி ஆணைக்குழு பத்திரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரைகளும் அனுமதியும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானமாகியது.

**03. சட்ட செலவுகளை குறைத்தல்**

சட்ட அலுவலர்களுடன் அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**04. இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் தயாரித்தல்**

இது தொடர்பாக திறைசேரியின் பிரதிநிதியால் வேறு நிறுவனமொன்றின் இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் என்பவற்றின் மாதிரி புத்தகமொன்றை சமர்ப்பித்ததுடன், அதன் படி அதனை கற்கையிட்டு தேவையான விடயங்களை மட்டும் பயன்படுத்தி தயாரிக்கும் படி பணிப்பாளர் முகாமைத்துவம் மற்றும் மனிதவள அபிவிருத்தியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

**08. ஏனைய விடயங்கள்**

- ஆணைக்குழுவின் செயலாளர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயலாளராதல் வேண்டுமென திறைசேரியின் பிரதிநிதியால் சுட்டிக்காட்டப்பட்டது.

- அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் சட்டப்பிரிவு மற்றும் உறுதிப்பிரிவு என்பவற்றில் பணிப்பாளர் தேவையென வலியுறுத்தப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வரி உடன்படிக்கையில் உள்ள குறைப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் படி விடயங்களை உள்ளடக்கி ஆணைக்குழு பத்திரிக்கை சமர்ப்பித்து பரிந்துரைகள் மற்றும் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு தீர்மானமாகியது.

அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2013.12.19 ஆந் திகதி பி.ப.2.30 இற்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| ……………………………. | …………………………………… |
| தலைவர் | செயலாளர் |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு |

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.எம்.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| திரு.செனரத் வனிகதுங்க | | | |
| திருமதி. ீயாமலி இரத்நாயக்க | | | |
| திரு.ஜே.டப்ளியூ.ஹப்புஆராச்சி | | | |
| திரு. குமுது தர்மபிரிய | | | |

## 2013.12.19 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 04 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை

வரவு

01. திரு.டபிள்யூ.சேனாரத்ன - தலைவர்

02. திரு.ஏ.எஸ்.வீரசிங்க - உறுப்பினர்

03. திருமதி.எம்.அனோமா நந்தனி - உறுப்பினர்

04. திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ - அவதானிப்பாளர்

05. திரு.ரீ.நரேந்திரநாதன் - உறுப்பினர்

06. திரு.செனரத் வனிகதுங்க

07. திருமதி. ியாமலி இரத்நாயக்க

08. திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி

09. திருமதி.குசும் ஹேரத்

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 2013.06.11 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

01. கைாணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிப்படுத்தப்படாமையால் நட்டஈடு செலுத்தவதற்கு முடியாமை.

தற்போது இதற்கான கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை மிக விரைவாக மாவட்ட பணிப்பாளரிடம் அனுப்பி பதில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பணிப்பாளரிடம் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) அறிவிக்கப்பட்டது

ை. நட்டஈடுக்குப் பதிலாக மாற்று காணிகளை கோருதல் -

சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மீண்டும் கடிதம் அனுப்பியுள்ளதுடன், அதற்கு 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கப்பெறாவிட்டால் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆணைக்குழு பத்திரம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானமாகியது.

iii. பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாமை

தற்போது ஆணைக்குழு பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

iv வெளிப்படுத்துநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நட்டஈட்டு அளிப்பு கடிதத்திற்கு அனுமதி வழங்கப்படாமை மற்றும் வவுச்சர்களில் கையொப்பமிட்டு கையளிக்கப்படாமை -

தேவையில்லை

v ஏனைய விடயங்கள் - கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 26

இந்தக் கடிதக்கோவைகளின் எண்ணிக்கைக்கு ஏற்புடையதாக அதிகளவிலான கோவைகளில் நட்டஈட்டு தொகைக்குப் பதிலாக மாற்று காணிகளை கோரியிருந்ததால் காணி உச்சஎல்லை பிரிவிடம் அனுப்பிவைக்கப்பட்ட கோவைகள் தொடர்பாக, காணி உச்ச எல்லை பிரிவில் உசாவி உள்ளதுடன் அதற்காக விரைவில் பதில் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி பணிப்பாளரிடம் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) ஆலோசனை வழங்கப்பட்டது.

vi. வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டு நட்டஈடு தீர்மானிப்பதற்காக பணிகள் மேற்கொள்கின்ற கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 200 ஆகும்.

இந்தக் கடிதக்கோவைகளில் குறித்துரைக்கப்பட்ட கோவைகளை முடிவுறுத்த அவ்வப்போது ஆணைக்குழு பத்திரிக்கை மூலம் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) ஆலோசனை வழங்கினார்.

vii. நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தில் பிரிவு 29 இன் கீழ் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்குள்ள கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 670

தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேற்பார்வை செய்து இந்த நடவடிக்கைகளை முடிவுறுத்தும் படி பணிப்பாளரிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

02. வெட் வரி பதிவு செய்தல் மற்றும் எதிர் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடல்

மீண்டும் நினைவூட்டல் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது

03. மாவட்ட செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் பல்வேறு வருமானங்களை விருத்தி செய்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்.

உரிய அறிக்கையை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி உள்ளக கணக்காய்வாளரிடம் அறிவிக்கப்பட்டது.

04. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக மாதமொன்றுக்கு ரூபா.330000.ஃஸ்ரீ வீட்டு வாடகை செலுத்த வேண்டியுள்ளதுடன் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்

இது தொடர்பாக மேலும் பணியாற்றும் படி பணிப்பாளர் நாயத்திடம் கூறப்பட்டது.

05. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு திட்டங்களுக்கமைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 307 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மீதி ஆளனியை அங்கீகரித்துக்கொள்ளுதல் தொடர்பாக கலந்துரையாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படி ஊழியர்கள் அனைவரையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு சம்பளம் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

06. காணி சிர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக சேர்மத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வருமானம் அதிகரிப்பதற்காக வழங்கிய வாகனங்கள் ஆகியவற்றின் பேணுதல் நடவடிக்கைகளுக்கு அதிக பணம் செலவாகின்றதெனவும், கடந்த காலகட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகள் தொடர்பாகவும், வாகனங்களை நிறுத்தி வைத்தல், வாகனங்களின் தனிப்பட்ட பயன்பாடு தொடர்பாக கலந்துரையாடுதல்.

ஆணைக்குழு பத்திரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் (முகாமைத்துவம் மற்றும் மனிதவளங்கள்) கூறினார்

07. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடனாளிகள் தொடர்பாக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய சட்டத்துடனான நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுதல்.

பதிவேடொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

**2013.09.17 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு உட்படுத்திய பத்திரங்கள்**

01. ஆணைக்குழு அலுவலர்களின் பணிக்கொடை தொகையை கணக்கிடுதல்

02. காணி உச்ச எல்லை பிரிவுக்கு ஏற்புடையதாக சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு ஆவணத் தகவல்களை வழங்குதல்

பணிப்பாளர்.ஃ.காணி உச்ச எல்லை பிரிவிடம் விசாரித்து பணியாற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

03. 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கை

தற்போது 08 மாவட்ட அலுவலகங்களில் பணிகளை மேற்கொண்டுள்ளதாக, பிரதான உள்ளக கணக்காய்வாளரால் அறிவிக்கப்பட்டது. குறித்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்புவதற்கு அறிவிக்கப்பட்டது.

**2013.11.06 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானங்கள்**

**01. மாவட்ட அலுவலகங்களை கணக்காய்வு செய்தல்**

தற்போது 08 மாவட்ட செயலகங்களின் பணிகள் மேற்கொண்டுள்ளதாக பிரதான உள்ளக கணக்காய்வாளரால் அறிவிக்கப்பட்டது. குறித்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்புவதற்கு அறிவிக்கப்பட்டது.

02. **இலக்குபடுத்திய வருமானங்களை தேடுதல்**

இவ் விடயங்களை பணிப்பாளர்.ஃ.வருமானத்திடம் சமர்ப்பித்து அடுத்த அறிக்கையை செயலாளரிடம் முன் வைக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

03. **சட்டச் செலவுகளை குறைத்தல்**

இவ் விடயங்கள் தொடர்பாக பதில் கடமையாற்றும் சட்டப் பணிப்பாளரால் விரிவான விடயங்களை முன்வைக்கப்பட்டது. மேலும் விடயங்களை முன் வைப்பதற்கு அடுத்த குழுவில் சமர்ப்பிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

**04. இணைந்த திட்டத்தையும் நடைமுறை திட்டத்தையும் தயார்படுத்தல்**

**2013.12.19 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய பத்திரங்கள்**

01. **2012.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுதல்**

இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டாலும் நிறுவனக் கட்டமைப்பை மேலும் முறைப்படுத்திக் கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை அந்தந்தப் பிரிவுகளிடம் வழங்குவதற்கு பணியாற்றும் படி பணிப்பாளர் நாயகத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

அதன் படி அவ்வாறு அறிவுறுத்தி மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பாக ஆணைக்குழு பத்திரமொன்றை தயாரித்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும் படி பணிப்பாளர் நாயகத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

**ஏனைய விடயங்கள்**

திறைசேரி அரச வியாபார சுற்றுநிருப இலக்கம் 55 இன் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை நியமனம் செய்கின்ற போது, குழுவின் கடமைப்பொறுப்புகள் தொடர்பாக குறித்துரைத்து ஆணைக்குழுவிடம் அறிவிக்க வேண்டுமென செயலாளரிடம் அறிவிக்கப்பட்டது.

……………………………. ……………………………….

தலைவர் — செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு — கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.எம்.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| கலாநிதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | | | |
| திரு.ரீ.நரேந்திரநாதன் | | | |
| திருமதி. ீயாமலி இரத்நாயக்க | | | |
| திருமதி.குசும் ஹேரத் | | | |

**<u>2014.06.02 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 01 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

வரவு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 05. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | உறுப்பினர் |
| 06. | கலாநிதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | |
| 07. | திரு.செனரத் வனிகதுங்க | - | செயலாளர் |
| 08. | திருமதி. ரியாமலி இரத்நாயக்க | | |
| 09. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | | |
| 10. | திருமதி.குசும் ஹேரத் | | |